

ரவுடிகளை அடக்கிறம் எண்டு சொல்லிப் போட்டு இவையள் தான் இப்பரவுடிகள் பாருங்கோ...


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 308 | வள்ளுவர் ஆண்டு 2047 | புரட்டாதி 13, வியாழக்கிழமை 29.09.2016


# வடக்கில் வறட்சி; 8000 பேர் பாதிப்பு

*மேலும் அதிகரிக்கும் அபாயம்*

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 29

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக 2 ஆயிரத்து 454 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 661 பேர் பாதிக்கப்பட் டுள்ளதாக இடர் முகாமைத்துவ நடுவண் நிலையம் தெரிவித்தது. இந்த நிலை நீடிக்குமாயின் மக்கள் அதிகளவில் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது என்றும் அந்த நிலையம் சுட்டிக்காட்டியது.

நாடு முழுவதிலும் ஒரு லட்சத்து 56 ஆயிரம் பேர் வரையில் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் >> 23ஆம் பக்கம்

## இலங்கையில் மார்பகப் புற்றுநோய்க்கு முதன்முறையாக அறுவைச் சிகிச்சை

கொழும்பு, செப்.29

மார்பகப் புற்றுநோய்க்கான முதலாவது அறுவைச் சிகிச்சை நேற்றுப் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்டதாக மகரகம புற்றுநோய் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் கனிஷ்க டி சில்வா அறிவித்தார்.

5 வயதுடைய சிறுமிக்கே இந்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டதுடன், இது >> 24ஆம் பக்கம்



## நடுவீதியில் சாரதியை இரும்புச் சங்கிலியால் தாக்கிய பொலிஸ்

### கிளிநொச்சியில் நேற்றுப் பயங்கரம்

யாழ்ப்பாணம், செப். 29

பொலிஸாருக்கு எதிராக உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுவரும் நிலையில், கிளிநொச்சியில் நடு வீதியில் வைத்து சாரதி ஒருவரைப் பொலிஸார் இரும்புச் சங்கிலியால் தாக்கித் தலையில் படுகாயம் ஏற்படுத்தி >> 23ஆம் பக்கம்

## வடக்கில் 241 ஆசிரியர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், செப். 29

2016ஆம் ஆண்டில் கல்வியியல் கல்லூரியில் இருந்து வெளியேறும் 241 ஆசிரியர்களுக்கு வடக்கு மாகாணத்தில் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்தார்.

இந்த ஆண்டு கல்வியியல் கல்லூரிகளில் இருந்து வெளியேறும் ஆசிரியர் >> 23ஆம் பக்கம்

### வடக்கு- கிழக்கு இணைப்பை எதிர்க்கும்

## அமைச்சர் ரிசாத்தின் நிலைப்பாடு முஸ்லிம்கள் அனைவரதும் கருத்தல்ல

*ஏற்கனவே ஒப்பந்தம் இருக்கிறது என்கிறார் சுமந்திரன் எம்.பி.*

யாழ்ப்பாணம், செப். 29

வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்த கருத்து ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் கருத்து அல்ல. முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தலைவர் அஷ்ரபின் காலத்தில், தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பான எழுத்து மூலமான ஒப்புதல்கள் கூட ஏற்படுத்தப்பட்டன. அவை இன்றும் செல்லுபடியாகும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கில் முன்னிலையாகிய பின்னர், நீதிமன்றத்துக்கு வெளியே செய்தி >> 23ஆம் பக்கம்

## ஐ.நாவின் நிலைப்பாட்டில் எந்தவொரு மாற்றமுமில்லையாம்

நியூயோர்க், செப்.29

ஐ.நாவின் இலங்கை தொடர்பிலான நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் கிடையாது என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்தார்.

பல்வேறு ஊடக அறிக்கைகளில் இலங்கை தொடர்பிலான நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டது. ஐ. நா. எவ்வாறு இலங்கை பற்றி கருதுகின்றது என்பது பற்றி அறிக்கை விடுவதற்கு எவருக்கும் >> 24ஆம் பக்கம்

### விக்கியின் ஊர்வலத்தின் எதிர்வினை எகிறுகிறது

## சிங்கள இனச் சுத்திகரிப்பு இங்கு நடக்கிறதாம்

கொழும்பு, செப்.29

வடக்கில் புத்தர் சிலைகளை அகற்றுமாறு விக்னேஸ்வரன் தலைமையில் யாழ்ப்பாணத்தில் ஊர்வலம் நடத்தப்பட்டது. சிங்கள மக்கள் குடியேற வேண்டாம் என்று அதில் தெரிவிக்கப்பட்டது. இவை சிங்கள இனச் சுத்திகரிப்பாகும். இதுவொரு பாசிசவாத வெளிப்பாடாகும்.

இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற >> 23ஆம் பக்கம்

## பிரபாகரனின் அப்பாச்சியாக விக்கினேஸ்வரன் முயற்சி

*இப்படிக் கூக்குரலிடுகிறார் எஸ்.பி.திஸாநாயக்க*

கொழும்பு, செப்.29

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் லொக்கு அப்பாச்சியாக இருக்க வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆசைப்படுகின்றார் என்று சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

அண்மையில் >> 23ஆம் பக்கம்

## மகிந்தவின் இனவாதத்துக்கு போசணையூட்டும் விக்கி

*ரில்வின் சில்வா காட்டம்*

கொழும்பு, செப். 29

விக்கினேஸ்வரன் போன்ற நன்கு கற்றவர்கள், நாட்டின் சட்டம் என்னவென்பதை அறிந்தவர்கள் இவ்வாறு அடிமட்ட நிலையில் இறங்கி, இனவாதிகளுடன் கைகோர்ப்பது நாட்டின் சூழலுக்கு உகந்ததொன்றல்ல. வடக்கில் விக்னேஸ்வரன் செயற்படும் விதம் தெற்கில் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட இனவாதிகளுக்கு போசணையூட்டும் வகையில் அமைந்துள்ளது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் செயலர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் >> 23ஆம் பக்கம்

## கிழக்கை வடக்குடன் ஒருபோதுமே பலவந்தமாக இணைக்க முடியாது

*ஐ.தே.கட்சி எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, செப்.29

கிழக்கு மாகாணத்தை வடக்குடன் பலவந்தமாக இணைக்க முடியாது. அவ்வாறு இணைப்பதாயின் கிழக்கு மாகாண மக்களின் விருப்பை அறிந்து கொள்வதற்காக பொது வாக்கெடுப்பை நடத்த வேண்டும்.

இவ்வாறு கோருகிறார் கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்.

கிழக்கு மாகாண மக்கள் வடக்கு - கிழக்கு இணைப்பை ஒருபோதும் விரும்பமாட்டார்கள். >> 24ஆம் பக்கம்

## பலாலி விமானத் தள அபிவிருத்திக்கு டில்லியிடம் உதவி கோருகிறது அரசு

கொழும்பு, செப். 29

பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்திய அரசின் உதவியை இலங்கை அரசு கோரியுள்ளதாக பன்னாட்டு வர்த்தக மற்றும் மூலோபாய அபிவிருத்தி அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்தார்.

கொழும்பு வந்துள்ள இந்திய நடுவண் அரசின் வர்த்தக இணை அமைச்சர் நிர்மலா சீதாராமனுடன் இணைந்து கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இலங்கையில் இந்தியா பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொண்டுள்ளது. பலாலி விமான நிலைய அபிவிருத்தி தொடர்பாக அமைச்சரவை இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்குள் முடிவு ஒன்றை எடுக்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக >> 24ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடந்தது கட்சிகளுக்கு ஆதரவு திரட்டும் ஊர்வலம் தனித்து சிவில் சமூகம் நடத்தியிருந்தால் ஆதரித்திருப்போம்

## சரவணபவன் எம்.பி. பருத்தித்துறையில் தெரிவிப்பு

அரசியல் பதவிக் கதிரைகளுக்காக மக்களை அணிதிரட்டும் ஊர்வலமே கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டது. சிவில் சமூகம், மக்களின் பிரச்சினைகளை வெளிக் கொண்டு வரும் வகையில் ஊர்வலத்தை நடத்தியிருந்தால் நாங்கள் அவர்களுக்குப் பேராதரவை வழங்கியிருப்போம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் நிதி ஒதுக்கீட்டில் மக்களுக்கான உதவித் திட்டங் கள் வழங்கும் நிகழ்வு, பருதித்துறை மற்றும் கரவெட்டி பிரதேச செயலகங்களில் நேற்று இடம்பெற்றன. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த முயற்சி நடந்து கொண்டிருக்கின்றது. இதனால் நாம் பொறுமையை கூடுதலான வரையில் கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்றோம். நாடாளுமன்றத்திற்கு புதிய அரசமைப்பு வரைவு விரைவில் சமர்பிக்கப்பட இருக்கின்றது. அதனை எதிர்பார்த்திருக்கின்றோம்.

தமிழ் மக்களது பாதை ஒவ்வொரு கட்டமாக நகர்ந்து வந்திருக்கின்றது. ஆரம்ப காலத்தில் சாத்வீகப் போராட்டம் நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தின் போதும் எமது கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா தாக்கப்பட்டார். சாத்வீகப் போராட்டம் மறைந்து ஆயுதப் போராட்டம் பரிணமித்தது. ஆயுதப் போராட்டத்தின் போதும் அவர் தாக்குதலுக்கு இலக்கானார்.

இப்போது நடப்பது இராஜதந்திரப் போராட்டம். 60 வருட காலம் போராடிய நாம், இராஜதந்திரப் போராட்டத்தின் வெற்றிக்காக சில காலம் பொறுமையாக இருக்கக் கூடாதா ? ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நேரம் இருக்கின்றது. அந்தத் தருணங்கள் வரும்போதுதான் அவை வெற்றி பெறும்.

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறவில்லை என்பதற்காக ஊர்வலங்கள் நடத்தக் கூடாது. அன்றைய ஊர்வலத்தில் அரசியல்வாதிகள்தான் மேடையில் இருந்தார்கள். சிவில் சமூகத்தை காணவில்லை. சிவில் சமூகம் மக்கள் நலன்களை மாத்திரம் முன்னிறுத்தி ஊர்வலத்தை நடத்தியிருந்தால், எங்களது பேராதரவு அவர்களுக்கு கிடைத்திருக்கும். சிவில் சமூகம், சிவில் சமூகமாகச் செயற்பட வேண்டும். அப்படிச் செயறபட்டால் அவர்களுக்கு சக்லிரிடமிருந்தும் பேராதரவு கிடைக்கும்.

சில விடயங்களைச் சொல்ல வேண்டும் என்று எண்ணியிருந்தேன். அதனைப் பொருத்தமான மண்ணில் நின்று கொண்டுதான் சொல்லியிருக்கின்றேன் - என்றார்.

(வ-5-109)



# யாழ். நகர் நடைபாதை வியாபாரிகள் கடைகளைப் பூட்டிப் போராட்டம்

## இட ஒதுக்கீட்டை வலியுறுத்தி

நடைபாதை வியாபார நடவடிக்கைகளை யாழ். நகரில் ஓரிடத்தில் மேற்கொள்வதற்கு இடம் ஒதுக்கப்படவேண்டும். இதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, யாழ். நகரிலுள்ள நடைபாதை வியாபாரிகள் நேற்றுக் காலை தமது கடைகளைப் பூட்டிப் போராட்டம் நடத்தினர்.

'நடைபாதை வியாபாரிகளுக்கான அங்காடி யாழ். நகரத்தில் விரைவில் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது' என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்தார்.

'முனீஸ்வரன் வீதியில் நடைபாதை வியாபாரத்துக்காக 55 நபர்களுக்கு இடங்கள் வழங்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக யாழ். நகரிலுள்ள கடைகள் முன்னால் வைத்தும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். அத்துடன் இந்த இடத்தை விட பிறிதொரு இடத்திலும் நடைபாதை வியாபாரிகளுக்கு இடம் வழங்கப்பட்டது. இதனால் எமது வியாபாரத்தில் படுவீழ்ச்சி ஏற்பட்டது. நடைபாதை வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் ஒரே இடத்தில் இருந்தால்தான் வியாபாரத்தை நடத்த முடியும்.

எனவே நகரத்தில் ஒரு இடத்தில் நடைபாதை வியாபாரிகளுக்கு இடம் வழங்கப்பட வேண்டும். இதனை வலியுறுத்தியே நாம் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம்' என்று நடைபாதை வியாபாரிகளில் ஒருவரான எஸ்.சந்திரகுமார் தெரிவித்தார்.

'நடைபாதை வியாபாரிகளுக்கு அங்காடி அமைத்து வழங்குவது தொடர்பான திட்டம் உள்ளது. உதாரணத்துக்கு கொழும்பு குணசிங்கபுரத்தில் அமைத்துக் கொடுக்கப்பட்டதைப் போன்று நடைபாதை வியாபாரிகளுக்கு இங்கும் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதன் ஊடாக வீதியோரங்களில் அமைக்கப்பட்டுள்ள நடைபாதைக் கடைகளினால் ஏற்படும் போக்குவரத்து இடையூறுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். நடுவண் பேருந்து நிலையத்துக்கு கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள அரச காணியில்தான் அங்காடி அமைக்கப்படவுள்ளது' என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். (வ-5-ரி7)

# நல்லூரில் ஞாயிறன்று பன்னாட்டு அஹிம்சா தினம்

பிரபல பேச்சாளர் பேராசிரியர் கலாநிதி திருமதி ஜெயந்தஸ்ரீ பாலகிருஸ்ணன் தலைமை விருந்தினராகக் கலந்து கொள்ளும் பன்னாட்டு அஹிம்சா தினம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதி காலை 9.30 மணிக்கு நல்லூர் துக்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கலைஞர்களின் சிறப்புக்கலை நிகழ்வுகளும், பேராசிரியர் கலாநிதி திருமதி ஜெயந்தஸ்ரீ பாலகிருஸ்ணனின் பேருரையும் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வினை யாழ். இந்தியத் துணைத்தூதரகமும் அகில இலங்கை காந்திசேவா சங்கத்தினரும் இணைந்து நடாத்துக்கின்றனர். (வ- ரி7)

# சாவகச்சேரியில் இன்று ஏழிசை மாலை இசை நிகழ்ச்சி

சாவகச்சேரி, செப். 29

தென்மராட்சி கல்வி வலய இசையாசிரியர்கள்மற்றும்மாணவர்கள் இணைந்து சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் அனுசரணையுடன்வழங்கும் 'ஏழிசை மாலை' இல.16 நிகழ்வு இன்று பி.ப. 2.30 மணி தொடக்கம் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் திருமதி ல.முகுந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக விலங்கியற்றுறைத் தலைவர் கலாநிதி திருமதி இ.ஞானேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இசைத்துறை விரிவுரையாளர் கா.குகபரனும், கௌரவ விருந்தினராக கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் திருமதி ரு.இராஜரத்தினமும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி இசையாசிரியை திருமதி சுபத்திராதேவி ஸ்ரீகந்தராசாவின் இசைக் கச்சேரியும் உசன் இராமநாதன் மகாவித்தியாலய மாணவர்களின் குழுப் பாடலும் தென்மராட்சி கல்வி வலயத்தின் தமிழ் மரபுக் கலாலய மாணவர்களின் மிருதங்க இசையும், கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை மாணவர்களின் குழுப் பாடலும் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி இசையாசிரியைகளான திருமதி மதிலோஜினி லோகீசன், திருமதி வரதஜெனனி தேவராஜன், திருமதி துஷ்யந்தி சிவகரன் ஆகியோரின் கூட்டிசையும் இடம்பெறும்.

இசை நிகழ்வுகளுக்கு அணிசேர் கலைஞர்களாக மிருதங்கம் - யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி லயஞான கலாநிதி மகேந்திரன் வயலின் - சுருதிஞான திலகம் அ.ஜெயராமன் ஆகியோரும் கலந்து கொள்வர். (வ - 9)

## தீ விபத்தால் பாதிப்பு

# கிளி. சந்தை வர்த்தகர்களுக்கு 25,000 ரூபா உதவுதொகை

கிளிநொச்சி, செப். 29

கிளிநொச்சி பொதுச்சந்தையில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு முதற்கட்டமாக தலா 25 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு மீள்குடியேற்ற அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே தெரிவித்தார்.

கிளிநொச்சி பொதுச்சந்தையில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களை நேற்றுமுன்தினம் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மீள்குயேற்ற அமைச்சின் செயலாளரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடினேன். இதன்போது அமைச்சின் செயலாளர் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு முதற்கட்டமாக தலா 25 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையினால் 45 தற்காலிகக் கடைகளை அமைப்பதற்கு 9 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. இதை விட பாதிக்கப்பட்ட வர்த்தகர்களின் வங்கிக் கடன்களை ஒருவருட காலத்திற்கு நிறுத்தி வைப்பதற்கு வங்கிகளுடன் பேச்சு மேற்கொள்கின்றேன் என்று வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

இந்தச்சந்திப்பின்போது கிளிநொச்சி மாவட்டச்செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன், கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளர் கம்சநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மற்றும் கிளிநொச்சி பொதுச்சந்தை வர்த்தகர்கள் கலந்துகொண்டனர்.

(வ-21)

# யாழ். போதனா வைத்தியசாலை விரிவாக்கத்துக்கு காணி தேவை

## பணிப்பாளர் கோரிக்கை

யாழ். போதனா வைத்தியசாலையை மேலும் விரிவுபடுத்துவதற்காக, வைத்தியசாலைக்கு அருகிலுள்ள இரண்டு காணித் துண்டுகளைப் பெற்றுத் தருமாறு, யாழ். மாவட்ட இணைத் தலைவர்களிடம், போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி கோரிக்கை விடுத்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்படி கோரிக்கையை இணைத் தலைவர்களிடம் முன்வைத்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையின் விரிவாக்கத்துக்குக் காணிகள் தேவைப்படுகின்றன. வைத்தியசாலையின் வடக்குப் பகுதியில் உள்ள காணியைப் பெற்றுத் தர வேண்டும். அந்தப் பகுதியில் புனர்வாழ்வு மருத்துவமனை உருவாக்கத்திட்டமிடப்பட்டுள்ளது. இதேபோன்ற வைத்தியசாலையின் மேற்குப் பகுதியில் உள்ள காணி வழங்கப்பட்டால், வைத்தியசாலை சதுக்கம் அதில் அமைக்க முடியும்.

வைத்தியசாலை சதுக்கம் அமைப்பதன் ஊடாக, வைத்தியசாலைக்கு நோயாளர்கள் - பார்வையாளர்கள் நெரிசலின்றி வருவதற்கு முடியும். இந்தக் காணிகளை வைத்தியசாலைக்குப் பெற்றுத் தருவதற்கு, இணைத் தலைவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

(வ-5-ரி1-ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் அறியும் உரிமையை சகலரும் அனுபவிக்க வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

ஜனநாயகம், சுதந்திரம், மனித உரிமைகள் உள்ளிட்ட அனைத்து அம்சங்களையும் போசித்து பாதுகாக்கும் நாடென்ற வகையில் தகவல் அறியும் உரிமையானது நாட்டின் அனைத்துப் பிரிவினரும் அனுபவிக்கும் வகையில் இருக்க வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பன்னாட்டுத் தகவல் அறியும் தினத்தை முன்னிட்டு கொழும்பு ஜெய்க் ஹில்ரன் ஹோட்டலில் நேற்று ஆரம்பமான மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனமேற்கண்டவாறுகூறினார்.

தகவல் அறிந்து கொள்ளும் உரிமையைச் சமூகத்தின் அடிப்படை உரிமை உறுதிப்படுத்துதல் தொடர்பாக நீண்ட காலமாக அரசியல் மேடைகளிலும், சிவில் அமைப்புக்களாலும், பொதுமக்களிடையேயும் விவாதிக்கப்பட்டிருந்த போதிலும், கடந்தகால அரசுகள் நிறைவேற்றத் தவறிய அந்தச் செயற்பாட்டை தற்போதய அரசினால் நிறைவேற்ற முடிந்திருக்கிறது.

அரச செலவினங்களுக்காக பொது மக்களின் நிதியைப் பயன்படுத்தும் போதும், அதனை முகாமைத்துவம் செய்யும்போதும் ஏற்படும் முறைகேடான பயன்பாடுகள் மற்றும் தவறான நிதி முகாமைத்துவம் காரணமாக நாட்டு மக்களுக்கு ஏற்படும் அநீதி மற்றும் நாட்டின் முன்நோக்கிய பயணத்துக்கு ஏற்படும் தடைகளும் தகவல் அறிந்துகொள்ளும் உரிமையைச் சமூகத்தின் அடிப்படை உரிமையாக உறுதிப்படுத்தப்படுத்துவதால் நீங்கிவிடும்.

ஊடக சுதந்திரச் சட்டம், அரசமைப்பு, உரிமைகள் ஆகியன எவ்வளவுதான் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், இன்று பெரும்பாலன ஊடகங்கள் அவற்றின் உரிமையாளர்களினதும் முகாமைத்துவத்தினதும் விருப்பு வெறுப்புகளுக்கமையவே செயற்படுகின்றன. ஊடக சுதந்திர உரிமைகளுக்கான வாய்ப்புக்களை வழங்குவது அரசியல்வாதிகளின் பொறுப்பாகும். அரச அலுவலர்கள் அதனை முறைமைப்படுத்துவதுடன் நாட்டு மக்களின் நலனுக்காக ஊடக சுதந்திரத்தைப் பயன்படுத்துவது அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களினதும் பொறுப்பாகும்.

அரசு சாரா நிறுவனங்கள் பற்றிய தகவல் அறியும் உரிமையை உறுதிப்படுத்த வேண்டும். பெரும்பாலான அரசு சார்பற்ற நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்ட விடயங்களுக்குப் புறம்பாக செயற்படுவது உலகின் பல அரசுகளின் இருப்புக்குச் சவாலாக அமைந்திருக்கிறது என்று ஜனாதிபதி தெரிவித்தார். (வ-5)

# தயா மாஸ்டர் மீதான வழக்கின் குற்றப்பத்திரம் சட்டவலுவற்றது

## வவுனியா மேல் நீதிமன்றில் சட்டத்தரணி சுமந்திரன் சுட்டிக்காட்டு

தயாமாஸ்ரருக்கு எதிரான வழக்கில், மன்றில் சமர்ப்பிக்கப்பட்ட குற்றப்பத்திரத்தின் தமிழ்மொழி மூலத்தில், குற்றம் (7ஈ) என்ற பிரிவில் அவர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். ஆனால் அது சட்ட வலுவற்றது. ஆனால் சிங்களத்தில் உள்ள குற்றப்பத்திரிகைதான் சரியானது என்று அரச தரப்பு சட்டத்தரணி வாதிட்டார். வடக்கு கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றமொழி ஆகத் தமிழ்மொழி அரசியலமைப்புச் சட்டத்தின் 16ஆவது திருத்தத்தின் கீழ் உள்ளது என்று சுட்டிக்காட்டியதால், குற்றப்பத்திரிகையை திருத்துவதாக வும் அரச சட்டத்தரணி தெரிவித்தார். எனினும் அதைத் திருத்த முற்படும் போது, நாங்கள் ஆட்சேபனையை முன்வைப்போம்.

இவ்வாறு சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் ஊடக இணைப்பாளர் தயா மாஸ்ரர் என்றழைக்கப்படும் வேலாயுதம் தயா நிதிக்கு எதிரான வழக்கு வவுனியா மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. வவுனியா மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டு பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் கடந்த மாதம் கைதுசெய்துசெய்யப்பட்டுபிணையில் விடுவிக்கப்பட்ட தயா மாஸ்ரர் கடந்த 6ஆம் திகதி வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன் முன்னிலையில் விசாரணைக்காக முன்னிலையாகினார்.

கடந்த தவணையின்போது தயா மாஸ்டர் சார்பில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், 'பயங்கரவாதம் மற்றும் குறிப்பிட்ட பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் எனத் தெரிவித்து 2006 ஆம் ஆண்டு டிசெம்பர் 6 ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள விதிமுறைகளில் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு தயா மாஸ்ரர் என்றழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதிக்கு எதிராக இந்த வழக்கு மன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பிலான இந்த விதிமுறைகள் வெளியிடப்பட்ட போதே, அவைகள் மனித உரிமைக்குமாறானது, சாதாரண நீதிக்கு விரோதமானது எனத் தெரிவித்து பல அமைப்புக்களும் அனைத்துலக மனித உரிமை அமைப்புக்களும் பலத்த எதிர்ப்பை வெளியிட்டிருந்தன.

சில படங்களைப் பிரசுரிப்பது, பயங்கரவாதத்துடன் தொடர் புடையவர்களுடன் தொடர்பு வைத்திருப்பது, சட்டத்தரணி கள் மற்றும் கட்சிகளுடன் தொடர்பு கொள்வது போன்ற செயற்பாடுகள் குற்றச் செயல்களாக அந்த விதிமுறைகளில் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. ஐ.நா நிபுணர்குழுவினர் கூட, இது பாரதூரமான விளைவு களை ஏற்படுத்தவல்லது என்று தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்கள். இந்த விதிமுறைகளை நடைமுறைப் படுத்தக் கூடாது. அவற்றை விலக்கிக் கொள்ளவேண்டும் என்று பரவலாகக் குரல் எழுப்பப் பட்டிருந்தது.

இதனால் இந்த விதிமுறைகளைப் பயன்படுத்தி வழக்குத் தாக்கல் செய்யமாட்டோம் என விதி முறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்த வர்களுக்கும், ஊடகங்களுக்கும் அப்போதைய அரசு உறுதியளித்திருந்தது. இத்தகைய விதிமுறைகளின் கீழ் தயாமாஸ்ரருக்கு எதிராக இந்த வழக்கில் தொடுக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு சட்ட வலுவற்றது என முதல் நிலையில் நீதிமன்றத்தில் முன்வைத்து வாதிடுவதற் காகவே நான் இந்த வழக்கில் முன்னிலையாகியுள்ளேன்' என்று தெரிவித்திருந்தார். இந்த நிலையில், நேற்று வழக்கு விசாரணைக்காக எடுத்து கொள்ளப்பட்டபோது தயாமாஸ்ர் சார்பில் மன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்தனதுவாதத்தைமுன்வைத்து குறித்த குற்றச்சாட்டு சட்வலுவற்றது என்று தெரிவித்திருந்தார். இதனை அடுத்து அதுதொடர்பான சட்ட மேற்கோள்களோடு எழுத்துமூலமான சமர்ப்பணத்தைச் செய்யுமாறுகூறிய மேல் நீதிமன்ற நீதிபதி எதிர்வரும் நவம்பர் 18 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார். (வ-4,21)

கடைகள் வாடகைக்கு
யாழ். நகரின் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இரண்டு கடைகள் (15' x 26') வாடகைக்கு விடப்படும். தனியாகவும், சேர்த்தும்
076 668 8206

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2804 திகதி 28.09.2016
08 21 37 69 P 04 ரூ. 40,354,775/-

CIMA UK புலமைப்பரிசில்
CIMA-UK நிறுவனம் வறிய மாணவர்களும் கற்கைநெறியினை பயிலும் வகையில் மிகப்பெரும் புலமைப்பரிசிலினை வழங்குகின்றது. இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பதிவுக்கட்டணம், 2 வருடத்திற்கான வருடாந்தக்கட்டணம் என்பனவற்றை புலமைப்பரிசிலாக வழங்குகின்றது. இச்சந்தர்ப்பத்தில் வறிய மாணவர்களும் கல்வியைத் தொடரும் வகையில் யாழ் MCS நிறுவனம் கற்கைநெறிக்கான செலவில் 20000 ரூபாவினை கட்டணச்சலுகையாக வழங்குகின்றது. இதன் மூலம் கற்கை நெறியைப் பயிலும் மாணவர்கள் 90000 ரூபா வரையில் சேமிக்க முடியும். க.பொ.த பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் விண்ணப்பித்து பரீட்சையின் பின் பயில முடியும். விண்ணப்பிக்க விரும்புவோர் தமது முழுப்பெயர், பிறந்த திகதி முகவரி என்பவற்றை772395895 என்ற எண்ணிற்கு குறுந்தகவலாக அனுப்பி வைக்கவும். மேலதிக விவரங்களை MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
-இணைப்பாளர், CIMA கற்கை நெறி,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
பேராசிரியர் ப.கைலாசநாத குருக்கள் நினைவுப் பேருரை
"சிவாகம மரபில் திருக்கோயிற் பண்பாடு தொன்மையும் சமகால செல்நெறியும்"
பேருரை வழங்குனர் : கலாநிதி.ப.கோபாலகிருஸ்ண ஐயர்
வாழ்நாள் பேராசிரியர்,
முன்னாள் பீடாதிபதி,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
இடம் : கைலாசபதி கலையரங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
திகதி : 30.09.2016
நேரம் : பிற்பகல் 3.00 மணி
ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பதிவாளர்.

வீடு வாடகைக்கு தேவை
யாழ் மாநகரசபை எல்லைக்குள் வாகனத்தரிப்பிடத்துடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. கச்சேரி அண்டிய பகுதி விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 6722055

தவறிவிட்டது
அழகன் லோகேஸ்வரி அவர்களின் தேசிய அடையாள அட்டையும் (N.I.C. No - 837703514V) முக்கிய ஆவணங்களும் பருத்தித்துறை பஸ்சில் தவறிவிடப்பட்டது அதை கண்டெடுத்தவர்கள் 212,ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அல்லது 021 222 1280 எனும் தொ.பே.இல. தொடர்பு கொண்டு தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

Galaxy Star
வெற்றி வாரம் 096 திகதி 28.09.2016
03 08 44 46 49
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,650,700/-

### மரண அறிவித்தல்

**சுப்பிரமணியம் ரெட்ணசிங்கம்**

பாண்டியன் தாழ்வைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ரெட்ணசிங்கம் நேற்று (28.09.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

-அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு. தகவல்: குடும்பத்தினர்.

யாரிடம் பேசுவது?
மனதில் சுமையா?
வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா?
துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?
எம்முடன் மனம் விட்டுப் பேசுங்கள்.
உங்களை உள்ளவாறு ஏற்றுக்கொள்வோம். வெறுமையான புத்திமதிகள் சொல்ல மாட்டோம். உங்கள் பிரச்சினைகளை நீங்களே தீர்த்துக்கொள்ள உறுதுணையாக இருப்போம். எத்தனை மணித்தியாலங்கள், நாட்கள் வேண்டுமாயினும் உங்களுக்காக ஒதுக்குவோம். ரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.
யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் இயங்கும் இலவச சேவை. மத சார்பற்றது.
தொலைபேசியில் அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.
கை கொடுக்கும் நண்பர்கள்
104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
(021) 222 8117 / 077 900 8776
(தினமும் காலை 9.00 - 1.00)
வவுனியாவில்: (024) 324 4444
சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00
(Advt. sponsored by: Enlightenment Circle, UK (Saiva Munneta Sangam)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகுதி இருந்தும் பல்கலை. அனுமதி கிடைக்காதவர்கள் மேன்முறையீடு

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, செப். 29

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகக் கூடிய தகுதிகள் இருந்தும் அனுமதி கிடைக்காதவர்கள் மேன்முறையீடு செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டிருப்பதாகப் பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டீ சில்வா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

தகுதியுள்ள ஏராளமானவர்கள் பல் கலைக்கழகப் பிரவேசத்துக்கான விண்ணப்பப் பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது தவறுகள் செய்துள்ள துடன், பூரண விவரங்களைத் தரவும் தவறியுள்ளார்கள்.

மேலும் ஒருசாரார் பின்பற்ற விரும்பும் பாடநெறிகளுக்குப் போதுமான இசெட் புள்ளிகள் போதாமல் உள்ளன. எனினும், அவர்கள் பெற்றுள்ள இசெட் புள்ளி களுக்கு அமைவாக வேறு பாடநெறி களைப் பின்பற்ற விரும்பினால் அவர்கள் மேன்முறையீடு செய்யலாம்.

பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலைச் சரியாக வாசித்து விளங்கிக் கொள்ளாததாலேயே இத்தகைய தவறுகள் பெரும்பாலும் நடந்துள்ளன. ஒவ்வொரு பாடநெறிக்குமான யுனிகோர்ட் தரப்பட்டுள்ளது. அதற்கேற்ப மாணவர்கள் தங்களுக்குப் பொருத்தமான துறையைத் தேர்ந்தெடுக்கலாம். எனினும், பலர் ஓரிரண்டு துறைகளை மாத்திரம் தங்களது விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதால் அவர்களுக்கு ஏனைய துறைகளில் வாய்ப்புப் பெறமுடியாமல் போகிறது.

மேலும் ஒருசாரார் விண்ணப்பப்பத் திரங்களைப் பூர்த்திசெய்யும்போது மிகவும் உதாசீனமாக நடந்துகொண் டிருக்கிறார்கள். முக்கிய தேவையான விண்ணப்பதாரியின் கையொப்பம் இல் லாமல் சுமார் 2 ஆயிரம் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாமல் ஒதுக்கிவைக்கப் பட்டுள்ளன.

அவ்வாறான விண்ணப்பதாரிகளுக்கு தொலைபேசிகள் மூலம் அழைப்பு விடுத்து ஆணைக்குழு காரியாலயத்துக்கு வரவழைக்க வேண்டியுள்ளது.

எவ்வாறாயினும் மேற்கூறிய தவறுகளைச் செய்திருக்கும் சகல விண்ணப்பதாரிகளும் மேன்முறையீடுகளைச் செய்தால் அவை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என பேராசிரியர் மொஹான் டீ சில்வா உறுதியளித்தார். (த)

**காணி விற்பனைக்கு உண்டு**

பெரியவிளான் ¼ kmருக்கு அருகில் உள்ள தெல்லிப்பழை வீதியில் மெயின்றோட் அருகில் வற்றாத வெட்டுக் கிணற்றுடன் 40 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பகுதியாகவும் விற்கப்படும்.

தொடர்புகளுக்கு
ம.அருளப்பு- 077 945 9186

**உதிரிப்பாகங்களுடன் கூடிய கடை வாடகைக்கு**

வவுனியாவில் பிரபல்யமான இடத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் முச்சக்கரவண்டி உதிரிப்பாக விற்பனை நிலையம், இருக்கும் உதிரிப்பாகங்களுடன் கடையும் வாடகைக்கு முற்பணமின்றிக் கொடுக்கப்படும். அனுபவமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

071 538 9570

This project is funded by:

European Union

Habitat for Humanity Sri Lanka

Habitat for Humanity Sri Lanka is a Christian Non Governmental Organization that began its activities in 1995. With a vision of a world where everyone has a decent place to live, Habitat for Humanity Sri Lanka's mission is to provide simple, decent and affordable housing to families in need.

**Tender Notice for office space - Mullaitivu**

Habitat for Humanity Sri Lanka is seeking a suitable space to be used as office (preferably a house) in Mullativu district to implement a housing project funded by European Union (Grant # DCI-ASIE/2015 /369-395) with the following requirements.

- Within 2km radius from Mullaitivu or Mulliyawalai or Puthukkudiyiruppu town.
- Minimum 5 to 6 rooms (each not less than 120sqft in area), larger hall to be used for conferences (not less than 250sqft), kitchen and attached washrooms.
- Easy access to main road.
- Proper water source with over head tank and water network facilities
- Separate electricity with meter (preferred 3 phase )
- Separate exit / entrance
- Parking space for 3 to 4 vehicles (minimum)

Interested parties could collect the application forms from Habitat for Humanity District office, 27, Krishnan Kovil Road, Kilinochchi , or Planning Division of District Secretariat, Mullaitivu or below address. Completed bids should be forwarded to the following address on or before 03rd October 2016 by registered post.

National Director
Habitat for Humanity Sri Lanka,
42/14 Ananda Coomaraswamy Mawatha,
Colombo 03, Sri Lanka.
For further details: 021-2283290, 0772320957, 0772348543

# போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு அதிபர் நியமனம் வழங்குவதற்கு அனுமதி

கொழும்பு, செப். 29

2015ஆம் ஆண்டு தரம் மூன்றுக்கான அதிபர் சேவையில் இணைத்துக் கொள்ளும் நோக்கில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர் களை அதிபர்களாக நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள தாகக் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

இந்தப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 3901 பேர் அதிபர்களாக நியமிக்கப்பட வுள்ளனர். தரம் மூன்றுக்கான அதிபர் சேவைக்காகப் பத்து ஆண்டுகளின் பின்னர் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது.

இந்தப் போட்டிப் பரீட்சைக்காக 21,000 பேர் விண்ணப்பம் செய்திருந்தனர். இதில் 19,000 பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

போட்டிப் பரீட்சையின் ஊடாக 3,858 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அரச சேவை ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய மேலும் 43 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு எப்போது அதிபர் நியமனம் வழங்கப்படும் என்ற உறுதியான திகதிகளை அமைச்சர் அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(த)

# இலங்கையின் கடன் சுமையைக் குறைக்க நான்கு நாடுகள் உதவி

கொழும்பு, செப். 29

இலங்கையின் கடன் சுமையைக் குறைப் பதற்கு உதவுவதாக உலக நாடுகள் சில உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ள தாக நிதிமையச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளே பிரதானமாக நாட்டின் கடன் சுமையைக் குறைப்பதற்கு உதவியளிப்பது தொடர்பில் உறுதியளித் துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அந்தந்த நாடுகளின் தூதுவர்களுடனான கலந்துரையாடலின்போது இது தொடர்பிலான உறுதிமொழியை அவர் கள் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

நாட்டின் தற்போதைய கடன் தொகை 8,500 பில்லியன் ரூபா எனவும், இதில் 42 வீதம் வெளிநாட்டுக் கடன் எனவும் குறிப்பிட்டுள்ள அமைச்சர், இந்தக் கடனை மீளச் செலுத்துவது தொடர்பில் இந்தக் கலந்துரையாடலின்போது அவதானம் செலுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார் (த)

**காணி விற்பனைக்கு**

பழைய பூங்கா வீதி சுண்டுக்குளியில் 2 பரப்புக் காணி கிணறு, புதிய மதில்கள் புதிய 2 சோடி கேற்றுடன் விற்பனைக்குண்டு

தொ.பே. 077 923 5508
பிற்பகல் 2 மணிக்கு பின்னர் தொடர்புகொள்ளவும்

**வாகனம் வாடகைக்கு உண்டு**

TATA SUPERACE வாகனம் ஒப்பந்த அடிப்படையில் சாரதியுடன் வாடகைக்கு வழங்கப்படும். நிறுவனங்கள், தனியார் விரும்பத்தக்கது.

077 921 3835

**வீடு வளவு விற்பனைக்கு**

A9 வீதிக்கு அண்மையில் எல்லா வசதிகளும் கூடிய இடத்தில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் பழைய பொலிஸ் நிலைய ஒழுங்கையில் நல்லமாடி " மாளிகை வீடு " விற்பனைக்குண்டு. 10 அறைகள், 2குளியலறை, வற்றாத கிணறும் விற்பனைக் குண்டு. மிகவும் பாதுகாப்பான உறுதியான குளிர்மையான வீடு மாமரம், பலாமரம் நிறைந்தவை International School, Hotel மற்றும் நிறுவனங்கள் நடத்தக்கூடிய நல்லராசியான வீடு Lawyers, Doctors களுக்கு உகந்தது. இதற்கு அண்மையில் 50 பரப்பு குடியிருப்புக் காணி சுற்றிவர Carpet Road மின்சார வசதியுடன் கூடிய காணியும் விற்பனைக்குண்டு. பலவிதமான தொழிற்சாலைகள், பண்ணைகள் வைப்பதற்கு உகந்தது.

077 559 6054/ 077 615 0651

# மது, புகையிலை வரி வருமானம் 1,191 கோடி ரூபாவால் அதிகரிப்பு

கொழும்பு, செப். 29

இந்த வருடத்தின் முதல் அரையாண்டுக் காலப்பகுதியில் மதுபானம் மற்றும் புகையிலை வரி வருமானம் 1191.1 கோடி ரூபாவால் அதிகரித்திருப்பதாக நிதிய மைச்சு வெளியிட்டுள்ள அரச நிதி நிலமை பற்றிய அரையாண்டு அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் 2015ஆம் அரையாண் டுக் காலப்பகுதியில் மதுபான வரி வரு மானம் முன்னைய ஆண்டை (2014) விட 25.9 வீதத்தாலும், புகையிலை வரி வருமானம் 12.8 வீதத்தாலும் அதி கரித்துள்ளன.

அத்துடன், இதே காலப்பகுதியில் பெற்றோலியப் பொருள்களால் கிடைத்த வருமானம் 1722.1 கோடியால் அதிகரித்து வாகனவரிகளின் வருமானம் 59 43.3 கோடிக்கு வீழ்ச்சியடைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

25 YEARS OF SERVICE EXCELLENCE 1991-2016

**செய்மதி தொலைக்காட்சி சேவை**
(Direct to Home)

BIG SALE

டிஷ் அன்டெனா மூலம் (Digital SD/ HD) தரத்தில் இடையூறு அற்ற முறையில் குறைந்த கட்டணத்தில் (ரூபா 400/- தொடக்கம்) உங்கள் விருப்பம் போல் டிவி சனல்களை கண்டுகளிக்க கூடிய செட் 1 வருட உத்தரவாதத்துடன்*




Rs.2750/-*

SATS-TECH ENGINEERS
NO. 298 K.K.S.ROAD JAFFNA. PH:- 021 222 8812. Hotline : 0777710785

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கியும், வாசுவும் இணைந்து இனவாதச் சதி செய்கின்றனர்

## நலீன் பண்டார எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 29

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்கியும் அவரது சம்பந்தி வாசுதேவவும் இரவு வேளைகளில் ஒன்றாகக் கோப்பி அருந்தி இனவாதச் சதி செய்கின்றனர்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலீன் பண்டார குற்றம் சுமத்தினார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

V2 + U = O என்பதன் மூலம் இனவாதத்தைப் பரப்பும் சிலரை அறிந்து கொள்ள முடியும். V2 என்பது விக்னேஸ்வரன் மற்றும் வாசுதேவ. U என்பது உதய கம்மன்பில. அவற்றின் கூட்டுத் தொகை O.

விக்னேஸ்வரனின் இனவாதப் பேச்சை ஐக்கிய தேசியக் கட்சி முற்றாகக் கண்டிக்கின்றது. விக்னேஸ்வரன் என்பவர் வாசுதேவவின் சம்பந்தி. வடக்கின் முதலமைச்சராகி கொழும்பில் இருக்கும் விக்னேஸ்வரன் இரவு நேரங்களில் வாசுதேவவுடன் ஒன்றாக கோப்பி அருந்திக் கொண்டு இனவாதச் சதி செய்கின்றார்.

இவர்கள் இருவரும் இணைந்து வடக்கிலும் தெற்கிலும் இனவாதத்தைத் தூண்டுவதற்கு சதி செய்கின்றனர். கூட்டு எதிர்க்கட்சிக் கும்பல் கரைசேருவதற்கு இனவாதம் அல்லாமல் வேறு வழி கள் இல்லை. அத்துடன் ஒரு போதும் தற்போதைய அரசு முழந்தாளிடப் போவதில்லை என்றார். (ற-5)

# மீண்டும் போருக்கு மக்களை அழைத்துச் செல்கிறார் விக்கி

## ஜாதிக உறுமய கட்சி தெரிவிப்பு

கொழும்பு, செப். 29

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தமிழ் மக்களை மீளவும் போருக்கு வழி நடத்திச் செல்கின்றார்.

இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தேசிய அமைப்பாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

விக்னேஸ்வரன் தமிழ் மக்களை மீளவும் நந்திக் கடலுக்குள் தள்ளி விடுகின்றார். விக்னேஸ்வரன் தமிழ் மக்களை போரில் மூழ்கடிக்கப் பார்க்கின்றார். தமிழ் மக்களின் கனவு வடக்கின் அபிவிருத்தியாகும். முதலமைச்சர் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். புத்திஜீவியான விக்னேஸ்வரனின் செயற்பாடுகள் வருத்தமளிக்கும் வகையில் அமைந்துள்ளன.

விக்னேஸ்வரனின் செயற்பாடுகளை நாம் கண்டிக்கின்றோம். ஊர்வலம் ஊடாக தமிழ் மக்களை அவர் எங்கு அழைத்துச் செல்கின்றார். வடக்கில் வாழ்ந்து வந்த 21 ஆயிரம் சிங்கள மக்களுக்கு என்னவாயிற்று?. வடக்கிலிருந்து சிங்கள, முஸ்லிம் மக்கள் விரட்டியடிக்கப்பட்டனர் - என்றார். (ற-5)

# அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க செய்தியாளருடன் விவாதம்

## ஆத்திர மிகுதியில் கமராவைத் தாக்கினார்

கொழும்பு, செப்.29

பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கும் செய்தியாளர் ஒருவருக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க செய்தியாளரின் வீடியோ கமராவை தாக்கியுள்ளார்.

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் விவகாரம் தொடர்பில் விளக்கமளிப்பதற்காக நேற்று முன்தினம் மாலை தனது வீட்டில் செய்தியாளர் சந்திப்பை ரஞ்சன் ராமநாயக்க ஏற்பாடு செய்திருந்தார்.

செய்தியாளர் மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் செய்தியாளர்கள் சிலர், லசந்த ஆயுதம் ஒன்றால் பலமாகத் தாக்கப்பட்டே உயிரிழந்திருந்தார். இது யாவரும் அறிந்த விடயம். தற்போது அவருடைய சடலத்தைத் தோண்டியெடுப்பது தேவையற்ற விடயமாகும்.- என்று குறிப்பிட்டனர்.

சற்றுக் கோபமடைந்த அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க - லசந்த என்பவர் யார்? அவர் ஒரு செய்தியாளர். நீங்கள் செய்தியாளர்களாக இருந்துகொண்டு இப்படிக் கதைக்கின்றீர்களே. நீங்கள் எல்லோரும் நல்ல செய்தியாளர்கள். இந்த விடயத்தை மறந்து விடுங்கள்.

ஏன் லசந்தவைப் பற்றி எந்த நேரமும் கதைத்துக் கொண்டிருக்கின்றீர்கள்? அவர் ஒரு டெப்லொயிட் செய்தியாளர் தானே. அவரை மறந்து விடுங்கள் என கோத்தபாய ராஜபக்ச சொன்னது போன்று நாமும் மறந்து விடுவோம். இலங்கையில் உள்ள செய்தியாளர்களின் தன்மை இதுதான் - என்றார்.

செய்தியாளர் ஒருவர் : அமைச்சரே நாங்கள் யாராவது லசந்த தாக்கப்பட்டு கொலை செய்யப்படவில்லை என்று கூறினோமா?.- என்றார்.

அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க : லசந்த என்னுடைய நெருக்கமான நண்பராவார். அவரை எட்டுத் தடவைகளுக்கு மேல் சந்தித்துள்ளேன். அவர் எனக்குப் பல தகவல்களை வழங்கியுள்ளார். அதேபோன்று நானும் அவருக்கு நாட்டில் நடந்த முக்கியமான ஊழல் செய்திகளை வழங்கியிருந்தேன்.



பத்திரிகை ஆசிரியர் ஒருவரின் திருமண நிகழ்வொன்று கொழும்பில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் நடைபெற்றது. இந்தத் திருமண நிகழ்வின் மொத்தச் செலவையும் மகிந்த ராஜபக்சவே ஏற்றுக் கொண்டார்.

மற்றுமொரு பத்திரிகையின் ஆசிரியர் தனது மகன் மற்றும் மகளை ஒக்ஸ்போட் பல்கலைக் கழகம் அருகில் அமைந்திருக்கும் மற்றுமொரு பிரபல பல்கலைக் கழகத்தில் சேர்த்தார்.

அவர்களின் பிள்ளைகளை பிரித்தானியாவில் உள்ள அனுர ஹேகொடவின் வீட்டில் தங்க வைத்தார். வீட்டு வாடகைப் பணமாக பல இலட்ச ரூபா பணத்தை வழங்கினார்.

இந்த விடயத்தை நான் லசந்தவுக்கு வழங்கினேன். பின்னர் அனுர ஹேகொட எனக்கு தொலைபேசி மூலம், பிள்ளைகளின் கல்வி சம்பந்தமான விடயம் என்பதால் இதனைப் பிரசுரிக்க வேண்டாம் என்றார். ஆனால் லசந்த இந்த விடயத்தைப் பத்திரிகையில் பிரசுரித்தார். குறித்த பத்திரிகை ஆசிரியர் இன்றுவரை என்னோடு கதைப்பதில்லை.

தற்போது லசந்தவின் சடலம் தோண்டியெடுக்கப்பட்டுள்ளது. நீங்கள் இந்தவிடயம் தொடர்பில் சரியான முறையில் செய்திகளை வெளியிட்டு உந்துதல் அளிக்கும் போது இந்த சம்பவத்துடன் தொடர்புடைய உயர்மட்டத்தில் உள்ள நபர்களைக் கைது செய்ய முடியும். நாம் எல்லோரும் கசிப்பு விற்பனை செய்யும் நபரைக் கைது செய்ய வந்த பொலிஸ் அதிகாரி மீது தாக்குதல் நடத்தும் சமூகமாக உள்ளோம் - என்றார்.

குறுக்கிட்ட செய்தியாளர் - பொலிஸ் அதிகாரி இலஞ்சம் வாங்குவதால் தாக்குதல் நடத்துகின்றார்களோ தெரியவில்லை- என்றார்.

அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க: உங்களைப் போன்ற செய்தியாளர்கள் இலஞ்சம் பெறுவது போன்றுதான்.- என்றார்.

செய்தியாளர் : என்னைக் காட்டி அவ்வாறு கூறாதீர்கள். நான் ஒருபோதும் இலஞ்சம் வாங்கியதில்லை.

அமைச்சர் : நீங்கள் இலஞ்சம் வாங்கவில்லை. ஆனால் பலரின் பெயர்ப் பட்டியல் எங்களிடம் உள்ளது.

செய்தியாளர்: இதே போன்று இலஞ்சம் வாங்கிய பல அரசியல்வாதிகளின் பெயர்கள் எங்களிடம் உள்ளன.

கடும் கோபமடைந்த அமைச்சர் : தம்பி என்னைத் திருடன் என்று சொல்கின்றீர்கள். எனக்கென்று சொந்த வீடு வாகனம் இல்லை. இன்னமும் வாடகை வீட்டில் தான் உள்ளேன். அரச வாகனத்தையே பாவிக்கின்றேன்.

அமைச்சர் கமராவைத் தாக்குகின்றார்.

நான் ஒருபோதும் திருட்டு வேலைகளை செய்ததும் இல்லை. கொள்ளையடித்ததும் இல்லை. எத்தனோல், போதைப்பொருள் கொண்டு வரவில்லை. தவறு எதனையும் செய்யாததால்தான் இவ்வளவு உறுதியாக நான் கதைக்கின்றேன். அதனால்தான் பயம் இல்லாமல் கதைக்கின்றேன். எனவே எனக்கு மரியாதை செலுத்த வேண்டும். மகிந்த ராஜபக்ச எனக்கு 50 கோடி ரூபா தருவதாகக் கூறி அவருக்கு ஆதரவு வழங்குமாறு கேட்டார். பணத்துக்கு அடிப்பணிந்து அங்கு செல்லவில்லை. பல தியாகங்களைச் செய்துதான் இந்த நிலைமையில் உள்ளேன்.

லசந்த என்னுடைய நண்பர் என்பதாலே நான் இந்த செய்தியாளர் மாநாட்டை ஆயத்தம் செய்தேன். திருட்டு வேலைகளைச் செய்த ஏனைய அரசியல்வாதிகளுக்கு நீங்கள் என்ன வேண்டுமென்றாலும் கூறுங்கள். எனக்கு அம்மா, அப்பா, பிள்ளைகள் என யாரும் இல்லை. யாருக்கும் கடன்காரனாக இல்லை. நான் எனக்கு விருப்பமான வகையில் தனிமையில் வாழ்ந்து வருகின்றேன் - என்று அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க இறுதியில் தெரிவித்தார். (ற-5)

# 16 கோடி ரூபா பெறுமதியான அதிசொகுசுக் கார் இறக்குமதி

## இலங்கை வரலாற்றில் முதன்முறையாக

கொழும்பு, செப் 29

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக அதிகூடிய பெறுமதியான 15 கோடியே 80 இலட்சம் ரூபா விலையுள்ள அதிசொகுசுக் காரொன்று இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகச் சுங்கத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பு, பஞ்சிகாவத்தைப் பகுதியைச் சேர்ந்த முன்னணி வர்த்தகர் ஒருவர் இந்த ரோல்ஸ் ரோய்ஸ் ரெய்த் ரகக் காரை இறக்குமதி செய்திருக்கிறார்.

பிரிட்டன் தயாரிப்பான இந்தக் காரின் தொழிற்சாலை விலை ஆறரைக் கோடி ரூபா எனவும், கப்பல் கட்டணம், சுங்கத் தீர்வை மற்றும் இதர வரிகளுடன் அதன் உள்நாட்டு விலை 15 கோடியே 80 இலட்சம் ரூபாவாகிறது எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (து)

# ஊழல் முறைப்பாடுகளில் கொழும்பு முன்னணியில்

## குறைந்த எண்ணிக்கை கிளிநொச்சியில்

கொழும்பு, செப் 29

கடந்த வருடத்தில் இலஞ்ச ஊழல்கள் தொடர்பாகக் கிடைத்திருக்கும் முறைப்பாடுகளில் கொழும்பு மாவட்டமே முன்னணியில் இருப்பதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்திலிருந்து மொத்தமாக 1,714 முறைப்பாடுகளும் ஏனைய 25 மாவட்டங்களிலிருந்து மொத்தமாக 3,813 முறைப்பாடுகளும் கிடைத்திருப்பதாகவும், கொழும்புக்கு அடுத்தபடியாக 274 முறைப்பாடுகளுடன் கண்டி இரண்டாவது இடத்தையும், 218 முறைப்பாடுகளுடன் குருநாகல் மூன்றாவது இடத்தையும் வகிப்பதாகவும், ஆகக்குறைந்த எண்ணிக்கையான நான்கு முறைப்பாடுகள் கிளிநொச்சியிலிருந்து கிடைத்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் **உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டம்** ஊடாக மஸ்கன் வீதி, புத்தூரில் பதினைந்து வீடுகளை அமைத்து நன்கொடையாக வழங்கிய

பொன்மனப்பேராளன்

**இராசையா குவேந்திரநாதன்**

அவர்களின் சேவையைக் கௌரவித்து இன்று (29.09.2016) வியாழக்கிழமை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி சமூகத்தால் நடத்தப்படும் கௌரவிப்பு விழா சிறப்பாக நடைபெற வாழ்த்துவதுடன் சமூகசேவையாளரின் கௌரவிப்பு விழாவை மேற்கொள்ளும் கல்வியியற்கல்லூரி சமூகத்தினரையும் வாழ்த்துகின்றோம்.

அன்புடன் வாழ்த்துவோர்:
கோண்டாவில் கிழக்கு
ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர்
சனசமூக நிலையத்தினரும்
குமரன் விளையாட்டுக் கழகத்தினரும்

(c.25448)
(13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் முதலீடுகளுக்கு இலங்கையில் பாதிப்பில்லை

கொழும்பு, செப்.29
சம்பூர் அனல் மின் திட்டம் நிறுத்தப்பட்டதால், இலங்கையில் இந்தியாவின் முதலீடுகள் பாதிக்கப்படாது என்றும், அடுத்த மூன்று, நான்கு ஆண்டுகளில் இலங்கையில் 2 பில்லியன் டொலர் முதலீடுகளை இந்தியா மேற்கொள்ளும் என்றும் இந்திய வர்த்தக இணை அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் தெரிவித்தார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர்–
இந்த முதலீடுகளில், திருகோணமலை எண்ணெய்க் குதங்களின் அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களும் உள்ளடங்கும்.
இந்தியாவின் உதவியுடன் சம்பூரில் அனல் மின் நிலையத்தை அமைக்கும் திட்டம் அண்மையில் கைவிடப்பட்டமையானது, இலங்கையில் இந்தியாவின் முதலீடுகளைப் பாதிக்காது. அனைத்துலக உடன்பாடுகளை மேற்கொள்ளும்போது, தேசியநலன்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய தேவையை நாம் எப்போதும் மதிக்கிறோம்.
கொச்சியில் இருந்து இயற்கை எரிவாயுவைப் பெறும் வகையில், அனல் மின் திட்டத்தை இயற்கை எரிவாயு மின் திட்டமாக மாற்றுவது குறித்து நம் கவனம்செலுத்துவோம் என்று தெரிவித்தார். (த)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**இராசேஸ்வரி இரத்தினசிங்கம்**



மலர்வு
24.03.1934
உதிர்வு
11.10.2015

இமைகள் மூடித்திறப்பதற்குள்
வருடம் ஒன்றாகி விட்டது
நாம் வாழும் நாள்களில்
உங்கள் நினைவுகள் எம்முடன் என்றென்றும்
வாழும் ..... வாழும்..... வாழும்

டச்சு வீதி,
உடுவில், சுன்னாகம்.
பிள்ளைகள்,
மருமக்கள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கந்தையா
**கருணாகரன்** (கருணை)



விழிப்பு
26.02.1939
உறக்கம்
12.10.2015

திதி: சஸ்திரஹத மஹாளயம்
சதுர்த்தசி (29.09.2016)

ஆண்டொன்று ஓடி மறைந்ததப்பா - நீங்கள்
எம்மிடம் விடைபெற்றுச் சென்று........
சென்றதெங்கே அப்பா நீங்கள்? - உங்கள்
கனிவான மொழிகளை நாம் இனி கேட்பதெப்போ அப்பா?
அமரராகி அணைந்து விட்ட கருணைத் தீபமே - எங்கள்
இதயங்களில் நீங்கள் என்றும் அணையாத
அமர தீபமே.......

பொற்கலம் தம்பை,
தெல்லிப்பழை.
(J.4923) (13.18)

உங்கள் பிரிவிலிருந்து மீளாத
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



## பதினாறாம் ஆண்டு நினைவலைகள்



மணமகிழ
05 . 11 . 1948
23 . 05 . 1975
கண் நெகிழ
26.09.2000



அமரர்
**கணபதிப்பிள்ளை யோகலிங்கம்**
திதி: சதுர்த்தசி(29.09.2016)
செல்வி
**தமிழரசி யோகலிங்கம்**

பாதியிலே எம்மைத் தவிக்கவிட்டு பரமன்தாள் சேர்ந்து
பதினாறுஆண்டுகள் சென்றதுவே !
படைத்தவன் செயலில் அழிப்பதும் அவன் பணியே
பசியாறப் புசிக்கின்றோம் பகல்இரவு காண்கின்றோம்
காலமும் கடுகதியில் சென்றதுவே !
தில்லைக்கூத்தன் திருவடியில் உங்கள் ஆத்மா
சாந்தி பெற வேண்டுகின்றோம் நாளெல்லாம்

சந்தை வீதி,
கொடிகாமம்.
குடும்பத்தினர்.



## ஏங்குகின்றோம் எட்டாண்டாய்



அன்னை மடியில்
1961 . 04 . 12
ஆண்டவன் அடியில்
2008 . 09 . 29

அமரர் உயர்திரு க.விக்னராஜேஸ்வரன்
B.Sc, P.G.D.E, I.S.A, SLPS
(நிக்கவெரட்டிய கல்வி வலயம்)

திதி: 2016.09.30

" எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்றசிவமே
என்னரசே யான்புகழும் இசையுமணிந்தருளே "

நாலிரண்டு ஆண்டுகள் சென்றதையா நடந்தது என்ன சொல்லுமையா
நாவறண்டு கதறுவதைக் கேளுமையா நானிலம் காண வாருமையா
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தெல்லிப்பழை.

பிரிவால் துயருறும்: அன்பு மனைவி
குடும்பத்தினர்.
3ஆம் வட்டாரம், நயினாதீவு.



## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சின்னக்குட்டி இரத்தினம்**

திதி: சதுர்த்தசி



எம்மோடு
18 . 10 . 1951
எமைவிட்டு
22 . 09 . 2014

எம் உயிர் அப்பாவே! வருடங்கள் இரண்டு ஆனதப்பா
ஆறவில்லை எம் மனசு தேடுகிறோம் உமை நாம்
ஓடி வந்திடப்பா உன் கடமைகள் முடிய முன்
காலன் அவன் எடுத்து விட்டான்
நாம் உமக்கு நிறைய கடமைகள் செய்யவேண்டிய நேரம்
நீ எம் கூட இல்லை அப்பா!
வலிக்குதப்பா எம் மனசு கதறுகிறேன் நான் கிடந்து--
வந்திடப்பா எம் அருகில் கட்டி அணைந்து முத்தம் தர
வந்திடப்பா ஓடி வா அப்பா - இல்லையேல்
என்னை உன்னிடம் எடுத்திடப்பா

கைதடி கிழக்கு, கைதடி.
077 639 1009

என்றும் உன் நினைவுகளுடன்
உனது மூத்தமகள் பிள்ளைகள்...
குடும்பத்தினர்.


## போதையில். சாரத்தியம் 9 பேருக்கு தண்டம்

மதுபோதையில் வாகனம் செலுத்திய 9 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்று ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. இருவரின் சாரத்திய அனுமதிப் பத்திரத்தை 6 மாதங்கள் தடுத்து வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.
சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுமுன்தினம்விசாரணைக்கு எடுக்கப்பட்டன.
வழக்குகளைத் தனித்தனியாக விசாரித்த நீதிவான், மதுபோதையில் ஆவணங்களின்றிவாகனம்செலுத்தியசாரதிக்கு 25 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் சாரத்திய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய மூவருக்கு தலா 12 ஆயிரம் ரூபா வீதமும், ஒருவருக்கு 13 ஆயிரம் ரூபாவும், இருவருக்கு 10 ஆயிரத்து 500 ரூபா வீதமும், இருவருக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதமும் தண்டம் விதித்தார்.
மதுபோதையில் வாகனம் செலுத்திய இருசாரதிகளின்சாரத்திய அனுமதிப் பத்திரங்களைஆறுமாதங்கள் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிட்டார்.
போக்குவரத்து விதிமுறைகளை மீறினர் என்று பொலிஸாரால் நேற்றுமுன்தினம் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டவர்கள், பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்யாததால் நீதிமன்றம் கலையும்வரை காத்திருந்து ஏமாற்றத்துடன் வீடு சென்றனர். கடந்த வாரம் வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரால் வீதிகளில் வாகனங்களில் சென்ற வேளையில் பிடிக்கப்பட்டு, நீதிமன்றுக்கு வருமாறு தெரிவிக்கப்பட்டவர்களே காத்திருந்து சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இனம் ஒற்றுமையாக வாழவே பலர் உயிர்த் தியாகங்கள் செய்தனர்

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் சுட்டிக்காட்டு




யாழ்ப்பாணம், செப். 29

எமது இனம் - மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதற்காக எத்தனையோ பேர் தமது கனவுகளோடு உயிர்த் தியாகங்களை செய்திருக்கின்றனர். நாம் அவர்களின் கனவுகளை நிறைவேற்றுவதற்கு அபிவிருத்தியுடன் நின்று விடாது கடந்த காலத்தில் கொடுக்கப்பட்ட உயிரிழப்புகளுக்கான அர்த்தங்கள் தேடப்பட வேண்டும்.

இவ்வாறுவடக்குமாகாணபோக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்கள், அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 100 பயனாளிகளில் முதற் கட்டமாக 45 பயனாளிகளுக்கான, அவர்கள் தெரிவு செய்த வாழ்வாதாரத் திட்டங்களான பசு மாடுகள் கொள்வனவுக்கான காசோலைகள், ஆடு வளர்ப்புக்கான காசோலைகள், மரவேலை செய்வதற்கான இயந்திர உபகரணங்கள், இரும்பு ஒட்டு வேலைகள் செய்வதற்கான இயந்திர உபகரணங்கள், அலுமினிய வேலைகளுக்கான இயந்திர உபகரணங்கள், கடைகளுக்கான குளிர்சாதனப் பெட்டிகள், வாடகைப் பாத்திரங்கள், தோட்டச் செய்கை செய்வதற்கான நீர் இறைக்கும் இயந்திரங்கள், தையல் தொழிலை செய்கின்ற பயனாளிகளுக்கான தையல் இயந்திரங்கள் அவற்றுடன் தொடர்புடைய பொருள்கள் என வெவ்வேறு வாழ்வாதார உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண அமைச்சிலிருந்து நிதிகள் திரும்பிச் செல்கின்றன, நிதிகள் செலவழிக்கப்படாமல் இருக்கின்றன என்று ஊடகங்கள் வாயிலாக அறிவீர்கள். நாங்கள் ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றபொழுது எமது கைகளால் பணத்தைச் செலவு செய்வது கிடையாது. அதற்கெனக் கணக்காய்வு இருக்கின்றது. கணக்காளர் அதற்கான கூறுவிலை கோருவார். அதன் அடிப்படையில்தான் அவர்கள் அந்தத் திட்டங்களை மேற்கொள்வார்கள். பெருமளவில் கட்டுமானப் பணிகள் இடம்பெறுகின்றன. இந்தக் கட்டுமானப் பணிகளுக்கு என்று திணைக்களம் இருக்கின்றது. திணைக்களத்தினூடாகவே அத்தனை வேலைத் திட்டங்களையும் செய்யலாம்.

நாம் ஒப்பந்தகாரர்களுக்கு வேலை ஆரம்பிப்பதற்கு முன்னர் பணத்தைக் கொடுக்க முடியாது. அவர்கள் ஏற்கனவே வேலைகளை ஆரம்பித்திருப்பார்கள். அவர்கள் வேலைகளை முடிக்கின்ற பொழுதே, அதற்கான பணத்தை நாம் கொடுக்க முடியும். அது வரையான காலப்பகுதியில் பணம் வங்கியிலேயே இருக்கும். எமது வேலைகள் முடிவுறுகிறபொழுதே நாம் அந்தப் பணத்தை அவர்களுக்கு வழங்குகிறோம். இதனைச் சில பேர் நாம் ஏதோ அவசர அவசரமாக பணங்களை செலவழிக்கின்றோம் என்று கூறுகின்றனர். எம்மால் வழங்கப்படும் இவ்வாறான இலவச பொருள்களை நீங்கள் வாங்கிவிட்டு அப்படியே பாவிக்காமல் வைத்திருந்தால்கூட அது தொடர்பில் நாம் நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. அனைத்துப் பயனாளிகளும் தமக்குக் கிடைக்கின்ற பொருள்களையும் உதவிகளையும் சரியான முறையில் பயன்படுத்தித் தமது வாழ்க்கைத்தரத்தை முன்னேற்ற வேண்டும் - என்றார்.

நிகழ்வில் இந்துமத குருக்கள், கத்தோலிக்க அருட்தந்தை, வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன், விவசாய கால்நடைகள் அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் பா.கஜதீபன் மற்றும் அ.பரஞ்சோதி, வலி. மேற்கு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் த.நடனேந்திரன், கிராம அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ற-5,ரி1)

## 10 கி.மீற்றர் வீதி சீரமைப்பு 6 கி.மீற்றராக குறைந்தது ஏன்?

### நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கேள்வி

60 மில்லியன் ரூபாவில் 10 கிலோ மீற்றர் வீதி சீரமைப்புக்காக சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நிதி ஒதுக்கப்பட்டது. வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அதனை 6 கிலோ மீற்றராக ஏன் குறைத்தனர்?.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கேள்வி எழுப்பினார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது. அதில் நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

2016 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் 60 மில்லியன் ரூபா நிதி, 10 கிலோ மீற்றர் வீதிப் புனரமைப்புக்காக ஒதுக்கப்பட்டது. அதற்கான கடிதங்கள் எமக்கு எழுத்து மூலம் தரப்பட்டன. அதனை வீதி அபிவிருத்தி அதிகார சபை 6 கிலோ மீற்றராக எவ்வாறு குறைத்தது?. அவ்வாறு குறைத்தமை தொடர்பில் ஏன் எமக்குத் தெரியப்படுத்தப்படவில்லை?. இந்த நிதிகளின் பிரகாரம் 10 கிலோ மீற்றர் வீதி வேலை இடம்பெறும் என்று மக்களிடம் கூறி நாம் காத்திருக்கின்றோம் - என்றார்.

அதற்குப் பதிலளித்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிநிதி, மேற்படி திட்டம் தொடர்பில் எமக்குக் கிடைத்த அறிவுறுத்தல் கடிதத்தின் பிரகாரம் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் 60 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும், அதன்படி அவர்களின் பரிந்துரை வீதிகளைச் செப் பனிடுமாறும் மட்டுமே எழுத்தில் வழங்கப்பட்டது. கிலோ மீற்றர் குறிப்பிடப்படவில்லை. தெற்கின் பெறுமதிக்குக் கணித்த பணத்தில் வடக்கில் மூலப் பொருள் பெற முடியாது. அதனால் இந்த நிதியில் 6 கிலோ மீற்றர் மட்டுமே செப்பனிட முடியும் - என்றார்.

(ற-5,10ி)

## மேய்ப்புப்பணி மாநாடு இன்று யாழில் ஆரம்பம்

### யாழ். ஆயர் தலைமையில்





யாழ்ப்பாணம், செப். 29

யாழ்.ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் அழைப்பில் "புதிதாய் வாழ்வோம்" என்னும் தலைப்பில் யாழ் மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி மாநாடு இன்று வியாழக்கிழமை முதல் ஒக்ரோபர் முதலாம் திகதி வரை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் கலாநிதி யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளாரின் நெறிப்படுத்தலில் இந்த மாநாடு இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

"புதிதாய் வாழ்வோம்" என்னும் தலைப்பில் செயலற்ற விசுவாசம் உயிரற்றது என்னும் கருப்பொருளில் இந்த மகாநாடு, நாங்கள் ஒரு இறைமக்கள் குழுமம் , நாங்கள் ஒரு வழிபடும் குழுமம் , நாங்கள் ஒரு சான்று பகரும் குழுமம் என்னும் 3 பிரிவுகளில் நடைபெறும்.

இன்று வியாழக்கிழமை முதல் நாள் நிகழ்வுக்குத் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மனுவல் ஆண்டகை சிறப்பு அதிதியாகக் கலந்து கொள்வார். நாங்கள் ஒரு இறைமக்கள் குழுமம் என்ற முதற் கருப்பொருள் இன்று அலசி ஆராயப்பட்டு, ஏற்கனவே தயாரிக்கப்பட்ட நிலைப்பாட்டு ஏடுகள் படிக்கப்பட்டு, அடுத்த 5 ஆண்டுக்கான திட்டங்கள் தீட்டப்படவுள்ளன.

(தி)

## பொதுக்கூட்டம்

வடமாகாண அரச நிர்மாண, நிர்மாணிகள் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிவாக சபைத்தேர்வும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார், சிறப்பு விருந்தினர்களாக இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை. சேனாதிராசா, அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

(ற-ரி1)

## வேலித் தூணை உடைத்தவருக்கு மறியல்

மிருசுவில் வடக்கில் உள்ள காணிக்குள் புகுந்து அங்கிருந்த வேலித் தூண்களை அடித்து நொறுக்கிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரை எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது. கொடிகாமம் பொலிஸாரால் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

(ற-5)

## மூத்த ஊடகவியலாளர் திருச்செல்வம் நேற்று யாழ்ப்பாணத்தில் காலமானார்

யாழ்ப்பாணம், செப்.29

மூத்த ஊடகவியலாளர் ஈ.ஆர். திருச்செல்வம் தனது 83 ஆவது வயதில் நேற்று நண்பகல் யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது வீட்டில் காலமானார்.

இவர் இலங்கையில் மதிக்கப்படும் மூத்த ஊடகவியலாளர்களுள் ஒருவராவார். கொல்கத்தா பல்கலைக்கழகத்தின் கலைப் பட்டதாரி. கல்வியியலிலும், அரங்கியலிலும் பட்டப் பின் டிப்ளோமா தகைமை பெற்றவர்.

அறுபதுகளின் ஆரம்பத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் இணைந்ததுடன் அவரது ஊடகப் பணி ஆரம்பித்தது. கண்டியிலிருந்து வெளியான 'செய்தி' பத்திரிகையின் கட்டுரையாளர். நல்ல வரவேற்பை எப்போதும் பெற்றிருந்த 'சிந்தாமணி' வார இதழின் பத்தி எழுத்தாளர். 'திசை' பத்திரிகையில் ஆசிரியபீட அலுவலர். ஈழநாதம் பத்திரிகையின் முத்த உதவி ஆசிரியர். யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஊடகவியல் கற்கைநெறியின் பிரதான விரிவுரையாளர். அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக ஊடகத்துறையில் அவர் ஆற்றிய பொறுப்புக்கள் பலப்பல.

யாழ்.. மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர், கால் நூற்றாண்டு காலம் ஆசிரியராக கல்வித்துறைக்கும் அரும்பணியாற்றியவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த ஆசிரியர்களுள் ஒருவர்.

அவர் எழுதிய "இதழியல் அடிப்படைகள்" என்ற ஊடக வழிகாட்டி நூல் அண்மையில் வெளியிடப்பட்டிருந்தது.

இவரின் இறுதிக்கிரியைகள் யாழ்ப்பாணம் ஆசீர்வாதம் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும். பூதவுடல் யாழ்ப்பாணம் சென்.மேரிஸ் தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதி ஆராதனையின் பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

(ற-ரி1)

## தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசரக் கலந்துரையாடல் நாளை

வடமாகாண தொண்டர்ராசிரியர்களுக்கான அவசரக் கலந்துரையாடல்ஒன்று கிளிநொச்சியில் நாளை நடைபெறவுள்ளது. ஆசிரிய சேவையில் உள்வாங்கப்பட்டு, பெயர் விவரங்கள் வெளியான அனைத்துத்தொண்டராசிரியர்களும் அதில் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்று வடமாகாண தொண்டராசிரியர் சங்கத் தலைவர் ஜெயராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

கலந்துரையாடல் காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள தனியார் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆசிரிய சேவையில் உள்வாங்கப்பட்ட தொண்டராசிரியர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும். முக்கியமான தீர்மானங்களை எடுக்க உள்ளமையால் தவறாது சமுகம்தந்து தங்கள் வரவை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுகொள்கின்றேன். வருகை தராத தொண்டராசிரியர்கள் நியமனம் தொடர்பில் சங்கம் எந்தவித பொறுப்பும் கூறமாட்டாது - என்று சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டார்.

(ற-ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டங்களை கிடப்பில் போட்டுவிட்டு கூட்டத்தில் காரணங்கள் கூறாதீர்கள்

## அதிகாரிகளைக் கடிந்து கொண்டார் யாழ். மாவட்டச் செயலர்

யாழ்ப்பாணம், செப்.29
திட்டங்களை நடைமுறைப்படுத்தாது, நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பில் தெரியப்படுத்தாது இருந்துவிட்டு, திட்டம் ஏன் முடிக்கவில்லை என்று கேட்டால் மட்டும் காரணம் கூறி அதிகாரிகள் தப்பிக்க நினைக்கக் கூடாது.
இவ்வாறு அதிகாரிகளைக்கடிந்து கொண்டார். யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன்.
யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாவட்டச் செயலகத்தில் நடத்தப்பட்டது. வீதி அபிவிருத்தி அதிகார சபையால் நடப்பு ஆண்டில் அனுமதிக்கப்பட்ட ஆயிரத்து 573 மில்லியன் ரூபாவில் இரு திட்டங்கள் நடைமுறைப்படுத்த வேண்டிய நிலையில், ஓர் திட்டம் மாத்திரமே நடைமுறையாக்கப்படுகின்றது. மற்றைய திட்டம் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.
நடப்பு ஆண்டின் ஒன்பதாவது மாத இறுதியில்கூடத்திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை ஏன்? என்று கேள்விகூட்டத்தில்எழுப்பப்பட்டது.
எமது அமைச்சுக்குரிய நிதி ஒதுக்கீடு என்றால், அனுமதி கிடைத்தவுடன் அதனை ஆரம்பித்திருப்போம். இந்த வேலைத் திட்டம் மீள்குடியேற்ற அமைச்சுக்கு உரியது. அதற்கான அனுமதி கிடைக்கவில்லை - என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிநிதி தெரிவித்தார்.
அது தவறான கருத்து. திட்டத்துக்கு அனுமதிக்கப்பட்ட தொகையில் இந்த ஆண்டில் 150 மில்லியன் ரூபா வேலைத் திட்டமே மேற்கொள்ள முடியும் என்று நீங்கள் கூறியதற்கமைய, 150 மில்லியன் ரூபா அனுமதிக்கப்படுகின்றது என்ற கடிதம் எம்மால் எழுத்தில் தரப்பட்டுள்ளது - என்று மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டினார்.
கடித அனுமதி மட்டும் வேலையை ஆரம்பிக்க போதாது என்று - வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்தனர்.
இவ்வாறான நடைமுறைப் பிரச்சினைகள் இருந்தால், அதனை உடனே தெரியப்படுத்துங்கள். அதனை உடனடியாகக் தீர்த்திருக்க முடியும். பேசாமல் இருந்துவிட்டு, கூட்டத்தில் கேட்கப்படும் போது, வருட இறுதியில் இவ்வாறு பதிலளிக்கக்கூடாது. இதனைச் சகல திணைக்களத் தலைவர்களும் கவனத்தில் எடுக்க வேண்டும்.- என்று மாவட்ட செயலர் குறிப்பிட்டார். (ற-5,101)

# உ. கிழங்கு, வெங்காயத்துக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்துக

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 29
யாழ்.குடாநாட்டில்புகையிலையை தடை செய்து, உருளைக்கிழங்கு, வெங்காயத்தை உற்பத்தி செய்யுமாறு பணிப்புரை விடுக்கும் விவசாயத் திணைக்களம் அதற்கான சந்தை வாய்ப்பையும் விவசாயிகளுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும்.
இவ்வாறு யாழ். மாவட்ட விவசாய சங்கப் பிரதிநிதி கோரிக்கை விடுத்தார்.
யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதில் புகையிலைச் செய்கை நிறுத்தப்பட்டு, அதற்குப் பதிலாக மாற்று விவசாயச் செய்கை மேற்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கோரப்பட்டபோதே, விவசாய சங்கப் பிரதிநிதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். யாழ். குடாநாட்டில் எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானமானது தீவகத்துக்குப் பொருந்தாது. அங்கு சில மாதத்துக்கு மட்டும் விவசாயம்மேற்கொண்டு, அதன் மூலம் வருடம் முழுவதும் வாழ்பவர்களே அதிகம். அதேபோன்று மாற்று விவசாயம் எனப் பயிரிடப்படும் உருளைக் கிழங்கு மற்றும் வெங்காயம் என்பன பயிரிட்டு அறுவடை செய்தால் அதனை உற்பத்திச் செலவுக்குக் கூட சந்தைப்படுத்த முடியவில்லை. எமது அறுவடை காலத்திலும் இறக்குமதி தொடர்கின்றது.
சந்தைக்குக் கொண்டு செல்லப்படும் பொருள்களுக்கு வியாபாரி குறைந்த விலை கோருகின்றனர். திரும்பி வீடு கொண்டு வந்து கிழங்கை எவ்வளவு காலம் களஞ்சியப்படுத்த முடியும் என்பதற்காக அவர்களுக்குக் கொடுக்கின்றோம். 10 கிலோவுக்கு ஒரு கிலோ வியாபாரக் கழிவு தற்போதும் கழிக்கப்படுகின்றது. கழிவு வழங்க மறுத்தால் வியாபாரிகள் பொருள் வேண்டாம்என்கின்றனர். இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று அவர் தெரிவித்தார்.
புகையிலைச் செய்கையை நிறுத்துவதாக நாம் முடிவெடுக்கவில்லை. அதனை ஜனாதிபதியே தேசிய கொள்கையாக அறிவித்துள்ளார்- என்று விவசாயத் திணைக்களம் சார்பில் பதிலளித்த அதிகாரி தெரிவித்தார்.
சந்தைக் கழிவு தொடர்பில் உள்ளூராட்சித் திணைக்களம் சார்பில் தெரிவிக்கப்பட்டதாவது: கழிவை நிறுத்த ஒத்துக் கொண்ட போதிலும், நடைமுறைப்படுத்துவதற்குச் சில சபைகள் பின்னடிக்கின்றன. அதேநேரம் கரவெட்டி உள்ளிட்ட சில சபைகள் மிகச் சிறப்பாக மேற்கொள்கின்றன. எமது பிரதிநிதிகள் ஒருவரை நிரந்தரமாக நியமித்து - கண்காணிப்பது தொடர்பில் ஆலோசித்து வருகின்றோம்- எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-5-101)

# மின்தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், செப்.29
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6.30 மணி வரை கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.
கிளிநொச்சிப் பிரதேசத்தில் - இரத்தினபுரம், கோவிந்தன்கடைச் சந்தி, பன்னன்கண்டி, வட்டக்கச்சி, கறுப்பிக்குளம், உடச்சகண்டி மாயவனூர், இராமநாதபுரம், சாந்தபுரம், இரணைமடு, திருவையாறு, இரணைமடு விமானப்படை I மற்றும் II, வட்டக்கச்சி பாம் ஆகிய இடங்களிலும் -
வவுனியா பிரதேசத்தில் தோணிக்கல் சிவன்கோயில் பிரதேசம், குட்செற் வீதி, தெற்கிலுப்பைக்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும் மின் தடைப்படும். (ற-ரி)

# திறப்பு விழாக்களுக்கு என்னையும் அழையுங்கள்

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 29
நல்லாட்சி அரசில் மேற்கொள்ளும் திறப்பு விழாக்களுக்கு கூட்டமைப்பை மட்டும் அழையாது என்னையும் அழையுங்கள் என்று கோரிக்கை விடுத்தார் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன்.
யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாவட்டச் செயலகத்தில் நடத்தப்பட்டது. அதில் ஒவ்வொரு துறை தொடர்பிலும் ஆராயப்பட்டது. கல்வி தொடர்பான ஆராய்வுகளின் போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வுக்கு என்னை ஏன்அழைக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை மட்டும் அழைத்துள்ளனர். நல்லாட்சி அரசில் இனிமேல் இவ்வாறு செயற்படாதீர்கள் - என்று வலயக் கல்விப் பணிப்பாளரைக் கேட்டுக் கொண்டார் இராஜாங்க அமைச்சர்.
இதற்குப் பதிலளித்த வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர், இது எனது முடிவல்ல. பாடசாலை அபிவிருத்திச் சங்கமே அத்தகைய முடிவை எடுத்தது. அதனைச் செயற்படுத்தியது மாத்திரமே நாம் - என்றார்.
வடக்குமாகாண எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா, பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அவ்வாறான முடிவை எடுக்க முடியாது - என்றார். (ற-5,101)

# விபத்துக்களில் மூவர் காயம்

சாவகச்சேரி, செப்.29
சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் காயமடைந்த பெண் உட்பட மூவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். விபத்துக்கள் நேற்றுக் காலை இடம்பெற்றன.
காலையில் சாவகச்சேரி நகரப் பகுதியில் பாண் உற்பத்திப் பொருள்கள் கொண்டு சென்ற ஓட்டோ, மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்தார். கொடிகாமம் சந்தைக்கு சைக்கிளில் பொருள்கள் கொண்டு வந்த முதியவரை மோட்டார் சைக்கிள் மோதியதில்பெண்ணும் முதியவரும் காயமடைந்தனர். (ற-9)

# பேரினவாதிகளுக்கு ஏற்றவாறு வடக்கில் குறுந்தேசிய அரசியல்

## ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், செப்.29
தெற்கில் பேரினவாத அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் வகையில், வடக்கில் குறுந்தேசியவாத ஆதிக்க அரசியலுக்கான முன்னெடுப்புக்கள் நகர்த்தப்படுகின்றன என்று ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் தெரிவித்தார்.
அண்மையில் நடத்தப்பட்ட கட்சி மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
மைத்திரி - ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசின் முன்னால் மேலெழுந்துள்ள வரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு அவர்களால் முன்மொழியப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் எந்தவித சுபீட்சத்தையும் கொண்டுவரப்போவதில்லை. அதே போன்று நாட்டின் பிரதான முரண்பாட்டுப் பிரச்சினையாக தேசிய இனப் பிரச்சினைக்கு புதிதாக வரப்படும் அரசமைப்பின் மூலம் உரிய தீர்வு கிடைக்காது. இது இலவு காத்த கிளிக்கு ஒப்பானது.
அபிவிருத்தித் திட்டங்களுக்காக அந்நிய மூலதனத்தையும் முதலீடுகளையும் வரவழைப்பதும், இன நல்லிணக்கம் அரசியல் தீர்வு என உரத்து கூறி வருவதும், நாட்டில் சுபீட்சம் ஏற்பட்டு, மக்கள் பிரச்சினைகள் இன்றி வாழ்வதற்காக அல்ல. அமெரிக்காவின் தலைமையிலான உலகமயமாதல் நிகழ்சி நிரலின் கீழ் நவகொலனியநவதாராளப்பொருளாதார திட்டங்களை வலுப்படுத்தி முன்னெடுப்பதற்கே. இந்த உண்மையை மறைப்பதற்காகவே கடந்த காலத்தில் ஆளும் வர்க்க சக்திகளும் அன்னிய ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக்கவாதிகளும் இன முரண்பாட்டை மோதலாகவும், போராகவும் முன்னெடுத்தனர்.
அதே சக்திகள்தான் இன்று இன நல்லிணக்கம் ஐக்கியம் எனக் கூறி, அரசியல் நாடகம் நடத்துகின்றனர். ஒடுக்கப்படும் தேசிய இனங்களான தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழர் தமது அடிப்படை உரிமைகளுக்காக நியாயமான கோரிக்கைகளை முன்வைப்பதும் அணிதிரள்வதும் அவசியமானது.
கடந்த கால கொள்கைகளையும் நடைமுறைகளையும் விமர்சனமாகக் கொள்ளாது, வெறும் உணர்ச்சி அரசியலை முன்னெடுப்பது, மீண்டும் தவறான முடிவுகளுக்கே இட்டுச்செல்லும். இதன்மூலம் ஆதிக்க அரசியல் சக்திகள் தமக்குரிய வாக்கு வங்கிகள் மூலம், பதவிகள் பெற உதவும். மக்கள் இதுவரையான இழப்புக்களை ஈடுசெய்ய முடியாத அவல நிலையில் இருந்துவரும் சூழலில் புதிய வகை இழப்புக்களையும் இதனால் சந்திக்கவே செய்வார்கள். இதன் அர்த்தம் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக அணிதிரளவோ போராடவோ கூடாது என்பதல்ல. நியாயமான கோரிக்கைகளும் சரியான போராட்டங்களும் அனைத்து மக்களையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும் என்பதாகும். இன உரிமைகளை நியாயமான வழிகளில் முன்னிறுத்தும் அதேவேளை, தமிழ், முஸ்லிம், மலையக தமிழ் மக்கள் மத்தியில் நீடித்து வரும் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் -கோரிக்கைகள் வற்புறுத்தப்பட வேண்டும்.
நமது நாட்டின் பொருளாதார அரசியல் பிரச்சினைகளில், தேசிய இனப்பிரச்சினைகளில் அந்நிய சக்திகளின் தலையீடு எந்த வகையிலும் இடம்பெறக் கூடாது. இத்தகைய அந்நிய குறுக்கீடுகளின் தாக்கங்கள் மோதலுக்கும் - போருக்கும் மக்களது இழப்புகளுக்கும் வழி வகுத்த கடந்த கால துன்பியல் மீளவும் நிகழாதிருக்க உரிய கொள்கைகள் முன்னெடுக்கப்படுவது அவசியம் - என்றார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வவு. சைவப் பிரகாசா மகளிர் கல்லூரிக்கு கேட்போர் கூடம்

### அடுத்த ஆண்டு நிதி ஒதுக்கப்படும் என உறுதியளித்தார் வடக்கு கல்வி அமைச்சர்

வவுனியா, செப்.29
வவுனியா சைவப் பிரகாசா மகளிர் கல்லூரிக்கு கேட்போர் கூடம் அமைப்பதற்கு அடுத்த ஆண்டு வடக்கு மாகாண ஒதுக்கீட்டில் நிதி ஒதுக்கப்படும்.

இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுல ராஜா உறுதியளித்தார்.

சைவப் பிரகாசா மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் வவுனியா நகர கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட வடக்கு கல்வி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்

அவர் தெரிவித்ததாவது:

வவுனியா சைவபிரகாசா மகளிர் கல்லூரி என்று இருப்பது பெருமையான விடயம். கல்லூரி என்பதை உயர்ந்த அந்தஸ்திலேயே நாம் நோக்குகின்றோம். உதாரணமாக தேசியக் கல்லூரியைக் குறிப்பிடலாம். பொதுவாக கல்லூரி என்பது படித்து நல்ல பெறுபேறுகளைப் பெற்றவர்கள் மேலதிக கல்வியை பெற முயலும் இடம். பாடசாலைகளில் வித்தியாலயம் என்பதைவிட கல்லூரி என்று அழைப்பது சிறப்பானது. இந்த பாடசாலை மாணவர்கள் சிறப்பான பெறுபேறுகளைப் பெறுகிறார்கள்.

போருக்குப் பின்னர் தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. அதற்கு ஏற்ப கல்வியும் வளர்ந்தால் சந்தேசப்படலாம். மாணவர்களே நீங்கள் கற்பதற்கு பல வசதிகளை நாம் செய்து தருவோம். அதற்கு ஏற்ப கல்வி கற்றலை மேம்படுத்துங்கள். இன்று இந்த நிகழ்ச்சி வவுனியா நகர கலாசாரமண்டபத்தில் நடக்கிறது. இதற்கு பலஆயிரம் ரூபாவை வாடகையாக வழங்குகிறீர்கள். அநியாயமாக செலவழிப்பதை விட, நீங்கள் உங்கள் பாடசாலையில், மரநிழலில் விழாவை நடத்தலாம். இதை அதிபரிடம் கேட்டேன், அதற்கு அவர் கூறிய விளக்கம் 'தற்போது வெப்பமான சூழல். எங்களுக்கு பெரிய கேட்போர் கூடம் ஒன்றை கட்டி தாருங்கள்' - என்றார். 2017ஆம் ஆண்டு வடமாகாண ஒதுக்கீட்டில் இந்தப் பாடசாலைக்கு கேட்போர் கூடம் ஒன்றை அமைக்க உதவுகிறேன் என்று உறுதியளிக்கின்றேன் - என்றார். (ற)

# பாலியாற்று மண் அகழ்வை உடன் தடுத்து நிறுத்துங்கள்

### துணுக்காய் மக்கள் அவசர கோரிக்கை

முல்லைத்தீவு, செப்.29
பாலியாற்றில் தற்போது 32 அடி ஆழத்துக்கு மேல் மண் அகழப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு 200க்கும் மேற்பட்ட டிப்பர்கள் மண் அகழ்வில் ஈடுபடுகின்றன. இந்த மணல் கொள்ளை உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு துணுக்காய் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர். மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் மக்கள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தனர்.

மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பல பகுதிகளில் இருந்து மணல், மரம் என்பன வெளியிடங்களுக்கு அதிகம் எடுத்துச் செல்லப்படுகின்றன. நாம் வீட்டுத் தேவைக்கு மணலையே, மரத்தையே பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றோம்.

பாலியாற்றில் 32 அடி ஆழத்துக்கு மேல் மணல் அகழப்பட்டுள்ளது. ஆற்றில் இருந்து மணல் அகழ்வதற்கு கூடையைப் பயன்படுத்த வேண்டும். ஆனால், அங்கு இயந்திரங்களின் உதவியுடன் மணல் அகழ்வு நடக்கின்றது. ஒருநாளைக்கு 200க்கும் அதிகமான டிப்பர்கள் மணல் ஏற்றுகின்றன. அவை எமது பிரதான வீதிகளில் வேகமாகச் செல்கின்றன. வீதிகள் அதனால் சேதமடைகின்றன. இந்த மணல் கொள்ளை

> பாலியாற்றில் 32 அடி ஆழத்துக்கு மேல் மணல் அகழப்பட்டுள்ளது. ஆற்றில் இருந்து மணல் அகழ்வதற்கு கூடையைப் பயன்படுத்த வேண்டும். ஆனால் அங்கு இயந்திரங்களின் உதவியுடன் மணல் அகழ்வு நடக்கின்றது. ஒருநாளைக்கு 200க்கும் அதிகமான டிப்பர்கள் மணல் ஏற்றுகின்றன.

உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் - என்று பிரதேச மக்கள் இணைத்தலைவர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

மாந்தை கிழக்கில் மட்டும் 150க்கும் மேற்பட்ட மணல் யாட்டுக்கள் பயன்படுத்தப்பட்டு மணல் அகழப்படுகின்றது. ஆற்று மணலை பெருமளவு அகழ்வதால் குளங்களுக்கு நீர் வராது. துணுக்காய் பிரதேசத்தில் உள்ள குளங்கள் இதனால் பெரும் பாதிப்படைகின்றன. எதிர்காலத்தில் விவசாயத்தில் இது பெரியளவு பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது - என்று வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் சுட்டிக் காட்டினார்.

இதுதொடர்பில் பிரதேச செயலரிடம், இணைத் தலைவர்கள் வினவினர். அனுமதி வழங்கப்பட்ட பின்னரே எனக்கு அறிவிக்கப் படுகின்றது. என்னால் ஒரு முடிவும் எடுக்க முடியவில்லை - என்று அவர் பதிலளித்தார். இந்த விடயம் தொடர்பாக இணைத் தலைவர்கள் ஆராய்ந்தனர்.

எமது பகுதியில் மணல் பெறப்படும் இடங்களை அடையாளப்படுத்தும் போது நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர், பிரதேச சபைச் செயலாளர், கனியவளத்திணைக்கள அதிகாரிகள் அனைவரும் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத இடங்களை அடையாளப்படுத்த வேண்டும். குறித்த இடங்களில் மணல் பெறப்படும்போது பிரதேச செயலரின் அனுமதி கட்டாயம் பெறப்பட வேண்டும். இதுவரை பெறப்பட்ட மணல் யாட்டுக்கான அனுமதிகள் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும். குறித்த பகுதியைச் சேர்ந்த சமூக மட்ட அமைப்பினருக்கு அனுமதி வழங்கினால் போரால் பாதிப்புற்றுள்ள அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு அது உதவும். முல்லைத்தீவு மாவட்டத்துக்கான மணல், மரம் தேவைகள் முழுமை செய்யப்பட்ட பின்னரே, அவை வெளியிடங்களுக்குக் கொண்டு செல்ல அனுமதிக்க வேண்டும் - என்று இணைத்தலைவர்கள் தீர்மானமாக அறிவித்தனர். (ற-5,21,ரி7)

## பனம் களி சேகரிக்கும் நடவடிக்கை துரிதகதியில்

பனை அபிவிருத்திச் சபையின் பனம் களி சேமிப்புத் திட்டத்தின் கீழ், இதுவரை 25 ஆயிரம் லீற்றர் பனம் களி சேகரிக்கப்பட்டுள்ளது.

பனம் பழ பருவ காலம் ஆரம்பித்துள்ளதை அடுத்து பனம் களி சேகரிக்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. பருவகாலத்தில் சுமார் 40 ஆயிரம் லீற்றர் பனம் களி வடக்கு - கிழக்கு மாகாண உற்பத்தியாளர்களிடம் இருந்து பெறப்படவுள்ளது. உற்பத்தியாளர்களுக்கு இது குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டு, உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன என்று சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ற-17)



வவுனியா வைத்தியசாலையில் காணப்படும் ஊசி, சிறின்யர் போன்ற கழிவுப்பொருள்களை சுற்றுப்புறச் சூழலுக்கு எந்தவித பாதிப்பும் இன்றி அகற்றும், 6 மில்லியன் ரூபா பெறுமதியான மின்சார இயந்திரம் (மின் மாசகற்றல் கருவி) வவுனியா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது என்று பணிப்பாளர் மருத்துவர் கு.அகிலேந்திரன் தெரிவித்தார். (ற-21)

## மோ. சைக்கிளை பொறுப்பேற்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம் செப். 29
ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் B/288/15 வழக்கு இலக்கத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ள WP -JY -7164 மோட்டார் சைக்கிள் அடையாளம் காணப்படாமல் உள்ளது. குறித்த மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் உரிய ஆவணங்களுடன் நீதிமன்றுக்கு வந்து அடையாளம் காட்டுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த அறிவித்தலின் பின்னர், ஆறு மாத காலத்தில் எந்தவித அறிவித்தலுமின்றி ஏல விற்பனை செய்யப்படும் எனவும் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் அறிவித்தார். (ற-ரி1)

## யாழ். வீதிப் புனரமைப்புகளுக்கு கேள்வி கோரல் மூலமே ஒப்பந்தம்

### மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப்.29
யாழ்ப்பாண மாவட்டத்தில் வீதிப் புனரமைப்புக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்படும்போது, எந்தக் கேள்விகோரலும் இல்லாமல் வழங்கப்படக்கூடாது.

இவ்வாறு யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் வீதி அதிகார சபையின் ஊடாக முன்னெடுக்கப்படும் வீதிப் புனரமைப்புகளுக்கான கேள்வி கோரலில் ஊழல் நடைபெறுகின்றது என்று - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பகிரங்கமாக குற்றஞ்சுமத்தினார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக வீதிப் புனரமைப்புகள் மேற்கொள்ளப்படும்போது, கேள்வி கோரப்படாது ஒப்பந்தம் வழங்கப்படுகின்றது. ஒப்பந்தகாரர்கள் என்னிடம் வந்தனர். நீங்கள் கூறினால் ஒப்பந்தத்தை எம்மிடம் தருவார்கள். நாங்கள் உங்களைக் கவனிக்கின்றோம். வேறு சில அரசியல்வாதிகள் பரிந்துரைத்து எமக்கு ஒப்பந்தம் கிடைத்தது என்று கூறினார்கள். ஒப்பந்தம் வழங்குவதில் ஊழல் நடப்பது இதன் ஊடாகத் தெரிகின்றது - என்று அவர் தெரிவித்தார்.

100 மில்லியன் ரூபாவுக்குக் குறைவான வீதிப் புனரமைப்புத் திட்டங்கள் அமைச்சரவையின் அனுமதியுடன் கேள்வி கோரலுக்கு விடாது நேரடியாக வழங்க முடியும். அதற்கான உப விதி இருக்கின்றது. அந்த அடிப்படையில் ஒப்பந்தங்கள் வழங்கப்படுகின்றன - என்று வீதி அபி விருத்தி அதிகார சபை அதிகாரி தெரிவித்தார்.

ஆராய்வின் முடிவில் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வீதிப் புனரமைப்புகளில் இவ்வாறான நடைமுறை பின்பற்றப்படக்கூடாது. அனைத்து ஒப்பந்தங்களும் கேள்வி கோரலின் ஊடாக வழங்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. (ற-5,101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிலும் தெற்கிலும் உருவாகும் இனவாதம் நிரந்தரத் தீர்வுக்குச் சவால்

## எச்சரிக்கிறார் அமைச்சர் ஹக்கீம்

கொழும்பு, செப். 29
பக்குவமாகவும் சாணக்கியமாகவும் சமயோசிதமாகவும் செயற்பட்டால் இனப்பிரச்சினைக்கு சகலரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிரந்தரத் தீர்வை காணமுடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. ஆனால் வடக்கிலும், தெற்கிலும் உருவாகியுள்ள இனவாதச் சக்திகளின் செயற்பாடுகளே எமக்குச் சவாலாக உள்ளன. அவர்கள் சித்துவிளையாட்டுக்களை ஆரம்பித்துள்ளனர். இதில் நாங்கள் சிக்கிவிடாமல் நடுநிலை பேணிச் செயற்பட வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கடந்த கால அனுபவங்களுடன் பார்க்கையில் தற்போது உருவெடுத்துள்ள இனவாதம் எமக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. விடுதலைப் புலிகளும் பொங்கு தமிழை நடத்தியே அவர்களுக்கிருந்த நல்ல வாய்ப்பைத் தவறவிட்டனர். சில விடயங்களில் அவ்வப்போது விட்ட தவறுகள் எங்களுக்குப் படிப்பினையாக உள்ளன என்றும் ரவூப் ஹக்கீம் சுட்டிக் காட்டினார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டிருந்த அமைச்சரைச் சந்தித்து உரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகளை மேலும் சர்ச்சைக்குள்ளாக்கும் வகையில் சில விடயங்கள் இடம்பெற்று வருகின்றன. வடக்கில் எழுக தமிழ் என்றும் கிழக்கில் கிழக்கின் எழுச்சி என்றும் தெற்கில் சிங்ஹலே என்றும் விதவிதமான இனவாதச் தீவிர சக்திகள் தலைதூக்கத் தொடங்கியிருக்கின்றன.

இவர்கள் வெவ்வேறு துருவங்களாகச் செயற்படுவதாகத் தென்பட்டாலும், ஒருவருக்கொருவர் உதவுகின்ற பாணியிலேயே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இறுதியில் இவர்கள் எல்லோரும் எதிரியின் நண்பர்கள் என்ற அடிப்படையில் செயற்படுவதைப் நாங்கள் காண்கின்றோம். குறிப்பாக மிகவும் பக்குவமாகவும் சாணக்கியமாகவும் கையாளப்படவேண்டிய விடயங்களைப் பகிரங்கமாகப் போட்டுடைத்து குழப்பிவிடுகின்ற நிலவரங்களை ஏற்படுத்தக் கூடாது. மிகவும் கவனமாக இந்த விடயங்களை நாங்கள் கையாளவேண்டியுள்ளது.

கே:-எழுக தமிழ் போன்ற பேரணிகள் நல்லிணக்கத்திலும் தீர்வைக் காண்பதிலும் முட்டுக்கட்டையாக இருக்குமெனக் கூறுவதற்கு முற்படுகிறீர்களா?

ப:- எழுக தமிழ் நிகழ்வு நாட்டில் முழுமையாக சமஷ்டி ஆட்சி வேண்டும்., நல்லிணக்கத்தில் தாமதம் கூடாது, பொறுப்புக் கூறல் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. இது தெற்கிலிருக்கின்ற இனவாதிகளுக்கு தீனி போடும் செயற்பாடுகளாகவே அமைந்திருக்கின்றது.

தெற்கிலுள்ள இனவாதிகளுக்குத் தீனி போடும் வகையில் ஒரு சில செயற்பாடுகளைத் தூக்கிப் பிடிக்கின்றார்கள். ஆனால் இந்த இரண்டு துருவப்படுத்தப்பட்ட நிலைப்பாடுகளுக்குமிடையில் ஒரு மிதவாத நிலைப்பாட்டுக்கு நாங்கள் எல்லோரும் வரமுடியும். அதற்கான அதிகமான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. அவற்றையெல்லாம் குழப்பியடிக்கும் வகையில் இந்த எழுக தமிழ் பேரணி அமைந்துவிடக்கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். இதில் நாம் கவனமாக இருக்கவேண்டும். சரியான விடயங்கள் சரியான நேரத்தில் செய்யப்படவேண்டும். பிழையான தருணத்தில் சரியான விடயத்தைச் செய்வதும், பிழையான விடயமாக போய்விடும்.

இந்த விடயத்தில் நாங்கம் மிகவும் சாணக்கியமாகவும் பக்குவமாகவும் செயற்பட்டு விடயங்களைக் கையாள வேண்டும். வெண்ணெய் திரண்டு வருகின்றபோது தாழியை உடைகின்ற வேலையை இந்தப் பேரணிகள் செய்துவிடக்கூடாது. இவை எல்லாவற்றுக்கும் பின்னால் உட்கட்சி முரண்பாடுகள் காணப்படுகின்றன. மறுபுறம் சில வெளிநாட்டுச் சக்திகளின் தலையீடும் இதற்குக் காரணமாக இருக்கலாம் என்றும் பேசப்படுகின்றது.

எனவே இவற்றை எல்லாம் நாங்கள் மிகவும் நிதானமாகக் கையாளவேண்டும். பக்குவமாக அணுகவேண்டும். இந்த நாட்டில் இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத நிலைவரங்கள் தொடர்கதையாகவே இருந்து வருகின்றன. அது தொடர்ந்தும் தொடர்கதையாக இருக்க முடியாது.

போரின் பின்னரான இந்தச் சூழலிலும் நல்லிணக்கத்துக்குச் சர்வதேசம் சிறந்த சமிக்ஞையை காட்டிக்கொண்டிருக்கின்ற பின்னணியிலும் அவற்றைப் பயன்படுத்தி ஒரு நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கான நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. இரண்டு பிரதான கட்சிகளினதும் தலைவர்கள் தேசிய அரசு ஊடாக சிறுபான்மை மக்களின் உரிமைகள் தொடர்பான விடயங்களை அதிகளவில் பக்குவப்பட்ட மற்றும் நெகிழ்வுத்தன்மையுடைய நோக்கில் ஆராய்கின்ற தலைமைகளாக இருக்கின்றமை எங்களுக்கிருக்கின்ற மிகப்பெரிய வாய்ப்பாகும். அதனை நாங்கள் தவறவிட்டுவிடக்கூடாது.

கே:- தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடனான உறவு எவ்வாறு உள்ளது?

ப:- தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடனான எமது உறவு மிகவும் சிறப்பாக உள்ளது. நாங்கள் தொடர்ந்து கூட்டமைப்புடன் பேசிக்கொண்டு வருகின்றோம். எமது இரண்டு தரப்புக்களுக்கிடையில் அதிகளவான புரிந்துணர்வு காணப்படுகின்றது. ஒரு சில விடயங்களில் இன்னும் இணக்கப்பாடுகள் எட்டப்பட வேண்டியுள்ளன. அவற்றை நாங்கள் தாமதிக்காமலும் அதேநேரம் அவசரப்படாமலும் செய்யவேண்டியுள்ளது.

காரணம் சில தரப்புக்கள் வேண்டுமென்றே சில விடயங்களைப் போட்டுடைத்துக் கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் நாங்கள் நல்ல புரிந்துணர்வோடு கையாள முடியுமென்றும் நம்பிக்கை இருக்கின்றது. அதேவேளை தேர்தல் சீர்திருத்தம் தொடர்பாகச் சிறிய கட்சிகளுடன் குறிப்பாக மலையக மற்றும் சிறுகட்சிகளுடன் மேலும் பல இணக்கப்பாடுகள் எட்டப்படவேண்டியுள்ளன. அது தொடர்பாக இந்த பிரதான வழிநடத்தல் குழுவில் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

இறுதியாக பக்குவமாகவும், சாணக்கியமாகவும், சமயோசிதமாகவும், செயற்பட்டால் சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தரத் தீர்வை காணமுடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. ஆனால் வடக்கிலும், தெற்கிலும் உருவாகியுள்ள இனவாதச் சக்திகளின் செயற்பாடுகளே எமக்குச் சவாலாக உள்ளன. அவர்கள் சித்துவிளையாட்டுக்களை ஆரம்பித்துள்ளனர். இதிலே நாங்கள் சிக்கிவிடாமல் நடுநிலை பேணி செயற்பட வேண்டும். (த)



## தோட்டத் தொழிலாளர்கள் வீதியை மறித்துப் போராட்டம்

### முறையான சம்பள உயர்வு கோரி

கொழும்பு, செப். 29
தோட்டத் தொழிலாளர்களுக்கான முறையான சம்பள உயர்வைப் பெற்றுத் தரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஹற்றன்- பொகவந்தலாவ வீதியை மறித்தும் பேரணியை நடத்தியும் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 9 மணி முதல் நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 4 பிரிவுகளைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் 4 இடங்களில் வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் 2 மணி நேரம் போக்குவரத்து தடைப்பட்டது.

நோர்வூட் வெஞ்சர், பொகவந்தலாவ ஆகிய தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் இந்தப் போராட்டங்களில் கலந்து கொண்டனர்.

இதன்போது தொழிற் சங்கங்களுக்கு எதிராகவும் கோசங்கள் எழுப்பப்பட்டன.

தீபாவளியைக் கூட கொண்டாட முடியாமல் தம்மை வறுமை நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டிய தொழிலாளர்கள், சம்பள உயர்வு கிடைக்கும் வரை போராட்டத்தைத் தொடரப்போவதாகவும் தெரிவித்தனர். (த)

## நவம்பரில் வெளியேறுவார் சின்ஹா

கொழும்பு, செப். 29
இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹா வரும் நவம்பர் மாத நடுப்பகுதியில் கொழும்பில் இருந்து வெளியேறவுள்ளார்.

இலங்கையில் மூன்றாண்டு பதவிக்காலத்தின் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹா, பிரிட்டனுக்கான இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பை இந்திய வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்டது.

துறைசார் இராஜதந்திரியான வை.கே.சின்ஹா விரைவில் தனது புதிய பதவியை ஏற்றுக் கொள்வார். இதற்காக அவர், வரும் நவம்பர் மாத நடுப்பகுதியில் கொழும்பில் இருந்து வெளியேறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராக தரன்ஜித் சிங் சந்து ஏற்கனவே இந்திய வெளிவிவகார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## துறைமுகத்தில் தேங்கிய கொள்கலன்கள் விடுவிப்பு

கொழும்பு, செப். 29
சுங்க அதிகாரிகள் மேற்கொண்டிருந்த சட்டப்படி வேலைப் போராட்டத்தால் கொழும்புத் துறைமுகத்தில் தேங்கிக் கிடந்த கொள்கலன்கள் அனைத்தும் இப்போது விடுவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பழைய சுங்கச் சட்ட வரைவை இரத்துச் செய்து புதிய சட்டவரைவைக் கொண்டு வருவதற்கு நிதியமைச்சு மேற்கொண்டிருந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுங்க அதிகாரிகள் கடந்த 15ஆம் திகதி முதல் சட்டப்படி வேலைப் போராட்டத்தில் இறங்கியதுடன், மேலதிக வேலை நேரங்களையும் புறக்கணித்ததால் கொழும்புத் துறைமுகத்தில் சுமார் 3,500 கொள்கலன்கள் தேங்கியிருந்தன.

நாளாந்தம் சுமார் 1,500 கொள்கலன்கள் பரிசோதிக்கப்பட்டு விடுவிக்கப்படுவது வழக்கம். எனினும், இந்தப் போராட்டத்தால் அந்தப் பணி ஆமை வேகத்தில் நடந்ததால் துறைமுகத்தில் பெரிய தேக்கமொன்று ஏற்பட்டது. 23ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு இந்தப் போராட்டம் கைவிடப்பட்டதைத் தொடர்ந்து இரவு பகலாகக் கடமையில் ஈடுபட்ட அதிகாரிகள் தேங்கியிருந்த கொள்கலன்கள் அனைத்தையும் விடுவித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தால் சுங்கத் திணைக்களத்துக்கு நாளாந்தம் சுமார் 140 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (த)

## இந்திய அமைச்சருக்கு கொழும்பில் எதிர்ப்பு



கொழும்பு, செப். 29
இந்திய மத்திய வர்த்தக இணை அமைச்சர் நிர்மலா சீத்தாராமனின் இலங்கைப் பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கொழும்பில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

புறக்கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக, தேசிய சுதந்திர முன்னணி ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், மகிந்த ராஜபக்ச ஆதரவுக் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்தியா- இலங்கை இடையில் பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாடு (எட்கா) செய்து கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

எட்கா உடன்பாட்டினால், இலங்கைக்கு இந்தியத் தொழிலாளர்கள் படையெடுக்கும் நிலை ஏற்படும் என்றும் இதனால் இலங்கையர்களின் வேலை வாய்ப்பு பறிபோகும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

எட்கா உடன்பாடு குறித்து இலங்கை அரச தரப்புடன், இந்திய அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் பேச்சுக்களை நடத்தியிருந்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே, புறக்கோட்டையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுத்தங்கள் எதுவுமின்றி தொடர வேண்டும் எட்கா

## இந்திய இணையமைச்சர் நிர்மலா தெரிவிப்பு



கொழும்பு, செப். 29
இலங்கைக்கும்-இந்தியாவுக்கும் இடையே சேவைகள் மற்றும் முதலீடுகளைப் பரிவர்த்தனை செய்யும் வகையிலான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான எட்கா ஒப்பந்தம் எந்தவித அழுத்தங்களுமின்றி-காலவரையறையின்றித் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படவேண்டும் என்பதையே இந்தியா விரும்புவதாக, அந்த நாட்டுக் கைத்தொழில் மற்றும் வர்த்தக இணையமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.
இந்திய கைத்தொழில் மற்றும் வர்த்தக இணையமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையிலான உயர்மட்டக்குழு கடந்த திங்கட்கிழமை இலங்கைக்கு வருகை தந்துள்ளது.
இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய இணையமைச்சர் நிர்மலா சீதாராமன், கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இலங்கை அமைச்சர்களான மலிக் சமரவிக்கிரம, ரிஷாத் பதியுதீன், பிரதி அமைச்சர்களான ஹர்ச டி சில்வா, அஜித் பெரேரா ஆகியோருடன் இணைந்து நேற்றுமுன்தினம் மாலை கூட்டு ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தியபோதே இவ்வாறு தெரிவித்தார்.
எட்கா தொடர்பில் பேச்சு நடத்த ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில் இந்தியாவிலிருந்து உயர்மட்டத் தூதுக்குழு ஒன்று இலங்கைக்குவருகைதரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
இலங்கைக்கும்-இந்தியாவுக்கும் இடையே ஏற்கனவே செயலில் இருக்கும் சுதந்திர வர்த்தக உடன்பாடு தொடர்பில் இரு நாடுகளைச் சேர்ந்த வர்த்தகர்களுக்குப் பிரச்சினை இருப்பதாகவும், இலங்கை வர்த்தகர்கள் பலர் இந்தியாவிடம் இந்தக் குறைபாடுகளுக்குத் தீர்வுகாண வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.
தற்போது நடைமுறையில் உள்ள சுதந்திர வர்த்தக உடன்பாடு, இலங்கைக்கு ஒப்பீட்டளவில் நன்மை பயக்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.
எனினும், எட்கா உடன்பாடு கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர், இலங்கை – இந்திய சுதந்திர வர்த்தக உடன்பாட்டில் உள்ள குறைபாடுகள் நீக்கப்படுமென அவர் தெரிவித்தார்.
தாம் இலங்கைக்கு வருகை தந்த பின்னர், இரண்டு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உறவுகள் குறித்து ஆக்கபூர்வமான, விரிவான பேச்சுக்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பல்வேறு அரச முக்கியஸ்தர்களுடன் நடத்தியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அயல்நாடுகளின் உறவுகளை வலுப்படுத்த வேண்டுமென்ற கொள்கையுடனேயே செயலாற்றி வருவதாகவும், அந்தவகையில் இரண்டு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்த இந்தியாகரிசனையுடன் செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.
இலங்கை பெற்றோலிய வளத்துறை அமைச்சர் ஒக்ரோபர் மாதம் 05 ஆம் திகதி இந்தியாவுக்குப் பயணம் செய்யவுள்ளதைச் சுட்டிக்காட்டிய நிர்மலா சீதாராமன், இலங்கை-இந்திய பொருளாதார வர்த்தக உறவுகள் மேலும் விரிவடைய இரு நாடுகளும் ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்குமெனவும் நம்பிக்கை வெளியிட்டார். (தி)

## மகிந்தவின் பாதுகாப்பு பிரதானிக்குப் பிணை

கொழும்பு, செப். 29
2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்புப் பிரதானியாகக் கடமையாற்றிய இலங்கை இராணுவத்தின் மேஜர் நெவில் வன்னியாராச்சிக்குப் பிணை வழங்குவதற்கு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது,
சொத்துக்களை அறிக்கையிடாமை தொடர்பில், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஐந்து வழக்குகளிலிருந்தும் அவருக்கு நேற்றுப் பிணை வழங்கினார் கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலப்பிட்டிய.
இந்த ஐந்து வழக்குகளிலிருந்தும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணை மற்றும் இரண்டு சரீரப் பிணைகளில் அவர் விடுவிக்கப்பட்டார். அத்துடன் இந்த வழக்கு, ஜனவரிமாதம் 13ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (தி)

## பிரதியமைச்சர் ஒருவர் விரைவில் கைதாவார்

### கூறுகிறார் ரஞ்சன் ராமநாயக்க

கொழும்பு, செப். 29
தற்போதைய அரசில் பிரதியமைச்சராகப் பதவி வகிக்கும் ஒருவர் வெகுவிரைவில் கைதுசெய்யப்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்திருக்கிறார்.
ஐ.தே.க. தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.
குறிப்பிட்ட இந்தப் பிரதியமைச்சரின் மீதான விசாரணைகள் 95 சதவிகிதம் முழுமையாகியிருப்பதாகவும், அவ்வாறே மேலும் 15 அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். (தி)

## தேயிலை உற்பத்தியில் மிக மோசமான சரிவு

கொழும்பு, செப். 29
இலங்கையின் தேயிலை உற்பத்தி 10 ஆண்டுகளுக்குப் பின்னர் மோசமான வீழ்ச்சியைச் சந்தித்துள்ளதாக, தேயிலைச் சபையின் தரவுகள் தெரிவிக்கின்றன.
கடந்த ஓகஸ்ட் மாதம் இலங்கையி தேயிலை உற்பத்தி 23 மில்லியன் கிலோவாக வீழ்ச்சி கண்டது. இது முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 13 சதவீத வீழ்ச்சியாகும்.
2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21.5 மில்லியன் கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. அதற்குப் பின்னர், இந்த ஆண்டிலேயே தேயிலை உற்பத்தியில் மோசமான சரிவு ஏற்பட்டுள்ளது.
அதேவேளை, 2016ஆம் ஆண்டின் ஜனவரி தொடக்கம் ஓகஸ்ட் வரையான 8 மாதங்களில், தேயிலை உற்பத்தியில் 27 மில்லியன் கிலோ அல்லது 12 வீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில், 198.6 மில்லியன் கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அதேவேளை, இந்த எட்டு மாதங்களில், ஒரு மாதத்தின் மொத்த தேயிலை உற்பத்தியை நாடு இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி)

## நீரிழிவு அபாயம் கொழும்பில் தீவிரம்

### எட்டு மாதங்களில் 577 நோயாளிகள்

கொழும்பு, செப் 29
கொழும்பு மாவட்டத்தில் நீரிழிவு நோய் தீவிரமாகப் பரவி வருவதாகவும், இந்த வருடத்தில் கடந்த எட்டு மாதங்களில் மாத்திரம் இந்த மாவட்டத்தில் 577 நோயாளிகள் இனங்காணப்பட்டிருப்பதாகவும் கொழும்பு மாநகர சபையின் பிரதான சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ருவன் விஜயமுனி தெரிவித்திருக்கிறார்.
2015ஆம் ஆண்டின் முழுப் பகுதியிலும் மொத்தமாக 656 நோயாளிகளே நீரிழிவால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும், ஒப்பீட்டளவில் இந்த வருட இறுதியில் அந்த எண்ணிக்கை அதிகரிக்கும் வாய்ப்பு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.
மாளிகாவத்தை தொடர்மாடிப் பகுதியிலும், வனாத்தமுல்ல பகுதியிலும் நீரிழிவு நோயாளிகள் அதிகமாகக் காணப்படுகிறார்கள்.
சனநெரிசல் அதிகமாகவுள்ள பகுதிகளில் வாழும் நீரிழிவு நோயாளிகளில் பெரும்பாலானோர் நீரிழிவால் பீடிக்கப்படுகிறார்கள்.
நீரிழிவு மேலும் பரவாமல் தடுப்பதற்காகக் கொழும்பு நகர பொதுசன வைத்திய அதிகாரிகளுடன் கொழும்பு மாநகர சபையும் இணைந்து மாநகரத்திலுள்ள வீடுகளுக்கு பயணம் செய்து பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (தி)

## யோசித வெளிநாடு செல்வதற்கு அனுமதி

கொழும்பு, செப் 29
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதல்வர் யோசித ராஜபக்சவுக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
மருத்துவ சிகிச்சைகளுக்காக அவர் வெளிநாடு செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக யோசிதவின் சட்டத்தரணியால் அனுமதி கோரி, மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. குறித்த மனு நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, யோசித சிகிச்சைக்காக ஒரு மாதம் ஆஸ்திரேலியா செல்வதற்கு கொழும்பு உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியது. நிதி மோசடி வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட நிலையில், யோசித ராஜபக்ச பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி)

## பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து அரசு ஆராய்வு

கொழும்பு, செப். 29
தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்பாக, பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி, அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் நீண்ட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.
பாதுகாப்பு அமைச்சில் கடந்த திங்கட்கிழமை இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.
இலங்கை எதிர்கொள்ளும் பாதுகாப்பு மற்றும் புதிய சவால்கள் தொடர்பாகவே இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.
தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஏனைய அமைச்சுக்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வது குறித்து இந்த நீண்ட கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.
பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் விமானப்படைத் தளபதி மற்றும் முப்படைகளின் அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள், அமைச்சுக்களின் செயலர்களும் கலந்து கொண்டனர். (தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பதவி விலகுவாரா வடக்கு முதலமைச்சர்?

முதலைமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கடந்த வாரம், தான் நடத்திய ஊர்வலத்தில் உரையாற்றும் போது ஒரு விடயத்தை முக்கியமாகக் குறிப்பிட்டார். அவர் வகிக்கும் பதவியைக் கேள்விக்குள்ளாக்கும் விதத்தில் அது அமைந்திருந்தது.

"இன்றைய கால கட்டத்தில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுவதாலோ, மாகாண சபைகளுக்குத் தெரிவு செய்யப்படுவதாலோ எமது உரிமைகளை நாம் வென்றெடுத்துக்கொள்ள முடியாது" என்று எழுக தமிழ் ஊர்வலத்தில் ஆற்றிய உரையின் ஆரம்பத்திலேயே அவர் கூறினார்.

இதனை அவர் அறிவித்து மூன்று வேலை நாள்கள் கடந்துவிட்டபோதும், அவர் தொடர்ந்தும் முதலமைச்சராகவே பதவி வகித்து வருகிறார். மாகாண முதலமைச்சராகத் தான் தெரிவு செய்யப்பட்ட தன் மூலம் தமிழ் மக்களின் உரிமையை வென் றெடுக்க முடியாது என்பதைத் தெளிந்து உணர்ந்த பின்னரும், அதைப் பகிரங்கமாக ஊர்வலம் நடத்தி அறிவித்த பின்னரும், தொடர்ந்தும் அந்தப் பதவியில் அவர் இருக்க வேண்டிய தேவை என்ன என்ற கேள்விக்கு அவர் இதுவரையில் பதிலளிக்கவில்லை.

பயனற்றது என்று தெரிந்து புரிந்த பின்னரும், உரிமைகளை வென்றெடுக்க முடியாத ஒரு சபையின் தலைவராக, முதலமைச்சராக அவர் பதவியில் நீடிப்பது நியாயமற்றதுதானே என்று மக்கள் சிந்திப்பதைத் தவறு என்று சொல்லிவிட முடியாது.

பயனற்றது என்பதற்காகத் தனது பதவியைத் தூக்கி எறிந்துவிட்டுப்போகும் மனப்பக்குவம் எதுவும் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அந்தப் பதவியில் முழுக் காலத்துக்கும் நீடித்திருக்கும் திட்டமே இப்போது வரைக்கும் அவரிடம் இருக்கிறது என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள். அடுத்த தடவை போட்டியிடுவதற்குக்கூட எண்ணம் கொண்டுள்ளார் என்று ஊகக் கதைகள் உலாவுகின்றன. அதற்கு ஆதாரமாகக் கொழும்பிலுள்ள மூத்த சட்டத்தரணி ஒருவருடன் அவர் நடத்திய உரையாடல்களும் முன்வைக்கப்படுகின்றன.

இத்தகையதொரு பின்னணியில், மாகாணசபை உறுப்பினராதல் மூலம் தமிழர்களின் உரிமையை வென்றெடுக்க முடியாது என்று அவர் எந்த அடிப்படையில் கூறினார் என்ற கேள்வியைத் தவிர்க்க முடியவில்லை. பயனற்றது என்று, தானே கூறிய ஒரு கதிரையில், முதலமைச்சர் தொடர்ந்திருப்பது பதவிச் சொகுசுக்காக என்றாகிவிடாதா?

முதலமைச்சர் நீதியரசராக இருந்தவர். அவருக்குத் தெரியாத நீதி நியாயம் இருக்க முடியாது. நேர்மையானவர், பதவியாசை அற்றவர் என்று கடந்த காலங்களில் மக்களால் அறியப்பட்டவர். எனவே உரிமைகளை வென்றெடுக்க முடியாத ஒரு கதிரையில், தான் இன்னமும் ஒட்டிக்கொண்டிருப்பதற்கான விளக்கத்தை அவர் இந்த அப்பாவித் தமிழ் மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும்.

இல்லையென்றால் ஊருக்கு உபதேசம், உனக்கல்லடி பெண்ணே என்ற கதையாக இந்த விடயம் மக்களால் புரிந்துகொள்ளப்படும் ஆபத்து இருக்கிறது. அப்படிப் புரிந்துகொள்ளப்பட்டால், முதலமைச்சர் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டார் என்றும் பொருள் கொள்ளப்படலாம்.

இத்தகைய ஆபத்துக்கள் எல்லாம் இருப்பதால், மாகாண சபை உறுப்பினராவதால் தமிழர்களின் உரிமைகளைப் பெறமுடியாது என்று கூறிய பின்னரும் தான் பதவியில் நீடிப்பதற்கான விளக்கத்தை விக்னேஸ்வரன் தெளிவுபடுத்துவதே சிறந்தது.

## தமிழர்களைப் பாதிப்புக்குள்ளாக்கும்
# செயற்பாடுகள் தேவைதானா?

சேரலாதன்

'எழுக தமிழ்' என்ற தொனிப்பொருளிலான பேரணி, தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நடந்து முடிந்து விட்டது. வர்த்தக நிலையங்கள், சந்தைகள் யாவும் மூடப்பட்டுத் தனியார் போக்குவரத்தும் இடம்பெறவில்லை. பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

பாதிக்கப்பட்ட ஓர் இனம் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துவது நியாயமானதுதான். இதில் எவருமே குறைகாண முடியாது. ஆனால் இந்தப் பேரணியில் தமிழ் மக்களின் அனைத்துத் தரப்பினரும் கலந்து கொள்ளாதது ஒரு குறையாகவே காணப்பட்டது.

பொதுவாகவே இலங்கைத் தமிழர்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதில் பின்னடைவுகளைச் சந்திப்பதற்கு அவர்களிடையே வேரூன்றிக் காணப்படும் ஒற்றுமையீனமே பிரதான காரணமாகும்.

தமிழ் மக்களை ஒன்றுபடுத்தி அவர்கள் மத்தியில் அசைக்க முடியாததொரு அரசியல் சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விளங்குகின்றது. இதில் தமிழரசுக் கட்சி பிரதான பங்கை வகிக்கின்றது. அதனுடன் ரெலோ, ஈ.பி.ஆர். எல்.எவ், புளொட் ஆகியவை இணைந்து கூட்டமைப்பாக உருவாகியுள்ளன. உள்ளூராட்சித் தேர்தல்கள் மாகாண சபைத் தேர்தல்கள். நாடாளுமன்றத் தேர்தல்கள் ஆகியவை இடம்பெற்றபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரு வெற்றிகளைப் பெற்றுக்கொண்டது. கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் தனித் தனியே போட்டியிட்டிருந்தால், இந்த வெற்றிகளைப் பெற்றிருக்கவே முடியாது. ஆனால் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளின் ஒன்றிணைந்த ஆதரவுடன் தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது. தமிழ் மக்களின் உரிமைகளை ஜனநாயக வழிகளில் பெறும் பொருட்டே தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. இதில் ஒரு திடீர்த் திருப்பமாக தமிழரசுக் கட்சியால் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்பட்டு அதில் வெற்றியும் பெற்ற வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவராகப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண் டார். ஆரம்பத்தில் இந்த விடயம் தொடர்பாகப் பலரும் ஆச்சரியத்தை வெளிப்படுத்தினர். ஆனால், கட்சித் தலைமை இதில் நெகிழ்வுப் போக்கைக் காண்பித்ததால் பிரச்சினைகள் உருவாகவில்லை.

இதேவேளை, சில அரசியல் கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்துகொண்டு தமிழ் மக்கள்பேரவையின் உருவாக்கத்தில் பங்களித்தமைக்கான காரணமும் புரியவில்லை. ஏனென்றால் கடந்த பொதுத் தேர்தலின்போது, கூட்டமைப்பினரை மிகவும் மோசமாக விமர்சித்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினரும் தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகிக்கின்றனர். இவர்களின் செயற்பாடுகள் முற்று முழுதாகக் கூட்டமைப்புக்கு எதிரானதாகவே உள்ளன. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இவர்களால் ஓர் ஆசனத்தைக் கூடப்பெறமுடியவில்லை. கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட்டபோது மூன்று ஆசனங்கள் இவர்களுக்குக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற ரெலோ, புளொட் ஆகிய கட்சிகள் தமிழ் மக்கள் பேரவைக்கு ஆதரவு வழங்கிய போதிலும், கூட்டமைப்புக் குறித்து விமர்சனம் செய்வதில்லை. ஆனால், ஈ.பி.ஆர்.எல்.எவ். இதற்கு எதிர்மாறான நிலைப்பாட்டையே கடைப்பிடித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக அந்தக் கட்சியின் தலைவரான சுரேஷ் பிரேமச்சந்திரன் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தனைச் சீண்டிப் பார்ப்பதை ஒரு வழக்கமாகவே கொண்டுள்ளார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போதிய விருப்பு வாக்குகள் கிடைக்காமையால் அவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படவில்லை. தேசியப்பட்டியல் மூலமாவது நாடாளுமன்ற உறுப்பினராகலாம் என்ற அவரது எதிர்பார்ப்பும் நிறைவேறவில்லை. இதனால் கூட்டமைப்புத் தலைமை மீது அவர் கடும் வெறுப்பில் உள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் பழம்பெரும் அரசியல் தலைவருமான வீ.ஆனந்தசங்கரியும் தமிழ் மக்கள் பேரவைக்குத் தமது ஆதரவை வெளியிட்டுள்ளார்.

இதைவிட ஈ.பி.டி.பி கட்சியும் பேரணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளதுடன், தனியானதொரு ஊர்வலத்தையும் நடத்தியுள்ளது. இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேரணிக்கு முழு ஆதரவை வழங்கிய அதேவேளை, நழுவல் போக்கைக் கடைப்பிடித்தமையும் தெளிவாகத் தெரிந்தது.

ஒருசிலர் தமது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இந்தப் பேரணியை ஒழுங்குபடுத்தியதாகக் கூறுவோரும் இல்லாமலில்லை. ஆனால் இத்தகையவர்கள், மக்களின் நலன்களையும் ஒருகணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எவர் எதைக் கூறினாலும், தமிழ் மக்கள் இன்று ஓரளவு நிம்மதியுடன் தமது அன்றாட அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. கொடிய போரும், மோசமான அடக்க முறைகளும் ஓய்ந்து-ஓரளவு அமைதியான சூழ்நிலை நிலவி வருகிறது. ஆனால், தமிழர்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் ஏராளமாக உள்ளன. ஜனநாயக வழிகளில் போராடிய தமிழர்கள் பின்னர் ஆயுதமேந்திப் போரிட்டார்கள். ஆனால் அழிவுகள் தான் எஞ்சி நின்றன.

அவற்றின் மீது நின்று கொண்டு தான் அவர்கள் தமது மறு வாழ்வை ஆரம்பித்திருக்கிறார்கள். தென்பகுதியைச் சேர்ந்த இனவாதிகள் தமிழர்களுக்கு எதையும் வழங்கிவிடக்கூடாது என்பதில் உறுதியோடு செயற்படுகின்றனர். தமிழர்களின் ஒவ்வொரு அசைவையும் இனவாதத்துடன் நோக்குகின்றனர். 'எழுக தமிழ்' பேரணி கூட தென்பகுதியில் எதிர்மறையான உணர்வுகளைக் கிளப்பி விட்டது. வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனைக் கைது செய்யுமாறு கோசங்களும் அங்கு எழுந்துள்ளன.

ஆகவே, தமிழர்களுக்கு எதிரான இனவாதத் தீ மீண்டும் பரவுவதற்கு நாமே காரணமாக இருந்துவிடக்கூடாது. கடந்த காலங்களில் இளைஞர்களுக்கு உசுப்பேத்தியதால் ஏற்பட்ட பயங்கர விளைவுகளின் தாக்கங்கள் இன்னமும் மறைந்து விடவில்லை.

ஆகவே வேகத்தைவிட்டு விவேகத்துடன் செயற்படுவதற்குத் தமிழ் தலைவர்கள் முன் வர வேண்டும். உணர்ச்சிகரமான உரைகளால் பயனொன்றும் கிடைத்துவிடாது. ஆனால், அவற்றினால் ஏற்படக்கூடிய எதிர் விளைவுகளை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதைவிடத் தமது சுயலாபங்களுக்காக அப்பாவித் தமிழ் மக்களைப் பலிக்கடாவாக மாற்றி விடுகின்ற செயல்கள் இனியும் இந்த மண்ணில் தேவைதானா?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மூலம் லங்காதீப
தமிழில் வீ.எஸ்.ரீ

# அரசியலில் இரட்டை நிலைப்பாடு சகஜமானதொன்றே

சிங்கள மக்கள் எந்தச் சம்பவத்தையும் இரண்டு வாரங்களுக்கு மேல் மனதுக்குள் போட்டுப் புழுங்கிக் கொள்ளாது மறந்துவிடுவர். என விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் கூறியதாக குறிப்பிடப்படுவதுண்டு. அரசியல் ரீதியில், நபரொருவர், மற்றொருநபர் மீதான பழைய பகைமையை மறந்து நட்புப் பாராட்டும் சமயம் மேற்குறித்த கருத்துச் சுட்டிக் காட்டப்படுவதுண்டு. போரின்போது தமிழ் மக்களுக்கு பெரும் தீங்குகளை விளைவித்தார் என்ற மன வைராக்கியத்தில் 2010ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் மகிந்தவுக்கு வாக்களிப்பதில்லை என முடிவு செய்தனர். ஆனால் போரில் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க வியூகம் வகுத்துச் செயற்பட்டவர் அவ்வேளைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு பெருமளவில் தமது வாக்குகளை வழங்கி வைத்தனர். கூட்டு எதிர்க்கட்சியினர் பழைய சம்பவங்களை மறந்து விட்டார்களா? அல்லது மக்கள் பழையவற்றையெல்லாம் மறந்திருப்பார்கள் என எண்ணிச் செயற்படுகிறார்களா? என எண்ணத் தோன்றுகிறது. அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூனிடம் கூட்டு எதிர்க்கட்சியினர் கையளித்த மனு இதற்குப் பொருத்தமான உதாரணமாகக் கொள்ளத்தக்கது.

> இலங்கை தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் சபையில், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு ராஜபக்ச அரசு எதிர்ப்பு வெளியிட்டது. ஆனால், தீர்மானத்துக்கு அமைய உருவாக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதாக இரட்டை வேடம் போட்டது.

### இலங்கையில் மனித உரிமை நிலவரம் குறித்த பான் கீ-மூனின் பார்வை

குறித்த மனுவில், இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிட வேண்டாமென கூட்டு எதிர்க்கட்சியினரது அவரைக் கேட்டுக் கொண்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. எது எப்படியோ, சட்டம்-ஒழுங்கு என்பவற்றுக்கமைய, கூட்டு எதிர்க்கட்சியினரது நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள இயலும். சட்டமும்-ஒழுங்கும் எத்தகைய பரிமாணம் கொண்டதாயினும், சகல நாடுகளது இறைமை விடயத்தில் ஒரே வகையானதே. எந்தவொரு நாட்டுக்கும் மற்றுமொரு நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடும் உரிமை இருக்க இயலாது.

ஆனால், இது விடயத்தில் நடைமுறைத்தன்மை வேறுபாடு கொண்டதாகும். அமெரிக்க காங்கிரஸோ, அல்லது பிரித்தானிய நாடாளுமன்றமோ இன்னொரு நாட்டின் மனித உரிமை தொடர்பான விவகாரத்திலோ, வேறேதாவதொரு விவகாரத்திலோ தலையிடுவதென்பது குறித்த அந்த நாட்டுக்கு பாரதூரமானதொரு நிலையாகும். சில வேளை, குறிப்பிட்ட அந்த நாட்டுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கப்படும் நிலையும் ஏற்படக் கூடும் அல்லது போர்ப்பிரகடனத்துக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலையும் அந்த நாட்டுக்கு ஏற்படலாம். பலமிக்க நாடுகள் மீது, பலம் குன்றிய நாடுகளால் அழுத்தம் எதையும் மேற்கொள்ள இயலாது. பலமிக்க நாடுகள் ஏனைய நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து விமர்சித்தாலும், ஒரு சில நாடுகளின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, அந்த நாடுகளுக்கு எதிராக மட்டுமே நடவடிக்கை மேற்கொள்ளுகின்றன. இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் கடும் இறுக்கமான நிலைப்பாடு கொண்டிருக்கும் அமெரிக்கா, பலஸ்தீன மக்களை கடந்த பல ஆண்டுகளாக வாட்டி வதைத்துவரும் இஸ்ரேலுக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்வதில்லை. அந்த வகையில், பலமிக்க நாடுகள் மற்றும் ஐ.நா.சபை, இலங்கை தொடர்பாக முன்னெடுக்கும் செயற்பாடுகள் நியாயமற்றவை; இலங்கையின் உள்விவகாரங்களில் தலையீடு மேற்கொள்வது போன்றமைவதாக கூட்டு எதிரணி முன்வைக்கும் விமர்சனம் சரியானதே. ஆனால் தற்போதைய கூட்டு எதிரணித் தரப்பினரது முன்னைய ஆட்சிக்காலத்தில் இத்தகைய வெளிச்சக்திகள் இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடாது தடுக்கும் தைரியம் அவர்களுக்கு இருந்ததில்லை. தமது ஆட்சிக்காலத்தில் வெளிநாட்டுச் சக்திகள் இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிட அனுமதித்தது மட்டுமன்றி, தமது எதிராளிகள் அதிகாரத்தைத் தமது கைகளில் வைத்திருந்தபோது, அவர்களுக்கு எதிரான பலமிக்க நாடுகளை தலையிடுமாறு அவற்றுக்கு அழைப்பு விடுத்த சந்தர்ப்பங்களும் இருக்கவே செய்தன.

ஐ.நா.சபையின் செயலாளர் நாயகம், விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட நாள்களில் இலங்கைக்கு முதல் தடவையாக பயணம் மேற்கொண்டதுடன், அவ்வேளைய ஜனாதிபதி மகிந்தவுடன் இணைந்து கூட்டறிக்கையொன்றையும் வெளியிட்டிருந்தார். போரின்போது இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து பொறுப்புக்கூறும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென அப்போது ராஜபக்ச, பான் கீ-மூனுடன் இணங்கியிருந்தார். போர் இடம்பெற்ற வேளையில், குறித்த பகுதியில் வாழ்ந்த பொதுமக்கள் எவரும் பாதிக்கப்படவில்லை என்பதே அவ்வேளையில் ராஜபக்ச அரசின் நிலைப்பாடாக அமைந்திருந்தது. ஆனால், பான் கீ-மூனுடன் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கை மூலம் மகிந்த சர்வதேச தலையீடு மற்றும் அழுத்தங்களுக்கு அடிபணிந்து விட்டிருந்ததாகவே கொள்ளப்பட்டது.

அது மட்டுமன்றி, இலங்கை தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் சபையில், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு ராஜபக்ச அரசு எதிர்ப்பு வெளியிட்டது. ஆனால், தீர்மானத்துக்கு அமைய உருவாக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதாக இரட்டைவேடம் போட்டது. அத்தோடு, ராஜபக்ச அரசு, வெளிநாடுகளதும், ஐ.நா.சபையினதும் அழுத்தங்களுக்குக் கீழ்ப்பணிந்து செயற்பட்ட அதே வேளை, வெளிப்படையாக அவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தது. அந்த வகையில் பான் கீ-மூனின் அண்மைய இலங்கைப் பயணத்தின்போது கூட்டு எதிரணி அவரிடம் கையளித்த மனு, இலங்கை விடயத்தில் வெளியார் தலையிடைக் கடுமையாகக் கண்டிக்கும் முயற்சியாகக் கொள்ளத்தக்கது. எது எப்படியோ, இன்று உலகின் எந்தவொரு சிறு நாட்டாலும், இந்த வெளியார் தலையீடுகளினின்றும் தவறிச் செயற்பட இயலாது. அந்தவகையில் இலங்கையில் ராஜபக்ச தரப்புத்தான், அல்லது மைத்திரிபால தரப்புத் தான் அதிகாரத்தில் இருந்தாலும், இந்த வெளியார் தலை யீட்டிலிருந்து எவராலும் தப்பித்துவிட இயலாது என்பதே உண்மையாகும்.

---

## புத்துயிர் பெற வைக்க முயலக் கூடாதா?

கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக இருபத்தைந்து கிளைகளுடன் இயங்கி மக்களுக்குச் சேவையாற்றிய மானிப்பாய் பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இன்று பெரும்பாலான தனது கிளைகளை மூடிவிட்டு ஐந்து கிளைகளுடனும் சிறுதொகை ஊழியர்களுடனும் தொடர்ந்து இயங்குமா என்ற நிலையில் உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருக்கிற நிலையைப்பார்க்க வேதனையாகவுள்ளது. இன்றைய நவீன யுகத்தில் சங்கத்தை நவீன மயப்படுத்தி, தனியார் வர்த்தக நிலையங்களுக்குப் போட்டியாக இயங்க வைக்க வேண்டிய இந்த ப.நோ.கூ.சங்க நிர்வாகம் தனியாரை ஊக்குவிப்பதுபோல தனது கிளைகளை படிப்படியாக மூடுவிழா செய்வதை எந்தக் கூட்டுறவாளனும் ஏற்கமாட்டான். கூட்டுறவுத்தந்தை அமரர் வீ.வீரசிங்கம் வாழ்ந்ததும் அன்னாருக்கு உருவச் சிலை வைத்து கௌரவித்ததுமான மானிப்பாய் கிராமத்திலுள்ள ப.நோ.கூ.சங்கத்துக்கா இந்தக் கதி? இது குறித்து இந்தப் பகுதி மக்கள் விழிப்படைய வேண்டும்.

தற்போதைய பணிப்பாளர் சபையிலும் ஒற்றுமையின்மையும் கருத்து வேறுபாடுகளும் நிலவுவதால்தான், இந்த நிலை என மக்கள் பேசிக் கொள்கிறார்கள். ஆகவே கூட்டுறவு ஆணையாளர், வடமாகாணக் கூட்டுறவு அமைச்சர், வடமாகாண முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இது விடயத்தில் உடன் தலையிட்டு தற்போதைய பணிப்பாளர் சபையைக் கலைத்து, பிரதேச செயலரின் தலைமையில் ஆளுமைமிக்க குழுவை நியமித்துப் பூட்டிய கிளைகளை மீளத் திறந்து சங்கத்தைச் சீராக நடத்த முன்வருவார்களா?

ஆ.சி.கணேசவேல், ஜே.பி.
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

## வேலைவாய்ப்பை வழங்குவதே உகந்தது

அண்மையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் வர்த்தகப் பிரிவில் கல்வி கற்கச் சென்ற கிளிநொச்சியைச் சேர்ந்த மாணவனொருவன் பகிடிவதையினால் பாதிக்கப்பட்டதனால் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு விரக்தியுடன் வீட்டில் முடங்கியிருப்பதை 'உதயன்' பத்திரிகை மூலம் அறியக் கூடியதாக இருந்தது.

இதைப் பார்த்த வடக்கு மாகாண சபையினர் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தினர் மீண்டும் குறித்த மாணவனுக்குப் பல்கலைக்கழகத்தில் இணைந்து படிப்பதற்கு வழிவகுக்குமாறு ஒரு ஆலோசனை வழங்கியிருப்பதையும் உதயன் வெளியிட்டிருந்தது.

பகிடிவதையென்ற பேரில் ஒருவரைத் துன்புறுத்தி அதில் இன்பம் காணும் கொஞ்சமேனும் மனச்சாட்சியற்ற சில மாணவர்கள் அங்கே இருக்கையில் எப்படி இந்த மாணவன் மீண்டும் கல்வியைத் தொடர முடியும்? இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்றதாக அமையும்.

இதனால் இந்த மாணவனின் மனநிலை சீரடைவதற்காக மாகாண சபையினரே வடக்கு மாகாண சபையின் நிர்வாகத்துக்குட்பட்ட அலுவலகமொன்றில் அந்த மாணவனது தகுதிக்கு ஏற்ப ஒரு வேலை வழங்குவதே பொருத்தமானதாகும். அதுவே அந்த மாணவனின் குடும்பத்தினரின் மனவேதனையைப் போக்கவும் வழி கோலலாம்.

சி.காசிப்பிள்ளை
கொடிகாமம்

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் ஆகியவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். ... விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ... வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. ... விவரங்கள் இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாவருடம் 60 லட்சம் மக்கள் காற்று மாசரல் சாவடைகின்றனர்

உலக அளவில் வருடாவருடம் 60 லட்சம் மக்கள் காற்று மாசடைதலால் சாவடைகின்றனர் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது.

சுவிற்சர்லாந்து தலைநகர் ஜெனிவாவில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர்கள்சவட்த்தில்வைத்து, உலக சுகாதார அமைப்பின் சுற்றுச்சூழல் மற்றும் ஆரோக்கியம் சார்ந்த பிரிவின் தலைவரான மரியா நீரா குறித்த விடயங்களை வெளிப்படுத்தினார். உலகில் வாழும் 92 சதவீதம் மக்கள் கெட்ட காற்றையே சுவாசித்து வாழ்கின்றனர். நாம் நினைப்பதுபோல் இல்லாமல் பெருநகரங்களில் வாழும் மக்களைவிட, புறநகர் மற்றும் கிராமப்புறங்களில் வாழ்பவர்கள்தான் காற்று மாசுபாட்டால் அதிகமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர். காற்றுமாசினால் மட்டும் ஆண்டுதோறும் சுமார் 60 லட்சம் மக்கள் சாவடைகின்றனர். குறிப்பாக, வடகிழக்கு ஆசியாவின் சீனா, மலேசியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளும், பசிபிக் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள நாடுகளும் காற்று மாசுபாட்டால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என மரியா நீரா மேலும் தெரிவித்தார். (ம)






# சார்க் மாநாட்டைப் புறக்க நான்கு நாடுகள் கூட்டாக

புதுடெல்லி, செப். 29

பாகிஸ்தானில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள சார்க் மாநாட்டை புறக்கணிக்க இந்தியா, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகள் முடிவெடுத்துள்ளன.

காஷ்மீர் எல்லையில் உள்ள யூரி இராணுவ முகாம் மீது ஆயுததாரிகள் அண்மையில் நடத்திய தாக்குதலில் 19 இந்திய இராணுவச் சிப்பாய்கள் சாவடைந்தனர். குறித்த ஆயுதக் குழு பாகிஸ்தானுடன் நேரடித் தொடர்புடையது எனக் குறிப்பிட்ட இந்தியா, பாகிஸ்தானுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நியூயோர்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தில் பாகிஸ்தான் ஒரு பயங்கரவாத நாடு என்று குறிப்பிட்ட இந்தியப் பிரதமர் மோடி, அந்த நாடு தனிமைப்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்றும் காட்டமாகத் தெரிவித்திருந்தார். இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ் தனது உரையிலும் இவ்வாறானதொரு கருத்தையே வலியுறுத்தியிருந்தார். இதைத்தவிர பாகிஸ்தானை தனிமைப்படுத்த இந்தியா பல திட்டங்களைப் பரிசீலித்து வந்தது. இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குச் செல்லும் சிந்து நதியை இடைமறிக்கவும், பாகிஸ்தானுக்குக் கொடுத்துள்ள சிறப்பு அந்தஸ்தைத் திரும்பப்பெறவும் மோடி தொடர்ந்து சிந்தித்து வருகிறார். இந்த நிலையில் பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமபாத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள சார்க் மாநாட்டை புறக்கணிப்பதாக இந்தியா அறிவித்தது.

பாகிஸ்தான் ஒரு பயங்கரவாத நாடு. ஆசியாக் கண்டத்திலிருந்து உலகுக்கு பயங்கரவாதத்தை அது ஏற்றுமதி செய்கிறது. அந்த நாட்டில் உரிய பாதுகாப்புக்க களது பாதுகா பெறவுள்ள ச பதாக இந்தி கருத்தை ஏற் களுக்காக த தாக அறிவி ஆப்கானிஸ் கொள்ளவில் இந்த எதிர்ப் கைவிடப்பு திப்படுத்தப்ப மூநாட்டை இலங்கை. மூன்று நாடு தொடர்பாக உள்ளன.

## தென்கொரியா

# ஊழலுக்கு எதிராக கடுமையான சட்டம்

சியோல், செப். 29

தென்கொரியாவில் ஊழலுக்கு எதிராக மிகக் கடுமையான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. பரிசுப் பொருளாக இருந்தால் 45 டொலர்களுக்குக் குறைவாகவும், நன்கொடையாக இருந்தால் 90 டொலர்களுக்குக் குறைவாகவும் இருக்க வேண்டும் என்று சட்டம் உருவாக்கப்பட்டது.



2014 ஆம் ஆண்டு, தென் கொரியாவின் பொதுப்பணித்துறை நிறுவனம் சார்பாக நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 78 சதவீத அரச உத்தியோகத்தர்களும், 90 சதவீத நாடாளுமன்ற உறுப்பினர்களும் இலஞ்சம் வாங்குவதாக முடிவுகள் பெறப்பட்டன. இதனையடுத்து நீண்ட பரிசீலனையின் பின்னர் தென் கொரிய அரசு இந்த அதிரடிச் சட்டங்களை அறிவித்தது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சட்டத்தின் விளக்கம் நேற்று வெளியிடப்பட்டது. இதன்படி பரிசுப் பொருளாக இருந்தால் 45 டொலர்களுக்குக் குறைவாகவும், நன்கொடையாக இருந்தால் 90 டொலர்களுக்குக் குறைவாகவும் இருக்கவேண்டும் என்றும், அரச அதிகாரிகள், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், நிறுவன உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு உணவு விடுதியில் 27 டொலர்களுக்கு அதிகமாகச் செலவளிக்க முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டது. இதனை மீறுபவர்களுக்கு 3 வருட சிறைத் தண்டனை மற்றும் குற்றப்பணம் அறவிடப்படும் என தென்கொரிய அரசு நேற்று அறிவித்தது. (ம-ரி4)



நாய்களுக்கான விநோத உடைப்போட்டியொன்று ஆஸ்திரேலியாவில் அண்மையில் நடைபெற்றது. மெல்பேர்ன் நகரில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் நூற்றுக்கணக்கான நாய்கள் கலந்துகொண்டன. நாய்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன. (ம-ரி4)

# முழக்கத்தை இரட்டிப்பாக்கினார் டொனால்ட் ட்ரம்ப்

வொஷிங்டன், செப். 29

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் பிரதான வேட்பாளர்களில் ஒருவரான டொனால்ட் ட்ரம்ப், தேர்தல் முழக்கங்களை இரட்டிப்பாக்கியுள்ளதாக அமெரிக்க ஊடகங்கள்செய்திவெளியிட்டன.



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக ஹிலாரியும் குடியரசுக் கட்சியின் வேட்பாளராக டொனால்ட் ட்ரம்பும் உள்ளனர். இவர்கள் இருவருக்கும் இடையில் நேற்று முன்தினம் நேரடி விவாதம் நடைபெற்றது. இதில் ஹிலாரி சிறப்பாகச் செயற்பட்டார். ட்ரம்ப் சில இடங்களில் தடுமாறினார். அமெரிக்க ஜனாதிபதியாக வர ஹிலாரிக்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகக் கருதப்பட்டது. இதனையடுத்தே ட்ரம்ப் தனது தேர்தல் முழக்கங்களை இரட்டிப்பாக்கியுள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ட்ரம்ப், ஹிலாரி இருவருக்கும் இடையிலான விவாதத்தை 84 மில்லியன் மக்கள் தொலைக் காட்சியில் நேரலையாகப் பார்த்தனர். அமெரிக்கத் தேர்தல் வரலாற்றில் இது ஒரு சாதனையாகப் பதிவாகியது. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...ங்கணிக்க
# ...க முடிவு

...ாட்புக்கள் இல்லை. எனவே நாட்டின் பிரதிநிதி ... பாதுகாப்புக் கருதியே பாகிஸ்தானில் நடை ...வுள்ள சார்க் மாநாட்டை தாம் புறக்கணிப் ... இந்தியா அறிவித்தது. இந்தியாவின் ...தை ஏற்ற பங்களாதேஷ், குறித்த காரணங் ...காக தாமும் மாநாட்டைப் புறக்கணிப்ப ...அறிவித்தது. இந்த நிலையில் பூட்டான், ...கானிஸ்தான் நாடுகள் தாமும் கலந்து ...ள்ளவில்லை என நேற்று அறிவித்தன.

... எதிர்ப்புக்களையடுத்து, சார்க் மாநாடு ...விடப்படும் திட்டமும் இருப்பதாக உறு ...திப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. ...ாட்டை நடத்தும் பாகிஸ்தானைத் தவிர ...ங்கை, மாலைதீவு, நேபாளம் ஆகிய ...று நாடுகளே நடப்பு வருட சார்க் மாநாடு ...டர்பாக நேரடித் தொடர்புடையனவாக ...ளன. (ம-ரி4)

## இத்தாலி

# மிகப்பெரிய கப்பல்களை தடை செய்ய கோரிக்கை

ரோம், செப். 29

இத்தாலியின் கடலெல்லைகளினூடாக மிகப்பெரிய சொகுசுக் கப்பல்களைப் பயணிக்க அனுமதிக்கக்கூடாது என்று தெரிவித்து ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இத்தாலியின் நகர்ப்புறங்கள், அளவில் பெரிய கப்பல்களின் வருகைகளால் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக வெனிஸ் நகரக் கால்வாய்களில் அதிகளவான மாசடைதல்கள் ஏற்படுகின்றன. இதனால் பெரிய கப்பல்களின் வருகையைத் தடைசெய்ய வேண்டும் என்று தெரிவித்து வெனிஸ் நகர மக்களும், ஆர்வலர்களும் போராட்டங்களை நடத்தினர். சிறிய படகுகளில் சென்ற அவர்கள் பெரிய கப்பலொன்றை இடைமறித்தே தமது ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தார்கள்.

கடந்த 2014 ஆம் ஆண்டுவரை 96 ஆயிரம் தொன் எடைக்குக் குறைந்த கப்பல்களே இத்தாலியின் கடலெல்லைகளினூடாகவும், வெனிஸ் நகரக் கால்வாய்களினூடாகவும் பயணிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் கடந்த வருடம் குறித்த விதிமுறை கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)





## ஈரானுக்கு எதிராக யேமன் முறைப்பாடு

யேமனிய அரசாங்கத்துக்கு எதிராகப் போரிட்டுவரும் ஹூதி போராளிக் குழுவுக்கு ஈரானிய அரசு ஆயுதங்களை வழங்கி வருவதாக தெரிவிக்கப்படும் விடயம் தொடர்பாக விசாரணை நடத்துமாறு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையிடம் முறையிடவுள்ளதாக, யேமனிய அயலுறவுத்துறை அமைச்சர் அப்டெல் மலெக் அல்-மெக்லாபி நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

சியா முஸ்லிம் பிரிவான ஹூதி போராளிகள், யேமனிய அரசுக்கு எதிராகப் போராடி வருகின்றனர். அந்தப் பிரிவுக்கு, சியா முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஈரான் அரசு, ஆதரவளித்து வருகிறது. ஹூதி போராளிகளுக்கான ஆயுதம், ஈரானிலிருந்தே வருகிறது. இதை மறைக்க முடியாது. சில ஆயுதங்கள், சவூதி – யேமனிய எல்லையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையிடம், ஆதாரங்களுடன் குறித்த விடயம் தொடர்பாக முறையிடவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# நன்றியுள்ள பெண்குயின்

பிரேஸிலியா. செப். 29

பிரேஸிலில் பெண்குயின் ஒன்று தன்னைக் காப்பற்றிய நபரின் இல்லத்துக்கு வருடாந்தம் வந்து செல்வது பன்னாட்டு ஊடகங்களின் கவனத்தைப் பெற்றது.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ கடற்கரைப் பகுதியில் கடந்த 2011 ஆம் ஆண்டு பெண்குயின் ஒன்று காயமடைந்து இருந்துள்ளது. குறித்த பெண்குயினை ஜோ பெரீரா என்ற நபர் தனது இல்லத்துக்கு எடுத்துச் சென்று டின்டிம் எனப் பெயரிட்டு பல நாள்களுக்கு மருத்துவ உதவிகள் செய்து குணமடைய வைத்துள்ளார். பின்னர் ரியோ டி ஜெனிரோ கடற்கரையில் கொண்டு சென்று விட்டுள்ளார். அதன் பின்னர் பருவ காலங்களின் போது, ஒவ்வொரு முறையும் பெரீராவை சந்திக்க 5 ஆயிரம் மைல்கள் பயணம் செய்து அவரது வீட்டுக்கு டின்டிம் சென்று வருகிறது. ரியோ ஊடகங்களால் தகவலை அறிந்த விஞ்ஞானிகள் ஒரு பென்குயின்தான் மீண்டும் மீண்டும் வருகிறதா என்று பார்ப்பதற்காக டின்டிமின் உடலில் அடையாளமிட்டு அனுப்பிவைத்தனர். தற்போது மீண்டும், குறித்த அடையாளத்துடன் பென்குயின் வருகை தந்ததை அடுத்து விஞ்ஞானிகள் வியந்துள்ளனர். தனது உயிரைக் காத்தவருக்கு நன்றி தெரிவிப்பதற்காக டின்டிம் வருவதாகத் தெரிவித்த விஞ்ஞானிகள், இருப்பினும் அது எவ்வாறு குறித்த வீட்டைச் சரியாகக் கணித்து வைத்துள்ளதென்பது புரியாத புதிராக உள்ளதாகத் தெரிவித்தனர். (ம-ரி4)



# தாய்வானை மீண்டும் சுழற்றியது சூறாவளி

## 2 வாரங்களில் 3 ஆவது தடவையாக

பீஜிங், செப். 29

தாய்வானில்நேற்றுமுன்தினம் 230 மைல் வேகத்தில் கடும் சூறாவளி ஒன்று தாக்கியுள்ளது. குறித்த சூறாவளியால் 4 பேர் சாவடைந்தனர். 524 பேர் காயமடைந்தனர்.

மெகி எனப் பெயரிடப்பட்ட குறித்த சூறாவளியால் தாய்வானின் வடக்குக் கடற்கரைப் பிரதேசத்திலேயே கடும் பாதிப்பு ஏற்பட்டது. பாடசாலைகள், வணிக வளாகங்கள் என்பவற்றுக்கு நேற்று அரசு விடுமுறை வழங்கப்பட்டது. 27 லட்சம் வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது. சூறாவளி வீசிய 6 மணிநேரங்களில், நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால் பெரிய அளவான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக அவசர முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

சாவடைந்தவர்களின் எண்ணிக்கையும், காயமடைந்தவர்களின் எண்ணிக்கையும் மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.

கடந்த இரு வாரங்களில் தாய்வானை மூன்று சூறாவளிகள் பதம்பார்த்துள்ளன. (ம-ரி4)



# உலக வங்கியின் தலைவராக ஜிம் யாங் கிம் மீண்டும் தெரிவு

உலக வங்கியின் தலைவராக ஜிம் யாங் கிம் நேற்று மீண்டும் தெரிவானார்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் உலக வங்கியின் தலைவர்களை அவ்வங்கியில் அதிகப்படியான பங்குகளை வைத்திருக்கும் அமெரிக்காதான் தொடர்ந்து அறிவித்தும் நியமித்தும் வருகிறது. கடந்த 2012 ஆம் ஆண்டு




தென்கொரியாநாட்டைச்சேர்ந்த ஜிம் யாங் கிம் உலக வங்கியின் தலைவராக அறிவிக்கப்பட்டார். இவரது பதவிக் காலம் இன்னும் சில நாள்களில் நிறைவடையவுள்ள நிலையில், அடுத்த நான்கு வருடங்களுக்கும் இவரையே உலக வங்கியின் தலைவராக நியமிப்பதாக அமெரிக்கா அறிவித்தது. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தில் சுபிட்சம் நிலவும்



## புரட்டாதி மாத எண்ணியல் பலன்கள்

**1, 10, 19, 28 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு**
அடக்கத்தோடும், அன்புடனும் பழகும் ஒன்றாம் எண் அன்பர்களே! இந்த மாதம் தைரியமாக எந்தக் காரியத்தையும் செய்து முடிப்பீர்கள். சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். வாகனங்களை ஓட்டிச் செல்லும்போது கவனம் தேவை. தொழில், வியாபாரம் தொடர்பான விவகாரங்களில் தாமதம் ஏற்படலாம். புதிய ஒப்பந்தங்கள் கிடைப்பதற்கு அலைய வேண்டியிருக்கும் இருக்கும். பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்டுவீர்கள். பெண்களுக்கு மனத்துணிவு அதிகரிக்கும். மாணவர்கள் கூடுதல் கவனம் செலுத்தி பாடங்களைப் படிப்பது நல்லது. விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் போது கவனம் தேவை.

**2, 11, 20, 29 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு**
நூதனமான காரியங்களில் ஈடுபாடு கொண்ட இரண்டாம் எண் அன்பர்களே! நீங்கள் அனைவரையும் கவர்ந்து இழுப்பதில் திறமையானவர்கள். இந்த மாதம் எந்தக் காரியத்தையும் செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். பகைவர்களால் ஏற்படும் சிறு தொல்லைகளைச் சமாளிக்க வேண்டி இருக்கும். புதிய நண்பர்களுடன் பழகும்போது கவனம் தேவை. தொழில், வியாபாரம் நிதானமாக நடக்கும். கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். பெண்கள் அடுத்தவர்களின் பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. தெய்வ பக்தி அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியைப் பற்றிய கவலை ஏற்பட்டு நீங்கும். பாடங்களை ஒரு முறைக்கு இருமுறை படித்துப் புரிந்துகொள்வது நல்லது.

**3,12,21,30 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு**
எந்த இக்கட்டான நிலையையும் சமாளிக்கும் மூன்றாம் எண் அன்பர்களே! நீங்கள் எடுத்த முடிவில் மாறாத குணம் உடையவர்கள். இந்த மாதம் ஆக்கப்பூர்வமான யோசனைகள் தோன்றினாலும் அதைச் செயற்படுத்துவதில் தாமதம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் வேலைப்பளு இருக்கும். சக ஊழியர்கள் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவி ஒருவருக்கொருவர் அனுசரித்துப் போவது நன்மை தரும். பிள்ளைகளின் நலனில் அக்கறை தேவை. பெண்கள் வீண் பேச்சைக் குறைப்பது நல்லது. எடுத்த காரியங்களைச் செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகலாம். மாணவர்களுக்கு: அடுத்தவர்களுக்கு உதவிகள் செய்வதில் கவனம் தேவை. பாடங்களைப் படிப்பதில் தீவிரம் காட்டுவீர்கள்.

**4, 13, 22, 31 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு**
பார்வையாலேயே மற்றவர்களைப் பணியவைக்கும் திறமையுடைய நான்காம் எண் அன்பர்களே! நீங்கள் சுறுசுறுப்பானவர்கள். இந்த மாதம் எதிர்ப்புகள் விலகும். பணவரத்து திருப்தி தருவதாக இருக்கும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். வாகனங்களை ஓட்டிச் செல்லும்போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாகப் பணிகளை மேற்கொள்வது நல்லது. பதவி உயர்வு, நிலுவையில் உள்ள பணம் வருவது தாமதப்படும். குடும்பத்தில் ஏதேனும் குழப்பம் ஏற்படலாம். கணவன் மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை வந்து நீங்கும். உறவினர்களிடம் நிதானமாகப் பேசுவது நல்லது. பிள்ளைகளை அனுசரித்துச் செல்வது நன்மை தரும். பெண்கள் எதிலும் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது. பயணங்களின் போது உடமைகளைக் கவனமாக பார்த்துக் கொள்வது நல்லது. மாணவர்களுக்குச் சக மாணவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். பாடங்களைப் படிப்பதில் இருந்த தடைகள் நீங்கி ஆர்வமாகப் படிப்பீர்கள்.

**5, 14, 23 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு**
பேச்சில் தெளிவும் அஞ்சா நெஞ்சமும் கம்பீரமான பேச்சும் உடைய ஐந்தாம் எண் அன்பர்களே! நீங்கள் எதற்கும் கலங்காதவர்கள். இந்த மாதம் வீட்டை விட்டு வெளியில் தங்க நேரிடும். களைப்பு, பித்தநோய் உண்டாகலாம். வீண்கவலை இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். எடுத்த வேலையைச் செய்து முடிப்பதற்குள் பல தடங்கல்கள் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களால் சஞ்சலம் உண்டாகலாம். கணவன், மனைவிக்கிடையில் கருத்து வேற்றுமை வராமல் இருக்க மனம்விட்டு பேசுவது நல்லது. பிள்ளைகள் நலனில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. *(தொடரும்)*

# அன்னை தந்த வரம் வாழ்வகம்



**உடுவிலூர் கலா**

*விழியிலார்க்கு ஒளியூட்ட*
*விடிவெள்ளியாய் வந்துதித்த*
*மாவிட்டபுரத்து மகள் மாநிலத்து அன்னை*
*வாழ்வகமதை உருவாக்கி வானகம் சென்றாரே*

பிறந்தவர் யாவரும் இறப்பது மானிட நியதி. பிறந்தவர் அனைவருக்கும் புண்ணியம் செய்வதுமில்லை. புகழ் சேர்ப்பதுமில்லை. தன்னலமில்லாச் சேவை செய்யும் ஒரு சிலரே இறந்தும் இறவாப் புகழ் கொள்கின்றனர். 1937 ஆம் ஆண்டு தைமாதம் 11 ஆம் திகதி மாவிட்ட புரத்து தையற்பிள்ளையின் ஏழாவது மகளாக பிறந்தவள் அன்னை அன்னலட்சுமி. இவர் தனது ஆரம்பக்கல்வியை காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியிலும் பின் வீமன்காமம் மகாவித்தியாலயத்திலும் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும் கற்றார். 1958 இல் திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியராக இணைந்தவர். 1960 இல் களுத்துறை சாகிராக் கல்லூரியில் ஆசிரியப்பணியை பொறுப்பேற்றுக் கொண்டார். 1968 இல் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் ஆசிரியப்பணியைத் தொடர்ந்த போது கண்பார்வையற்ற ஒருவரைச் சந்திக்க நேர்ந்ததால் அன்னையவர்களின் வாழ்வில் பெரிய திருப்பம் ஏற்பட்டது.

விழியிலர்க்கு ஒளியூட்ட திடம் கொண்டார். அதற்காக கனவு கண்டார். ஒளியூட்டும் சேவைக்காக அவரது மனம் அகல விரிந்தது. இதன் விளைவாக 1971 இல் மகரகம ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விசேட கல்வி டிப்ளோமா கற்கை நெறியை சிங்கள மொழி மூலம் மேற்கொண்டார். விழிப் புலனற்றவர்களோடு சாதாரணமாணவர்கள் இணைந்து கல்வி கற்கும் திட்டம் 1972 இல் அறிமுகப்படுத்தப்பட்டபோது தென் பகுதியில் பலா் இத்திட்டத்தில் பணியாற்ற முன்வந்த போதும் யாழ்ப்பாணத்திலும் [illegible] தான் அன்னையவர்கள் இ[illegible]னை மேற்கொண்டார். கைதடி நவீலட் பாடசாலை மட்டுமே விழிப் புலனற்றோர்க்கு ஆரம்பக்கல்வியை அளித்து வந்தது. அதையும் ஒரு சிலரே பெற்று அதற்கு அப்பால் எதையும் செய்ய முடியாதவர்களாய் இருந்தனர்.

விழிப்புலனற்று நாட்டுக்கும் வீட்டுக்கும் பயனற்றவர்களாய் நலிவுற்றுப்போய் அடைக்கப்பட்டிருந்த விழிப்புலனற்றவர்களின் கல்விக் கதவைத் திறக்கும் அரும்பணி அன்னையால் ஆரம்பிக்கப்பட்டது. கிராமம் கிராமமாக வீடு வீடாக நடை நடையாகத் திரிந்து பார்வையற்ற பிள்ளைகளைத் தேடிப்பிடித்து சாதாரண பாடசாலைகளில் சேர்த்தார். அன்னையின் பணியில் அவரது முதல் மாணவி மங்களராணி கிறிஸ்தோபர் எட்டு ஆண்டுகளில் பட்டதாரியானார். ஆசிரியர் பணியின் ஓய்வு காலத்தில் 1980 இன் இறுதியில் விழியிழந்த பிள்ளைகள் தங்கியிருந்து கல்விகற்க கவி நிலைகொண்ட இல்லம் ஒன்றை அமைக்கும் எண்ணத்தோடு வாழ்வகம் என்னும் ஒளியகத்தை உருவாக்கினார். வாழ்வகத்துக்கு உதவிக்கரம் நீட்டியவர்களில் சிவத்தமிழ்ச் செல்வி அப்பாக்குட்டி தங்கம்மாவும் ஒருவராவார்.

1990 இல் அன்னையவர்கள் ஆசிரியப்பணியில் இருந்து ஓய்வு பெற்று வாழ்வகத்துக்கென்று முழுவதுமாய் தன்னை அர்ப்பணித்து தனியொருவராய் எத்தனையோ இடப்பெயர்வுகள் இன்னல்கள் மத்தியிலும் சேவையாற்றி சொந்த இடத்தில் வாழ்வகத்தை நிலைநிறுத்தி வெற்றி கண்டார்.

இதன் பின் இறுதி நாள்கள் சமீபமாவதை உணர்ந்து வாழ்வகத்தின் ஒரு மூலையில் தன்னை அடக்கம் பண்ணும் படி கேட்டுக்கொண்டார். 2006ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அன்னையை அவரது விருப்பின்படி அடக்கம் செய்தனர். பத்து ஆண்டுகள் கடந்த நிலையில் வாழ்வகம் இன்றும் அன்னையை அன்புடன் நினைவு கூருகிறது. அவரது பணியைத் தொடர்ந்து அவரது மாணவன் ரவீந்திரனும் அவரது மனைவி மோகனவதனியும் வாழ்வகத்தை முழுமையாக நிர்வாகம் செய்கின்றனர். வாழ்வகத்து மாணவனான அல்போன்ஸ் சட்டத்தரணியாக இன்று சேவை செய்கின்றார். இன்னும் எத்தனையோ சாதனைகள் படைத்த மாணவர்கள் உள்ளனர். தற்போது 45 பிள்ளைகள் வாழ்வகத்தில் உள்ளனர். இவர்களது பலதரப்பட்ட தேவைகளை நிறைவேற்ற பெரிய மனது படைத்தவர்கள் முன்வரவேண்டும். புலம் பெயர் தமிழர் விடுமுறையைக் கழிக்க இங்கு வரும்போது கசூரினா, காங்கேசன் கடற்கரைகளை நாடி மதுவைச் சுவைத்து மகிழ்ந்திருக்கும்போது வாழ்வகப் பிள்ளைகளையும் ஒருதடவை பார்த்து அவர்களது தேவைகளில் பங்கெடுக்க வேண்டும். திருமணம், பிறந்தநாள், பூப்புனிதநீராட்டுவிழா என மண்டபங்களில் வாரியிறைக்கும் பணத்தில் ஒரு சிறு தொகையையாவது வாழ்வகப் பிள்ளைகளின் தேவைக்குக் கொடுத்து உதவலாம் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணியமுள்ள கல்வி முகாமைத்துவம்



அன்ரனி பீற்றர்

உலகம் உய்வதற்கான வழியைத் தெய்வப்புலவர் பலவாறு உரைத்துள்ளார். அவற்றிலே மனித வாழ்வானது ஆரம்பமாவது குடும்பத்திலே இருந்து என்பதனால், 45 வது குறளிலே கீழ்வருமாறு கூறுகின்றார்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

அன்பும் அறனும் உள்ளவாழ்வே, பயனுள்ள வாழ்வாகும். அது தவறிய வாழ்க்கை முறையினால் பகையும் அநீதியான செயல்களுமே மேலோங்கி நிற்கும். குடும்பத்தின் பண்புகளே பிள்ளைகளில் வெளிப்படும்.

இதனாலே தான் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற முதுமொழி பொருளுடைத்தானது. கல்விக்கு 'அச்சாணியாக இருப்பது மேற்சொன்ன முதுமொழியாகும். அதனால்தான் சொன்னார்கள் அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது' என்று கடவுள் தான் கல்வியைத் தருகின்றார். பெற்றோர்கள், ஆசிரியர்கள் மூலமாக என்பது புறந்தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் கருத்துப் போல் தென்படுநிலையே காணப்படுகின்றது இங்கு.

அறிவை ஆள்பவன்தான் ஆசிரியன். ஆசிரியன் இல்லாமல் அறிவியலோ, விஞ்ஞானமோ, கண்டுபிடிப்புக்களோ, தொழில்நுட்பயுகமோ, உருவாகவில்லை என்பதை எவரும் புரிந்து கொள்ள வேண்டும். ஆசிரியம் என்பது அவ்வளவு வல்லமையுள்ள பொருள் நிறைந்த சொல்லாகும். அதனுடைய அத்திபாரம் குடும்பத்திலும், பாடசாலையிலும் இடப்படுவதால் பின்னர் எதையெதையோ எல்லாம் ஆளும் தன்மையுள்ளதாக இருக்கின்றது. இதனைப் புரிந்து கொள்ளாத நிலையிலே, ஆசிரியரும், பெற்றோரும் பிள்ளைகளின், மாணவர்களின் நகைப்புக்கு ஆளாகின்றார்கள்.

> "எந்த ஒரு நிறுவனமும் சிறப்பான முறையில் இயங்குவதற்கு அதனுடைய வெளியீடுகளை பயனுள்ளவைகளாக முன்னிலைப்படுத்துவதற்கு சில சட்ட திட்டங்கள், கடமை, பொறுப்புக்கள், அதிகாரங்கள், முறைமைகள் வழங்கப்படுகின்றபோதே முறையான முகாமைத்துவத்தையும், நடைமுறைப்படுத்துவதையும் பங்குகொள்ளலையும் விளைவையும் எதிர்பார்க்கலாம். இவைகள் நீக்கப்படுகின்ற, அல்லது மாற்றப்படுகின்ற, அல்லது குறைக்கப்படுகின்றபோது அந்த நிர்வாகச் செயற்பாடு பலவிதமான குறைபாடுகளை எதிர்நோக்கியதாகவும் எதிர்மாறான விளைவுகளைக் கட்டுப்படுத்த முடியாத தான்தோன்றித்தனமான செயல்களே நிகழ ஏதுவாகும்."

பாடசாலைகளில் கல்வி முகாமையாளர்கள் அதிபரும், ஆசிரியர்களும்தான். உயர்கல்வி முறையிலே விரிவுரையாளர், துறைத் தலைவர், பேராசிரியர்கள், துணைவேந்தர், வேந்தர் என்றும்-கல்வியில் உயர் முகாமையாளர்களும் கண்டுபிடிப்பாளர்கள், விஞ்ஞானிகள், தொழில் நுட்பவல்லுநர் என்றும் கூறப்படுபவர்கள் எல்லாம், கல்விக்கு அதிபதிகளாக இருப்பவர்கள்தான். அத்திபாரத்தை சிதைத்துவிட்டு, பயனுறுதிமிக்க கட்டடத்தைக் கட்ட முடியாது. எம்மத்தியில் அத்திபாரங்கள் சிதைக்கப்படும் செயற்பாடுகள் கனகச்சிதமாக நகர்த்தப்பட்டுக் கொண்டு வருகின்றன. தமிழன் கல்வியால் உயர்ந்து நின்றவன். கடின உழைப்பால் உயர்ந்து நின்றவன். கடந்து சென்ற பல ஆண்டுகளால் நிலை இழந்து போனான். போனதற்கு பல காரணங்கள் சொல்லலாம். போகாமல் இருந்த நாங்கள் தான் எம்நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

உலகில் கல்வி முறைமைகள், நாட்டுக்கு நாடு வேறுபட்டுக் காணப்படுகின்றன. எம் நாட்டு முறைகள் பல வேறு நாடுகளுக்குப் பொருந்தாது. அதேபோல் வேறுநாட்டு முறைகள் எம் நாட்டுக்கும், எம் பண்பாட்டுக்கும் பொருத்தமில்லாதவைகள். அங்குள்ளவற்றை இங்கு கொண்டுவந்து நடைமுறைப் படுத்துகின்றபோது மாணவர் உரிமைச் சட்டங்கள் பேன்ற செயற்பாடுகளால் பல முரண்பாடுகள் மற்றும் பண்பாட்டை மேவும் செயல்கள் ஏற்படவும் காரணமாகின்றன. பள்ளிக் கூடம் என்ற சிறிய பொருள் உணர்த்தும் சொல் மாற்றப்பட்டு, பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் என்று பன்மைத்துவ ஆளுமைகளை வளர்க்கின்ற பரந்துவிரிந்த பொருள் தரும் நிலையங்களாகக் கல்வியைக் கொடுக்கும் இடங்கள் மாற்றப்பட்டுள்ளன. இருந்த போதிலும் நாட்டின் கல்வி முறைக்கும் பண்பாட்டு முறைகளுக்கும் தொடர்புள்ளவைகளாகவே கல்வியின் அணுகு முறைகள் பின்பற்றப்பட்டுக் கொண்டு வந்தன.

பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் நாட்டின் ஆளுமைமிக்கவர்களை உருவாக்குகின்ற, அல்லது உருவாவதற்கு உதவுகின்ற வழிகாட்டிகளாக கல்வி நிறுவகங்களை முகாமை செய்கின்ற தலைவர்களும் வழிகாட்டிகளும் தமது கடமைகள், பொறுப்புக்களைப் பொறுப்புடன் முன்னெடுத்துக் கொண்டே இருக்கின்றார்கள்.

எந்த ஒரு நிறுவனமும் சிறப்பான முறையில் இயங்குவதற்கு அதனுடைய வெளியீடுகளை பயனுள்ளவைகளாக முன்னிலைப்படுத்துவதற்கு சில சட்ட திட்டங்கள், கடமை, பொறுப்புக்கள், அதிகாரங்கள், முறைமைகள் வழங்கப்படுகின்றபோதே முறையான முகாமைத்துவத்தையும் நடைமுறைப்படுத்துவதையும்-பங்குகொள்ளலையும் விளைவையும்-எதிர்பார்க்கலாம். இவைகள் நீக்கப்படுகின்ற அல்லது மாற்றப்படுகின்ற அல்லது குறைக்கப்படுகின்றபோது, அந்த நிர்வாகச் செயற்பாடுகள் பலவிதமான குறைபாடுகளை எதிர்நோக்கியதாகவும் எதிர்மாறான விளைவுகளைக் கட்டுப்படுத்த முடியாத தான்தேன்றித்தனமான செயல்களே நிகழ ஏதுவாகும். இப்படியான ஒரு நிலையே இன்று எம்மண்ணின் கல்விச் செயற்பாடுகளிலே கோலோச்சுகின்றது, இது வருந்தத்தக்கது.

முன்னைய காலங்களில் நாம் கற்றது கைமண்ணளவு என்று கண்ணியமும்-பண்பாடும் மிக்க எம் மண்வளத்தை மதித்துப் போற்றுகின்ற உத்தியோக உயர்வும், விவசாயச் செழிப்பும் எமது கல்வியால் பெற்று வாழ்வை மகிழ்வாக வாழ்ந்தோம். ஆனால், இன்று எமது பிள்ளைகள் அவர்கள் விரும்பும் அல்லது அவர்களுக்காக கல்வி கற்கவில்லை. எமது கல்வியை நிர்ணயிப்பது உலகவங்கியே- உலக வங்கியின் உதவியினால் (பணத்தினால்) தரவுகளுக்கு பரீட்சயங்களுக்கு பயில் களங்களாக எமது கல்விச்சாலைகள் மாறியுள்ளமையால், கல்வி எம்மேல்-எம்பிள்ளைகள்மேல் சுமத்தப்பட்ட ஒன்றாக இருக்கின்றது.

ஆயிரம் புதுமைகள், தொழில்நுட்பங்கள் வந்து சேர்ந்தாலும், உலக மயமாக்கலுக்கு ஈடுகொடுக்க வேண்டும் என்றுற நோக்கோடே எம் பழைமைகளின் தொன்மைகளை முற்றாக கைகழுவிவிட்டு விட நினைக்கின்றமையும், எம் பிள்ளைகளின் இன்றைய வெளிப்பாடுகள், பின்பற்றல்கள், அனுபவிப்புக்கள் அடாவடிகளும் காரணமாகவும் இருக்கலாம்.

எம்மவர்கள் எதையும் இழந்தாலும், கல்வியை இழக்கமாட்டார்கள் என்று-எமக்குள்ளே ஒரு வேகம் இருக்கவே செய்கின்றது. ஆனாலும், வேகம் விவேகமில்லாமல் இருக்கின்றபோது, கானல்நீராக மாறி விடாமல் பார்த்துக் கொள்ளுவது, பெற்றோர் ஒவ்வொருவருக்கும் பெரிய பொறுப்பாகும். கல்விச் சாலைகளும்-ஆசான்களும் காலத்தால் கரைந்த போகின்றவர்கள் அல்ல; கண்ணியமுள்ள மாணவர்களே கல்வியால் உயர்வார்கள். கண்ணையும் (கல்விஉயிர்) மண்ணையும் (உடல்.தமிழ்) மதிப்போம். காலம் எமக்கு உயர்வைத் தரும்.

*கட்டுரையாளர்;*
*(ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வீண்கர்வம் கொள்ளேல்

அது வசந்த காலத்தின் ஆரம்பம். காட்டில் உள்ள மரங்கள் எல்லாம் பூத்துக்குலுங்கின. இயற்கையின் வனப்பில் அங்குள்ள பறவை இனங்கள் எல்லாம் குரலெழுப்பியபடி இயற்கை எழிலை ரசித்துக் கொண்டாடிக் கொண்டிருந்தன. கிளி, மைனா, புலுணி, சிட்டுக் குருவி, காட்டுக் கோழி, குயில், காடை எனப் பறவைகள் ஒன்று கூடியிருந்தன. குயிலுக்கு மிகவும் பிடித்தமானது வசந்த காலம் என்பதால் அதுவும் தன்னை மறந்து கூவிக் கொண்டிருந்தது. குயிலின் குரலிசையில் தம்மை மறந்து விட்ட ஏனைய பறவையினங்கள் அமைதியாக அந்த இசையில் மெய் மறந்திருந்தன.



அப்போது அங்கு வந்த மயில் ஒன்றுக்கு ஏனைய பறவை இனங்கள் குயிலின் குரலிசையை ரசித்துக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் பொறாமையாக இருந்தது. குயிலை மட்டமாகப் பார்த்தது. என்னதான் குரல் வளம் இருந்தாலும் அதன் நிறத்தைப் பார்த்தீர்களா. இந்தக் கருமைநிறம் கொண்ட குயில், என் அழகிய தோற்றத்தின் முன் எம்மாத்திரம். இயற்கை எனக்குத் தந்த இந்தத் தோகையும் அதில் உள்ள வர்ணங்களும் உங்களில் எவருக்கு உள்ளது என்றபடி தோகையை விரித்து ஆடியது. உண்மைதான் என்பதுபோல் பறவை இனங்களும் மயிலின் நாட்டியத்தில் தம்மை மறந்து லயித்திருந்தன. கர்வமான மயிலின் கேலிப் பேச்சுக்கு மறு பேச்சுப் பேசாமல் அடக்கத்துடன் மௌனமாகி விட்டது குயில். சூரியன் மறையும் வரை ஆடிக் களைத்து விட்ட மயில் மேலும் அதிக கர்வத்துடன் பூத்துக் குலுங்கிய மரம் ஒன்றின் கிளையில் அமர்ந்து உறங்க ஆரம்பித்தது.

பொதுவாக மயில்கள் பச்சை மரங்களில் உறங்க மாட்டா. அவை பட்டுப்போன மரங்களிலேதான் உறங்கும். ஏனெனில் மயிலுக்குப் பகையான தேவாங்கு எனும் விலங்குக்கு மயில் இறைச்சியில் பிரியம் அதிகம். இரவில் மரங்களில் உறங்கும் மயில்களை தேவாங்கு ஒசை எழுப்பாது மெதுவாக ஏறிச் சென்று பிடித்துவிடும். பட்ட மரங்களில் தேவாங்கு ஏறும்போது அந்த மரத்தில் "சரக் சரக்" என எழும்பிய ஓசையினால் மயில்கள் எச்சரிக்கை அடைந்து இருளிலும் பறந்து தப்பிச் சென்றுவிடும். தேவாங்கிடமிருந்து தமது பாதுகாப்புக்காக பட்டுப் போன மரங்களில் இரவில் துயில் கொள்வதை மயில்கள் வழக்கமாக்கிக் கொண்டிருக்கும்.

ஆடிக்களைத்து விட்ட மயிலோ கர்வம் மிகுதியால் தன்னை மறந்து போய் பச்சை மரத்தில் உறங்கி விட்டது. அப்போது அந்த இருளிலும் தனது கொள்ளிக் கட்டை போல் மினுமினுக்கும் கண்களால் மயில் உறங்கிக் கொண்டிருப்பதை அவதானித்த தேவாங்கு ஒன்று மயிலைப் பிடிப்பதற்காக அந்த மரத்தில் ஏறத் தொடங்கியது. தற்செயலாக அருகில் நின்ற மரத்திலிருந்து இதை அவதானித்த குயில் அவல ஒலியை எழுப்பியது. இதைக் கேட்ட ஏனைய பறவைகளும் ஒன்று சேர்ந்து ஒலி எழுப்பியதால் விழித்துக் கொண்ட மயில் தேவாங்கு தன்னைப் பிடிப்பதற்காக வருவதைத் தெரிந்து கொண்டு அங்கிருந்து பறந்து சென்று தனது உயிரைக் காப்பாற்றிக் கொண்டது. மயிலின் கர்வமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போனது.

அழகில் தன்னை மிஞ்சி எவரும் இல்லை என்ற மயிலின் கர்வம் அதன் அழிவுக்குக் காரணமாகிவிட்டது.

வீ. ஜீவா.



# வெண்ணிலா

வெள்ளை நிற வெண்ணிலா
விண்ணில் ஆடும் வெண்ணிலா
பாலைப் போன்ற வெண்ணிலா
பந்தைப் போன்ற வெண்ணிலா
நீலவான வீதியில்
நித்தம் வரும் வெண்ணிலா
வட்டமான வெண்ணிலா
வெளிச்சம் தரும் வெண்ணிலா
அம்மா கதைகள் பல சொல்வார்
அத்தனையும் உன் கதையே
வா வா என்றே தினம் கேட்டேன்
வரவில்லை நீயும் எனைத்தேடி
விண்கலத்தில் ஏறி ஒரு நாள்
வருகின்றேன் நான் உனைத் தேடி

# வரலாற்றில் இன்றைய தினம்

1717 - அன்ரிகுவா கௌதமாலாவில் ஏற்பட்ட நில நடுக்கமொன்றில், நகரின் கட்டடங்கள் பல சேத மடைந்ததையடுத்து, தலைநகரை வேறு இடத்துக்கு மாற்ற அதிகாரிகள் தீர்மானம்.
1789 - அமெரிக்கப் போர்த் திணைக்களம் முதன் முதலாக உருவாக்கப்பட்டு, பல நூற்றுக் கணக்கான நிரந்தர இராணுவத்தினரை உள் வாங்கிப் பலப்படுத்தப்பட்டது.
1911 - ஒட்டமான் எம்பயர் மீது இத்தாலி போரைப் பிரகடனப்படுத்தியது.
1949 - எதிர்கால சீனமக்கள் குடியரசுக்கான பொது வேலைத் திட்டம், சீன கம்யூனிஸ்ட் கட்சியினரால் வரையப்பட்டது.
1950 - தாய்வான் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம் நடைமுறைக்கு வந்தது.
1960 - சோவியத் யூனியனின் தலைவர் நிகிடா குருஷேவினால் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்துக்கு இடையூறு விளைவிக்கப்பட்டது.
1971 - அரபு லீக்குடன் ஓமான் இணைந்து கொண்டது.
1972 - சீனக் குடியரசுடனான ராஜதந்திர உறவை ஜப்பான் முறித்துக் கொண்டிருந்த நிலையில் மக்கள் சீனக் குடியரசுடன் ஜப்பான் மீண்டும் ராஜரீக உறவை ஏற்படுத்திக்கொண்டது.
1991 - ஹெய்ட்டியில் இராணுவப் புரட்சி ஏற்பட்டது.
2002 - பாதுகாப்புத் துறையை புனரமைக்கும் யோசனைகள் ஜனாதிபதியால் நிராகரிப்பு.
- இலக்கிய கர்த்தா வரதருக்கு சாஹித்திய ரத்னா பட்டம்.
2006 - அவசர உதவிகள் மக்களைச் சென்றடைய அரசும் புலிகளும் ஆவனசெய்யவேண்டுமென ஐ.நாவின் விசேட பிரதிநிதி வேண்டு கோள்.
- கிழக்கு மக்களின் எதிர்காலத்தை அந்த மக்களே தீர்மானிப்பர் என ஜனாதிபதி மகிந்த பிரித்தானியப் பாதுகாப்புத் தரப்பினருடனான கலந்துரையாடலின்போது தெரிவிப்பு.
2013 - நைஜீரியாவில் விவசாயக் கல்லூரியில் போக்கோ ஹராம் உறுப்பினர்களால் 42 பேர் கொல்லப்பட்டனர்.





# வர்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிணக்குத் தீர் கருவியாக மத்தியஸ்த சபைகள்

வீ.எஸ்.எஸ் தனஞ்சயன்

மக்கள் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான அல்லது பிணக்குகளை தீர்த்துக் கொள்வதற்கான வழிகளில் ஒன்றாக மத்தியஸ்த சபைகள் காணப்படுகின்றன. இது இலங்கையில் நடைமுறையில் உள்ள ஒரு சிறப்பான வழியாகும். மத்தியஸ்தம் என்பது ஒரு தனிமனித அல்லது குழுவொன்றின் மூலம் பிணக்காளர்கள் தமது வேற்றுமைகளை அகற்றி பரஸ்பர உடன்பாடொன்றுக்கு வர வழைக்கப்படும் ஒரு செயன்முறை ஆகும்.

மக்களின் சிறிய பிரச்சினைகளை பயனுறுதியான முறையில் தீர்க்கும், ஒரு மாற்றுக் காரணிக்கான தேவை உணரப்பட்டபோது, மக்களுக்கு செலவு குறைவான முறையில் சிறிய பிணக்குகளைத் தீர்த்து, நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை அகற்றும் நோக்குடன் 1988 ஆம் ஆண்டின் 72ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டத்தின்படி, மத்தியஸ்த சபைகள் (இணக்க சபைகள்) நாடு முழுவதும் நிறுவப்பட்டன. அனேகமாக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் ஒரு மத்தியஸ்த சபை நிறுவப்பட்டுள்ளது. நீதி அமைச்சினது வழிகாட்டலின் கீழ் ஓய்வுபெற்ற நீதிபதிகள், சமூகத் தலைவர்களைக் கொண்டது. மத்தியஸ்த சபை



ஆணைக்குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு அதன் கீழ் மத்தியஸ்த சபைகள் பரிபாலனம் செய்யப்படுகின்றன.

மத்தியஸ்தம் நீதிமன்றங்களின் நீதி வழங்கும் செயன்முறையில் இருந்து வேறுபட்டது. மத்தியஸ்தம் பிணக்காளர்களை சுயமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தீர்வை மிகுந்த பரஸ்பர ஒத்துழைப்புடன் பெற்றுக்கொள்ள உதவுகின்றது. பிணக்காளர்கள் தாமாக பிணக்குகளை தீர்த்துக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில், நலன்சார் கலந்தாலோசனைகளை ஏற்படுத்தி, பிணக்காளர்களை ஒரு சுமுகமான தீர்வுக்கு வர ஊக்கப்படுத்துகின்றார்கள் மத்தியஸ்தர்கள். சரியான புரிந்துணர்வு இன்மை, விளக்கமின்மை, அதிகமான பிணக்குகளுக்கு அடிப்படையாக அமைகின்றன. நானா? நீயா? என்ற மன உணர்வு பிணக்குகளுக்கு இன்னமும் தீனி போட்ட பிணக்குகளை பெருப்பித்து விடுகின்றது. பிணக்காளர்கள் திறந்த மனத்துடன் தமது பிரச்சினைகளை எடுத்துக்கூறி கலந்துரையாட ஒரு வெளி ஏற்படுத்தப்படுமிடத்து அது அதிகமான பிணக்குகளை சுமுகமாகத் தீர்த்துவிடும். அவ்வாறான வெளியை, சூழலை, சந்தர்ப்பத்தை மத்தியஸ்த சபைகள் ஏற்படுத்திக் கொடுத்து, பிணக்குகளை தீர்த்து வைக்கின்றன.

சிவில் பிணக்குகள் மற்றும் குற்றவியல் பிணக்குகள் இரண்டுமே மத்தியஸ்த சபைகளுக்கு ஆற்றுப்படுத்தப்படக்கூடியவை. சிவில் பிணக்குகள் எனின் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் அல்லது கடன், சேதஈடு அல்லது கோரிக்கை ஆயின் குறித்துரைக்கப்பட்ட 250,000 ரூபா பணப் பெறுமதிக்கு மேற்படாத பிணக்குகள் மத்தியஸ்த சபைகளால் மத்தியஸ்தத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். குற்றவியல் பிணக்குகளில் 1988ஆம் ஆண்டின் 72ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் இரண்டாம் பிரிவில் குறித்து ரைக்கப்படும் குற்றங்கள் மத்தியஸ்தத்துக்கு ஆற்றுப்படுத்தப்படக்கூடியவை. தண்டனைச் சட்டக்கோவையில் குறிப்பிடப்படும் பொதுவிடச் சண்டை (157), வேண்டுமென்று கடுங்காயம் விளைவித்தல் (314, 315, 325, 316, 326), உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய செயலால் காயம் விளைவித்தல் (323), எவரேனும் ஆளை முறைகேடாக தடுத்து வைத்திருந்தால் அல்லது அடைத்து வைத்திருந்தால் (323, 333) தாக்குதல் அல்லது குற்றமுறையான பலாத்காரத்தை பிரயோகித்தல் (343, 346, 348, 349) ஆதனத்தை நேர்மையீனமாகக் கையாளுதல் (386) சொத்தழிப்பை ஏற்படுத்தல் (409, 410) தனியொருவருக்கு இழப்பேற்படுத்தும் வண்ணம் கால்நடைகளைக் கொல்லல் (411) குற்றமுறையான அத்துமீறல் (433), வீட்டினுள் அத்துமீறல் (434), குற்றமுறையான அச்சுறுத்தல் (486) ஆகிய சிறு குற்றங்கள் மத்தியஸ்தத் துக்கு ஆற்றுப்படுத்தப்படக்கூடி யவை.

1988ஆம் ஆண்டின் 72ஆம் இலக்க மத்தியஸ்த சபைகளுக்கு சட்டத்தின் மூன்றாம் பிரிவில் குறித்துரைக்கப்படும் விடயங்கள், மத்தியஸ்த சபைகளுக்கு பாரப்படுத்தப்பட முடியாத குறிப்பாக ஒரு பிணக்காளர் அரசாக இருத்தல், பிணக்காளர் அரசிடம் பணம் அல்லது ஏதும் கொடுப்பனவுகள் கோரும் விடயங்கள், ஏதாவது குற்றத்துக்காக சட்டமா அதிபரினால் வழக்குத்தாக்கல் செய்யக்கூடிய விடயங்கள், மத்தியஸ்த சபைகளுக்கு பாரப்படுத்தப்பட முடியாது.

பிணக்குகளின்போது பிணக்காளர்கள் நேரடியாக மத்தியஸ்த சபைகளுக்கு முறைப்பாட்டை வழங்க முடியும். கிராம சேவகர் மூலம் அல்லது தபால் மூலம் எதிர்த் தரப்பினருக்கு அழைப்பு விடுத்து, மத்தியஸ்த சபை-மத்தியஸ்த செயற்பாட்டை ஆரம்பிக்கும். குடியியல் பிணக்குகளில் 60 நாள்களுக்குள்ளும் குற்றவியல் குற்றங்களாயின் 30 நாள்களுக்குள்ளும் மத்தியஸ்த சபை தனது தீர்ப்பை வழங்கும். இது தவிர பொலிஸ் மற்றும் நீதிமன்றங்களாலும் பிணக்குகள் மத்தியஸ்த சபைகளுக்கு பாரப்படுத்தப்படும். மத்தியஸ்த சபைகளின் நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட பிணக்குகள் நேரடியாக நீதிமன்றங்களுக்கு செல்லுமிடத்து நீதிமன்றங்கள் மீள அந்தப் பிணக்குகளை மத்தியஸ்த சபைகளுக்குப் பாரப்படுத்தும். பிணக்குகள் சுமுகமாக தீர்க்கப்படுமிடத்து, தீர்வு காணப்படாமைக்கான சான்றிதழும் பிணக்குகள் தீர்க்கப்படாதவிடத்து தீர்வுகாணப்படாமைக்கான சான்றிதழும் வழங்கப்படும். தீர்வு காணப் பட்டமைக்கான சான்றிதழுடன் பாதிக்கப்பட்ட தரப்பினர் நீதிமன்றத்தில் வழக்கை ஆரம்பித்து நீதிகோர முடியும்.

கட்டுரையாளர்: சட்டத்துறை மாணவன்
யாழ்.பல்கலைக்கழகம்.

# சொந்த மண்ணில் சொதப்பலாமா?

நடப்பு வருடத்துக்கான முரளிக் கிண்ணத் தொடர், கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து, கடந்த ஞாயிற்றுக் கிழமை நிறைவடைந்தது. வழக்கம்போல வடக்கிலேயே ஆட்டங்கள் நடைபெற்றன. வடக்கிலிருந்து களமிறங்கிய அணிகள் மிக மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்தி தொடரிலிருந்து வெளியேறின.

யாழ். மத்திய கல்லூரி அணி, யாழ். மாவட்ட இணைந்த அணி, கிளிநொச்சி - முல்லைத்தீவு இணைந்த அணி, வவுனியா, மன்னார் மாவட்ட இணைந்த அணி என்பன வடக்கு மாகாணத்திலிருந்து களமிறங்கின.

யாழ். மத்திய கல்லூரி அணி தனது லீக் ஆட்டங்களில் கொழும்பு சென். ஜோசப் கல்லூரி அணியிடமும், கொழும்பு சாகிராக் கல்லூரியிடமும் தோல்வியடைந்தது. தனது இறுதி லீக் ஆட்டத்தில் மொனராகல இணைந்த அணியை ஒரு ஓட்டத்தால் வெற்றிபெற்றது. மூன்று ஆட்டங்களில் இரண்டில் தோல்வியடைந்ததையடுத்து அந்த அணி தொடரிலிருந்து வெளியேறியது.

யாழ். மாவட்ட இணைந்த அணி தனது லீக் ஆட்டங்களில் முதலாவதில் கொழும்பு றோயல் கல்லூரியிடம் தோல்வியடைந்தது. இரண்டாவது ஆட்டத்தில் மலையக இணைந்த அணியை வீழ்த்தியது. சீனிகம இணைந்த அணிக்கெதிரான ஆட்டத்திலும் தோல்வியடைந்ததையடுத்து, அந்த அணி தொடரிலிருந்து வெளியேறியது.

கிளிநொச்சி - முல்லைத்தீவு இணைந்த அணி தனது முதலாவது லீக் ஆட்டத்தில் கொழும்பு நாலந்த கல்லூரியிடம் வீழ்ந்தது. இரண்டாவது லீக் ஆட்டத்தில் சென். அலோசியஸ் கல்லூரியை வீழ்த்தியது. மூன்றாவது ஆட்டத்தில் களுத்துறை மகா வித்தியாலயத்திடம் தோல்வியடைந்ததையடுத்து, அந்த அணியும் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டது.

வவுனியா, மன்னார் மாவட்ட இணைந்த அணி, தனது முதலாவது லீக் ஆட்டத்தில், கண்டி கிங்ஸ்வூட் கல்லூரியிடமும், இரண்டாவது ஆட்டத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் இணைந்த அணியிடமும், மூன்றாவது ஆட்டத்தில் மகிந்த கல்லூரி அணியிடமும் தோல்வியடைந்து வெளியேறியது. மொத்தம் 16 அணிகள் முரளிக் கிண்ணத் தொடரில் கலந்துகொண்டன. வடக்கிலிருந்து நான்கு அணிகள் சென்றன. இவற்றில் ஒன்றுகூட அரையிறுதிக்குத் தகுதி பெறவில்லை.

ஆட்டங்கள் அனைத்தும் கிளிநொச்சி மத்திய கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நடைபெற்றன. கிரிக்கெட்டைப் பொறுத்தவரை




சொந்த மண், பழக்கப்பட்ட ஆடு களம் என்பன வெற்றிக்கான மிகமுக்கிய காரணிகளில் சில. இவை முரளிக் கிண்ணத் தொடரில் வடக்கு அணிகளுக்கு சாதகமாகவே இருந்தன. ஆனாலும், நான்கில் ஒரு அணியேனும் அரையிறுதிக்குத் தகுதிபெறாதமை மிகுந்த ஏமாற்றமே.

இலங்கை அணியில் தமிழ் வீரர்கள் உள்வாங்கப்படவில்லை. திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுகின்றனர் என்று-எம்மில் பலர், அவ்வப்பொழுது கொந்தளிப்பது நினைவிருக்கலாம். எமது தரப்பை நியாயப்படுத்த எமக்கும் உறுதியான பிடிமானம் வேண்டுமல்லவா? அதற்கான வாய்ப்புக்களை இவ்வாறான தொடர்களே அமைத்துத் தருகின்றன. அவற்றைத் தவறவிட்ட பின்னர், தமிழ் வீரர்கள் இலங்கை தேசிய அணியில் உள்வாங்கப்படாமல் புறக்கணிக்கப்படுகின்றனர் என்று-தெரிவிப்பது எந்த வகையில் ஏற்கக்கூடியது? இன்னும் சொல்லப்போனால் எம்மைப் புறக்கணிப்பதற்கான வாய்ப்புக்களை நாமே ஏற்படுத்திக் கொடுக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# சர்வதேச திரைப்பட விழாவில் பங்கேற்கும் 'இறுதிச்சுற்று'

சர்வதேச திரைப்பட விழா ஒன்றில் பங்கேற்க 'இறுதிச்சுற்று' படம் தெரிவாகியுள்ளது. மாதவன் நடிப்பில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு தமிழில் வெளிவந்து, வெற்றிநடை போட்ட படம் இறுதிச் சுற்று. குத்துச்சண்டையை மையப்படுத்தி வெளிவந்த இந்தப் படத்தில் நிஜ குத்துச்சண்டை வீராங்கனை ரித்திகா சிங் நடித்திருந்தார். சுதா கொங்கரா பிரசாத் என்பவர் இயக்கியிருந்தார். சந்தோஷ் நாராயணன் இசையமைத்திருந்தார். இந்தப் படம் வெளியாகி ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றாலும், இந்தப் படத்துக்குச் 'சர்வதேச அங்கீகாரம் கிடைக்காதது படக்குழுவினரை மிகுந்த சோகத்தில் ஆழ்த்தியிருந்தது. இந்த நிலையில், "தற்போது இந்தப் படத்துக்குச் சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது. டோக்கியோவில் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாவில், திரையிட இந்தப் படம் தெரிவாகியுள்ளது. இதற்காகப் படக்குழுவினர் விரைவில் டோக்கியோ பயணப்பட உள்ளனர்" என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** மனதில் குழப்பம் உருவாகி மறையும். தொழில், வியாபார நடைமுறை சீராக, விடா முயற்சி தேவை. பெண்கள் சிக்கனமாக இருப்பது நல்லது. உணவு விடயத்தில் விழிப்புடன் இருக்கவும்.

**இடபம்:** கூடுதல் வேலைப்பளு ஏற்படலாம். சூழ்நிலையின் முக்கியத்துவம் உணர்ந்து செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், லாபம் சுமாராக இருக்கும். திடீர் வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம்.

**மிதுனம்:** அனைவரிடமும் பாசத்துடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள் கலையம்சம் நிறைந்த பொருள் வாங்குவர். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**கடகம்:** எதிலும் அதிக முயற்சி தேவைப்படலாம். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்ததை விட வருமானம் குறையும். பெண்கள், வீட்டுச் செலவுக்கு பணம் இன்றி திண்டாடலாம். வாகனப் பயணத்தில் மிதவேகம் நல்லது.

**சிங்கம்:** முயற்சிக்குரிய பலன் முழுமையாக வந்து சேரும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்தியளிக்கும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கன்னி:** சிலர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற தாமதம் செய்வர். தொழில், வியாபாரத்தில், லாபம் சுமாரான அளவில் இருக்கும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும். உணவுப் பொருளை தரமறிந்து உண்பது நல்லது.

**துலாம்:** நண்பரின் உதவியால் முக்கிய செயல் நிறைவேறும். சமூகத்தில் நற்பெயர் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி மறையும். வருமானம் அதிகரிக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** மதிநுட்பத்துடன் நடந்து கொள்வீர்கள். முயற்சிக்கான நன்மை, முழு அளவில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பெண்கள் தாய் வீட்டாரின் அன்பைப் பெறுவர்.

**தனுசு:** உறவினரின் பாசம் கண்டு வியப்பீர்கள். தொழில், வியாபாரம் சார்ந்த சிரமங்களை, கவனத்துடன் சரிசெய்வது நல்லது. புதிய முயற்சி வெற்றி பெறும். அரச வேலையில் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மகரம்:** பேச்சில் நிதானம் தேவை. போட்டி பந்தயத்தில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரத்தில், குழப்பங்களைத் தாமதமின்றி சரி செய்யவும். லாபம் சுமார். பயன் அறிந்து, வெளியூர்ப் பயணம் மேற்கொள்ளவும்.

**கும்பம்:** முன்யோசனையுடன் செயற்பட்டு பிரச்சினையை தவிர்ப்பீர்கள். நண்பர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபார வருமானம், சீராக இருக்கும். பிள்ளைகளின் வளர்ச்சிக்காகப் பாடுபடுவீர்கள்.

**மீனம்:** மனதில் புத்துணர்ச்சி மேலோங்கும். கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வியத்தகு அளவில் முன்னேற்றம் உருவாகும். காணாமல் தேடிய பொருள் கைக்கு வந்து சேரும்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | 2 | | | | | | |
| | | | | 8 | | 6 | | |
| | | | 1 | | | 8 | 7 | |
| | 4 | | | | | 9 | | |
| | 8 | | | | 6 | | | 3 |
| 1 | | | | 5 | 3 | | | |
| 9 | | | | | | 4 | 5 | |
| 6 | | 5 | | | 1 | | | |
| | 2 | | | | | | | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 6 | 4 | 7 | 2 | 1 | 9 | 8 |
| 9 | 4 | 7 | 3 | 1 | 8 | 2 | 6 | 5 |
| 1 | 8 | 2 | 6 | 5 | 9 | 3 | 4 | 7 |
| 6 | 2 | 8 | 9 | 4 | 1 | 5 | 7 | 3 |
| 7 | 3 | 4 | 8 | 6 | 5 | 9 | 2 | 1 |
| 5 | 1 | 9 | 7 | 2 | 3 | 4 | 8 | 6 |
| 4 | 9 | 1 | 5 | 8 | 6 | 7 | 3 | 2 |
| 8 | 7 | 5 | 2 | 3 | 4 | 6 | 1 | 9 |
| 2 | 6 | 3 | 1 | 9 | 7 | 8 | 5 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்) இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப் பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டி யதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

"நீ மனுசனா? மிருகமா?" என்டு கேட்டா கோபப்படுகிற ஆளுங்க...



அதே, "நீ சிங்கம் டா... நீ புலிடா..." என்டு சொன்னால் சந்தோசப்படுகிறாங்கள்.

"டாக்டர் ஏன் என்னோட இரண்டு கண்ணுக்கும் ஆபரேஷன் பண்ணியிருக்கீங்க?" "இது பண்டிகைக் காலம் என்கிறதால புது ஆஃபர் போட்டிருக்கிறோம்"



ஒரு கண் ஆபரேஷன் செஞ்சா இன்னொரு கண்ணுக்கு இலவசம்...!



பசங்க 'பைக்'கில வேகமா போகும் போது 'சாவுகிராக்கி' என்று சொல்லுற உலகம்...

பொண்ணுங்க 'ஸ்கூட்டி'லை போகும்போது மட்டும் 'பார்த்துப் போம்மா என்டு' சொல்லுது.

உன் புருசன் பேர் என்னம்மா?

புருசன் பேரை மனைவி சொல்றது மரியாதை இல்லைங்க....!

சரி, அவரைக் கூப்பிடுங்க..!

அந்த சனியன் ஊருக்க மேயப் போயிருச்சு. வீட்டிலை எங்கே தங்குது...



WhatsApp
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாசிப்பழ ரசம்



### தேவையான பொருள்கள்

அன்னாசி - 4 துண்டுகள்
புளி ஒரு சிறிய எலுமிச்சம் பழ அளவு
தண்ணீர் - 250 மில்லி லீற்றர்
ரசப் பொடி - ஒரு தேக்கரண்டி
மிளகு - சீரகத்தூள் - கால் தேக்கரண்டி
வேக வைத்த பருப்பு - ஒரு கப்
கடுகு - கால் தேக்கரண்டி
எண்ணெய் - தேவையான அளவு
கறிவேப்பிலை, உப்பு - தேவையான அளவு.
கொத்தமல்லி - தேவையான அளவு

### செய்முறை:

புளியை தண்ணீர் விட்டுக் கரைத்து, ரசப் பொடி, உப்பு சேர்த்து, அன்னாசியை பொடியாக நறுக்கிப் போட்டு, நன்றாக கொதிக்க விடவும்.

வேக வைத்த பருப்பை நன்கு மசித்து கரைத்து விட்டு கடுகு, கறிவேப்பிலை, கொத்தமல்லி, மிளகு-சீரகத்தூள் தாளித்து, சிறிது பெருங்காயத் தூள் சேர்த்து தாளித்து இறக்கவும். அன்னாசி ரசம் தயார்.



## நாளை

புரட்டாதி-14
வெள்ளிக்கிழமை -30.09.2016
திதி:அமாவாசை பி.இ.05.32
நட்சத்திரம்: உத்தரம் மு.இ.10.22
ராகுகாலம்: 10.32-12.02 வரை
சுபநேரம்: 06.02-07.32 வரை
அமாவாசை விரதம்
மஹாளயபஷ முடிவு



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 500 | 700 | 800 | 800 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 500 | 600 |
| கணவாய் | 600 | 700 | 400 | 600 | 600 | 800 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 600 | 500 | 500 |
| சுறா | 500 | 600 | 500 | 800 | 800 | – | – |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 600 | 500 | – |
| விளை | 650 | 600 | 300 | 600 | 450 | – | 500 |
| முரல் | 300 | 400 | 300 | 500 | 400 | – | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 450 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 600 | – | 600 |
| ஓரா | 400 | 400 | 300 | – | 500 | – | 400 |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 350 | 150 | 370 |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 400 | 300 | – |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 120 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 300 | 300 | 150 |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 400 | 300 | 200 |
| மதனம் | 150 | 300 | – | 400 | 400 | – | 300 |
| கொய் | 100 | 200 | 50 | 70 | 80 | 50 | – |
| பாலை | 400 | 200 | 300 | 400 | 500 | – | – |
| வாழை | 100 | 150 | – | 400 | 400 | 300 | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 60 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 50 | 50 | 40 | 60 | 40 | 40 | 90 | 35 |
| கரட் | 80 | 100 | 110 | 120 | 80 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 70 | 70 | 80 | 60 | 60 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 100 | 80 | 80 | 80 | 50 | 40 | 100 | 60 |
| பாகல் | 120 | 80 | 160 | 120 | 100 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 90 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 90 | 100 | 100 | 80 | 120 | 90 | 70 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 | 30 | 60 | 70 | 30 |
| தக்காளி | 100 | 70 | 80 | 70 | 60 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 70 | 60 | 80 | 50 | 80 | 80 | 70 | 40 |
| கீரை | 20 | 30 | 30 | 20 | 30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 50 | 30 | 30 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 70 | 60 | 80 | 80 | 100 | 200 | 70 |
| புடோல் | 40 | 50 | 80 | 80 | 40 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 100 | 80 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 80 | 100 | 60 | 40 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 160 | 140 | 160 | 140 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 140 | 120 | 100 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 25 | 40 | 35–40 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 110 | 110 | 120 | 110 | 100–140 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 400 | 400 | 300–360 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 80 | 120 | 100 | 100 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 170 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 100 | 150 | 120 | 60 | 160 | 200 | 80 | 100 |



## கத்தரிக்காயில் உள்ள மருத்துவப் பயன்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

புற்றுநோய் வராமல் காக்கும். தக்காளிக்கு இணையானது, இந்தக் காய். தக்காளியைப் போலவே எடை, புரதம், கலோரி அளவு, தாது உப்புகள் முதலியன கத்தரிக்காயில் உள்ளன. ஆனால் விற்றமின் 'ஏ'யும், விற்றமின் 'சி'யும் குறைவாகவே உள்ளன. இவற்றை ஈடுசெய்யும் வகையில் விற்றமின் 'பி' தக்க அளவில் உள்ளது. இதய நோய்கள் வருவதைத் தடுக்கும்.

உடலில் சேர்ந்த அதிகப்படியான இரும்புச்சத்தை சமன்படுத்தும். நாம் சாப்பிடும் மற்ற உணவுகள் உடனடியாகச் சிதைந்து சத்தாக மாறக் கத்தரிக்காயில் உள்ள விற்றமின் 'பி' பயன்படுகிறது. பசியின்மை அகல்கிறது. உடல் வலுவு குறைவது தடுக்கப்படுகிறது. மூச்சுவிடுதலில் சிரமம், தோல் மரத்துவிடுவது முதலியவையும் தடுக்கப்படுகிறது.

டைப் 2 சர்க்கரை நோயைத் தடுக்கும். முற்றிய காய்கள் உடல் வளர்ச்சிக்குப் பயன்படும். காரணம், இவற்றில் விற்றமின் ஏ அதிக அளவில் இருக்கிறது. உயர் குருதி அழுத்தத்தைக் கட்டுப் படுத்தி, மன அமைதியைத் தரும்.

உடம்பில் சொறி சிரங்கு, புண் உள்ளவர்கள் கத்தரிக்காயைத் தவிர்ப்பது நல்லது. உடலுக்குச் சூடு தரும் காய் என்பதால் அரிப்பை உண்டு பண்ணிப் புண்கள் ஆற அதிக நாள் ஆகும்.

உடலில் சேர்ந்த அதிகப் படியான இரும்புச்சத்தை சமன்படுத்தும். நாம் சாப்பிடும் மற்ற உணவுகள் உடனடியாகச் சிதைந்து சத்தாக மாறக் கத்தரிக் காயில் உள்ள விற்றமின் 'பி' பயன்படுகிறது. பசியின்மை அகல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலான் ஷுவர் கணக்கு வைப்பாளர்களுக்கு பரிசு

செலான் வங்கி அதன் வாடிக்கையாளர்களுக்கு அதிகளவு அனு கூலங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் பிரபல்யமான வாடிக்கையாளர் நம்பிக்கைத் திட்டமான செலான் ஷுவரை அறிமுகப்படுத்தியுள்ளது. வங்கித் துறையில் சேமிப்பு மற்றும் நடைமுறைக் கணக்கு வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கைத் திட்டத்தை அறிமுகப்படுத்திய வங்கியாக செலான் வங்கி விளங்குகிறது. செலான் ஷுவர் நிச்சயமான வெகுமதிகளை வழங்குவது மட்டுமல்லாது, வசதியான வைப்புத் தளங்களையும் வழங்குகின்றமை வங்கியால் முன்னெடுக்கப்பட்ட மற்றுமொரு முன்மாதிரியான முயற்சி ஆகும். இந்த அனுகூலங்கள் சேமிப்புக் கணக்கின் வட்டிக்கு மேலதிகமாக வழங்கப்படுகின்றன. தற்போது தனிப்பட்ட மற்றும் கூட்டு சேமிப்பு மற்றும் நடைமுறைக் கணக்குகளுக்காக வழங்கப்படும் அதிகூடிய தொகை ரூபா 200,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாட்டின் வங்கித்துறையில் நடைமுறையிலிருந்த குலுக்கல் முறையான பரிசுத் திட்டத்துக்கு மாறாக அனைவருக்குமான பரிசுத்திட்டத்தை முதன் முதலில் அறிமுகப்படுத்தியதன்மூலம், செலான் வங்கி அதன் தனித்துவத்தைப் பேணிவருகிறது. வங்கி, வாடிக்கையாளரின் வாழ்வின் முக்கிய தருணங்களின்போது நிச்சயமான பணத்தொகையையும் பரிசுகளையும் வழங்குகிறது. ஏற்கனவே உள்ள பரிசுப் பிரிவுகள் திருமணம், பிரசவம், அறுவைச் சிகிச்சை மற் றும் 60ஆவது பிறந்தநாள் ஆகியவற்றை உள்ளடக்குகிறது. எனி னும் புதிய பிரிவுகள் வாடிக்கையாளரின் பிள்ளைகளின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரண தர மற்றும் உயர்தர சித்தி மற்றும் 10 ஆவது ஆண்டு திருமண நிறைவு ஆகியவற்றை உள்ளடக்குகிறது. அறுவைச் சிகிச்சையின்போது வாடிக்கையாளர் ரூபா 200,000 ஐ பெற்றுக்கொள்ளலாம். வாழ்க்கைச் சக்கரத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் பங்களிக்கும் செலான் ஷுவர் ஒவ்வொரு வாடிக்கையாளரிடமும் நிச்சயம் இருக்க வேண்டிய திட்டம் ஆகும். புதிய பிரிவுகள் ஊடாக வாடிக்கையாளர்களின் பிள்ளைகள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்தும் போதும், சாதாரண தரத்தில் 8 ஏ சித்திகள் மற்றும் உயர்தரத்தின்போது 3ஏ சித்திகளைப்பெறும் போதும், ரூபா 50,000 வரை வழங்கப்படும். மேலும், தமது 10ஆவது திருமண ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வாடிக்கையாளர்களுக்கு ரூபா 50,000 வரை பணப்பரிசாக வழங்கப்படும்.

புதிய செலான் ஷுவர் திட்டம் பற்றி கருத்துத் தெரிவித்த சந்தைப்படுத்தல் மற்றும் பிரத்தியேக வங்கியியல் பிரதிப் பொது முகாமையாளர் டிலான் விஜயசேகர, செலான் ஷுவர் திட்டத்தைப் புதிய அனு கூலங்களுடன் மீள அறிமுகப்படுத்துவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். பணப் பரிசுகளை ரூபா 15,000 இலிருந்து ரூபா 200,0000 வரை அதிகரித்ததன் மூலம், அதிகளவு நன்மைகளையும் பெறுமதியையும் வழங்கத் தயாராகவுள்ளோம் - என்றார். (தி)

## ஈரவிழிகளுடன் 4 ஆம் ஆண்டில்

அமரர்

**நடராசா ஜெயராசா**

*(விஜயகுமார்)*



எம் வாழ்வில் வசந்தத்தை வரவழைக்க
வருடங்களைக் கரைத்தவரே - அப்பா
தாய் மரியின் நவநாளில்
தியாகத் திரியணைந்து
ஆண்டுகள் நான்கானதுவோ!
ஆறவில்லை எம் மனது
மறைவு தந்த வலிகள்
மாறாத ரணங்களாய்
இறையமைதி பெற்றிடவே
அனுதினமும் வேண்டுகிறோம்

**குடும்பத்தினர்.**

இல. 7, சென்மேரிஸ்,
முதலாம் ஒழுங்கை,
கொழும்புத்துறை.

மலர்வு 23.11.1951
உதிர்வு 29.09.2012

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **பஞ்சவர்ணம்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி**

(தேவி அச்சகம் ஸ்தாபகர்,
மூர்த்தி விளம்பர சேவை)



அன்பு அப்பா பாசத்தின் நிறைகுடமாய்
பரிவுடன் எமை வளர்த்து கல்வியூட்டி
வாழ்வின் பாதைக்கு வழிகாட்டிய
அன்புத்தெய்வமே! ஆண்டுகள் ஐந்து
ஆனாலும் ஆறாது எமது சோகம்
இதயங்களில் சுமையோடு
காத்திருக்கிறோம் அப்பா!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய
மாரியம்மனை வேண்டி நிற்கும்.

**குடும்பத்தினர்.**
114/19, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

(ஜே.4924)
(13.18)

மலர்வு 15.03.1936
உதிர்வு 26.09.2011

திதி: சதுர்த்தசி (29.09.2016)

## மரண அறிவித்தல்

# திருஞானம் ரவிராஜா (ரசியன்)



மலர்வு 14.12.1968
உதிர்வு 25.09.2016

யாழ். புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் மாங்குளத்தில் வசித்தவரும் தற்போது ஜேர்மனியில் வசித்தவருமாகிய திருஞானம் ரவிராஜா (ரசியன்) 25.09.2016 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருஞானம் - சற்குணம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து- சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் கலைமதியின் அன்புக் கணவரும் தனுகரன், கிருபாகரன், துர்க்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமிர்தமணி (சுவிஸ்), அன்னலெச்சுமி(வவுனியா), விமலாதேவி(ஜேர்மனி), தர்மராசா (மாங்குளம்), அமிர்ததேவி (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகரட்ணம் (லண்டன்), கனகராசா(வவுனியா), தேவராசா (ஜேர்மனி), காலஞ்சென்ற சிவமதி மற்றும் ரவீந்திரன் (வவுனியா), காலஞ்சென்றவர்களான கோமதி, இந்துமதி, கெங்காதரன், வளர்மதி மற்றும் ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் றேணுகா (லண்டன்), சிவதாசன் (வவுனியா), சசிகலா(சுவிஸ்), சுமித்திரா (வவுனியா), தவதாசன்(சுவிஸ்), குமுதினி(வவுனியா), நந்தினி (ஜேர்மனி), புஸ்பலதா (ஜேர்மனி), றமணன்(ஜேர்மனி), அகிலன்(ஜேர்மனி), ஜெயதேவி (பிரான்ஸ்), தர்சினிதேவி (பிரான்ஸ்), தில்லை வாசன் (பிரான்ஸ்), உதயவாசன்(வவுனியா), சிறிகாந்தன், ஞானமலர் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சிவதர்சன் (வவுனியா), தாசன்(பிரான்ஸ்), சிவதர்சினி(பிரான்ஸ்), பிரசாந்(மாங்குளம்), பகிதரன்(கொழும்பு) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(29.09.2016) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு Friendhof, Eschendorf Jagerstrabe, 55, 48429 Rheine Germany இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வீட்டு முகவரி:-**
Lsoldenwey3 48429
Rheine, Germany

தகவல்:
குடும்பத்தினர்.
(ஜேர்மனி), (இலங்கை)

**004 959 718 07252, 024 222 6927**

(ஜே/4832)(12.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

இடர் முகாமைத்துவ நடுவண் நிலையம் சுட்டிக்காட்டியது.

சுமார் 44 ஆயிரம் குடும்பங்கள் குடிதண்ணீர் உட்பட தமது நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய நீரைப் பெறுவதில் சிரமங்களை எதிர் கொண்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டமும், வவுனியா மாவட்டமுமே வறட்சியினால் தற்போது பாதிக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 516 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 550 பேரும், வவுனியா மாவட்டத்தில் 938 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 111 பேரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

இதேபோன்று நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கடும் வறட்சியினால் பல்லாயிரக் கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வறட்சியினால் குளங்களும், நீர்நிலைகளும் வற்றியுள்ளதால் பல மைல்தூரம் நடத்து சென்றே குடிதண்ணீரைப் பெற வேண்டிய நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஒரு மாதத்துக்கும் மேலாக நீடித்துவரும் வறட்சி காரணமாக சிறுதானியச் செய்கை உட்பட விவசாய நடவடிக்கைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை வெளியிட்டனர். பல தாவரங்கள் நீரின்றி கருகிமடியும்நிலை உருவாகியுள்ளதால், விவசாயிகள் பெரும் இழப்பை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலையேற்பட்டுள்ளது.

மின்உற்பத்தி நிலையங்களைச் சூழவுள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் சடுதியாகக் குறைவடைந்துள்ளது. எனினும், மின் தட்டுப்பாடு தற்போதைக்கு ஏற்படாது என்று மின்சார சபை தெரிவித்தது.

தற்போது நிலவும் வெப்பமான காலநிலை அடுத்த மாதம் 15 ஆம் திகதிவரை நீடிக்கும் என்றும், அதன் பின்னரே மழைபெய்யக் கூடிய சாத்தியம் இருக்கின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

இடர் முகாமைத்துவ நடுவண் நிலையம் நேற்று மதியம் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் வறட்சி காரணமாக, கிழக்கு மாகாணத்தில் 20 ஆயிரத்து 458 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்து 678 பேரும், வடமத்திய மாகாணத்தில் பொலனறுவை மாவட்டத்தில் மாத்திரம் 18 ஆயிரத்து 951 குடும்பங்களைச் சேர்ந்த 70 ஆயிரத்து 431 பேரும், வடமேல் மாகாணத்தில் 2 ஆயிரத்து 377 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 732 பேரும், பாதிக்கப்பட்டுள்ளனர். (வ-5)

## நடுவீதியில்...

யதாகத் தெரிவிக்கப் பட்டது.

காயமடைந்த இளைஞன் வைத்திய சாலையில் சேர்க்கப்பட் டார். பொலிஸார் இரும்புச் சங்கிலியால் தாக்கிக் காயப்படுத்தித் துன்புறுத்தும் காட்சியை அங்கிருந்த ஒருவர் அலைபேசியில் படம்பிடித்து இணையத்தளத்தில் வெளியிட்டமையால் பொலிஸாரின் அடாவடி ஆதாரத்துடன் பரவி வருகிறது.

சம்பவம் ஏ9 வீதியில் 156ஆம் மைல்கல் பகுதியில் நேற்று முற்பகல் 11மணியளவில் இடம்பெற்றது.

தாக்கப்பட்ட நபர், உழவு இயந்திரம் ஒன்றை செலுத்தி சென்றபோது, அவருக்கும் மற்றொரு வாகன சாரதிக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இதன்போது சம்பவ இடத் துக்கு வந்த பொலிஸார் சாரதிகளை விலக்கிவிட்டனர். பின்னர் உழவு இயந்திர சாரதியும் பொலிஸாரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அப்போது பொலிஸார் சாரதியைத் தாக்கினர் என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

'வேன் ஒன்றை மோதிவிட்டு டிரக்டர் சாரதி ஒருவர் தப்பிச் செல்வதாக எமக்கு முறைப்பாடு கிடைத்தது. அந்த விபத்து தொடர்பில் விசாரணைசெய்யவே பொலிஸ் போக்குவரத்து பிரிவினர் அங்கு சென்றனர். சந்தேகநபர் மதுபோதையில் இருந்தார். அவர் சங்கிலியால் தாக்கியதன் காரணமாக சிலருக்கு காயமேற்பட்டது. சாரதி மது போதையில் சங்கிலியால் பொலிஸாரைத் தாக்க முற்பட்டார். இதன்போதே அந்தச் சாரதியிடம் இருந்த இரும்புச்சங்கிலியை பொலிஸ் போக்குவரத்து பிரிவு உத்தியோகத்தர் பறித்தெடுத்தார்' என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு பொலிஸார் கூறுகின்ற போதிலும், ஒரு நபரை வீதியில் வைத்து கடுமையாகச் சங்கிலியால் தாக்குவது மனித உரிமைமீறல் என மாவட்ட கல்வியியலாளர்கள் தெரிவித்தனர். சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும், எந்தவொரு அதிகாரியும் சட்டத்தை கையில் எடுக்காதவாறு சட்டம் கடுமையாக்கப்பட வேண்டும் எனவும் கல்வியியலாளர்கள் குறிப்பிட்டனர். அந்த இளைஞருக்கு நடைபெற்ற சம்பவம்போன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் யாருக்கும் இடம்பெறாதவாறு கடும்சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சம்பவத்தில் நின்றிருந்த மக்கள் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் வடக்கில் அதிகரித்து வருகிறதா என்ற கேள்வியை எழுப்பும் வகையில், சுன்னாகம் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சிந்தக்க பண்டார உள்ளிட்ட8 பொலிஸாருக்கு எதிராக சித்திரவதை வழக்கும் அவர்களில் சிந்தக்கபண்டார உள்ளிட்ட 5 பொலிஸாருக்கு எதிராக சித்திரவதையின் பின்னரான கொலை வழக்கும் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் லண்டனில் வசித்து வரும் உரும்பிராயைச் சேர்ந்தவரை கடந்த வாரம் தெல்லிப்பழைப் பொலிஸார் சித்திரவதை செய்ததாக மல்லாகம் நீதிவான் மன்றில் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. அது தொடர்பான விரிவான விசாரணைக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

4 இராணுவத்தினருக்கு 25 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படக் காரணமாக இருந்து அதே இராணுவத்தினரால் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பெண், முல்லைத்தீவு பொலிஸாரால் துன்புறுத்தப்பட்டதாக அவரே குற்றஞ்சாட்டினார். அவரது மகனும் அதற்கு விதிவிலக்கல்லாது குற்றஞ்சாட்டப்பட்டு இருவருமே சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். இதுவும் பொலிஸார் வேண்டுமென்றே சித்திரவதை செய்வதாகக் குற்றச்சாட்டு அமைந்தது. இது இடம்பெற்று 3 ஆவது நாளான நேற்று கிளிநொச்சியில் குறித்த சாரதி பொலிஸாரால் இரும்புச் சங்கிலியால் துரத்தித் தாக்கப்பட்டுள்ளார். (வ-4,21)

## விக்கியின்...

உறுப்பினர் விமல் வீரவன்ச.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் நடைபெற்ற ஊர்வலத்தில் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனின் உரை குறித்து அவர் கடும் எதிர்ப்பை வெளியிட்டார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்ததாவது:

ஒரு பக்கம் மங்கள சமரவீர விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுடன் பின்னிப்பிணைந்து உறவாடும் வேளையில், மறுபக்கம் உயர் நீதிமன்ற நீதியரசராக இருந்த வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் வடக்கு மக்களிடையேயும், சிங்கள மக்களிடையேயும் கட்டுப்பாட்டுடன் வரும் நல்லிணக்கத்துடனான ஐக்கியச் சூழலை கொன்றுவிட்டு, சிங்கள மக்களையும், பௌத்த கலாசாரத்தையும் அருவருப்பான விடயமாக எடுத்துக்காட்டி, அப்பாவித் தமிழ் மக்களை இனவாதப் பாதையில் இட்டுச் செல்கின்றார்.

இந்த வேலைத்திட்டத்துக்கு கொழும்பு அரசு முழுமையான சுதந்திரத்தை வழங்கியிருக்கிறது. விடுதலைப் புலிகளுக்காக உயிர்நீத்த திலீபனின் திருவுருவப் படத்தை யாழ்ப்பாணத்தில் வைத்து நினைவு கூருகின்றார்கள்.

வடக்கில் புத்தர் சிலைகளை அகற்றுமாறு விக்னேஸ்வரன் தலைமையில் யாழ்ப்பாணத்தில் போராட்டம் நடத்தப்பட்டது. சிங்கள மக்கள் குடியேற வேண்டாம் என அதில் தெரிவிக்கப்பட்டது. இன்னும் தெளிவாகக் கூறினால் இவை சிங்கள இனச் சுத்திகரிப்பாகும். இதுவொரு பாசிசவாத வெளிப்பாடாகும். இந்தப் பிரதேசங்களில் தமிழ், முஸ்லிம் மக்களை குடியேற்ற வேண்டாம் என எங்களால் கூறமுடியாது. சிங்கள மக்களைக் குடியேற வேண்டாம் என்றும் எவராலும் கூறமுடியாது. அப்படிப்பட்ட எண்ணத்தில் யாராவது இருந்தால், அதனை மாற்றிக்கொள்ள வேண்டும். அது ஒரு நோயாகும்.

வடக்கு தமிழருக்கே சொந்தமானது. அதனால் வேறு இனத்தவர்கள் குடியேற முடியாது என்ற எண்ணக்கருவை விதைக்கும் சுதந்திரம் தற்போதைய நல்லாட்சி என்று கூறிக்கொள்ளும் ஆட்சியிலேயே வழங்கப்பட்டது.

விக்னேஸ்வரனின் இனவாதம், சம்பந்தனின் நடுநிலைவாதம் என்ற இரண்டு விதமான கூற்றை தெற்கு அரசியல்வாதிகள் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். எனினும் விக்னேஸ்வரனோ, சம்பந்தனோ, சுமந்திரனோ அவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளின் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலேயே உள்ளனர்.

இலங்கைக் குடியுரிமையில் உள்ள தமிழர் ஒருவரது புகலிடக் கோரிக்கையை அண்மையில் நிராகரித்த கனேடிய நீதிமன்றம், அரசியல் தஞ்சத்தை நிராகரித்தமைக்கான காரணத்தையும் தெரிவித்திருந்தது. அந்தக் குடிமகன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட்டிருக்கின்றார் என்றும் விடுதலைப் புலிகளின் ஆதரவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்த இயக்கத்தின் கிளையெனவும் கூறியிருக்கிறது.

இதுதான் கனடா நீதிமன்றத்தின் தீர்ப்பு. வெளிநாட்டு நீதிமன்றம் இவ்வாறு தீர்மானித்திருந்தாலும் இலங்கை அரசு அவ்வாறு தீர்மானம் எடுக்கவில்லை- என்றார். (வ-5)

## வடக்கு...

யாளர்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடக்கு – கிழக்கு இணைப்பை எந்தவொரு முஸ்லிமும் ஆதரிக்க மாட்டான் என்று அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்திருந்த கருத்து தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த சுமந்திரன்,

அஷ்ரப் உயிருடன் இருந்த காலத்திலே தமிழர் விடுதலைக் கூட்டணியோடு வடக்கு – கிழக்கு இணைப்பு சம்பந்தமாக எழுத்து மூலமான ஒப்புதல்கள் ஏற்படுத்தப்பட்டன. அந்த இணக்கப்பாடுகள் இன்றைக்கும் செல்லுபடியாகும் என்பதை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எங்களுக்கு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

இணக்கப்பாடுகளின் அடிப்படையிலே வடக்கு – கிழக்கு இணைப்பை நாம் எவ்வாறு முன்கொண்டு செல்லலாம் என்பது குறித்து பொறுப்பு வாய்ந்த முஸ்லிம் மக்களுடைய பிரநிதிகளுடன் மக்களுடனும் தொடர்ந்து பேசி வருகின்றோம்.

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையே கடந்த 25 30 வருடங்களில் இடைவெளி துரதிஷ்டவசமாக அதிகரித்து விட்டது. பலத்த சந்தேகங்கள் ஒருவரைப் பற்றி மற்றவருக்கு ஏற்பட்டது. அப்படியான சூழ்நிலையிலேயே திடீரென்று முஸ்லிம்களுடைய சம்மதத்தை நாங்கள் பெறுவது கடினமான விடயம்.

சந்தேகங்களைப் போக்கவும் நாங்கள் தமிழ் பேசுகின்ற மக்கள் என்ற அடிப்படையிலே சேர்ந்து இயங்குவதற்கும் ஏற்ற ஒரு கால சூழ்நிலையை உருவாக்க வேண்டியது எங்களுடைய கடப்பாடாக இருக்கின்றது. அதனையே நாங்கள் இப்போது செய்து வருகின்றோம். இது இரவோடு இரவாக ஒரே நாளிலே திடீரென்று ஏற்படுத்தப்படக்கூடிய ஒன்றல்ல.

வடக்கு – கிழக்கு இணைப்பு 1957ஆம் ஆண்டு பண்டா – செல்வா ஒப்பந்தத்திலிருந்து எங்களிடத்தில் இருக்கின்ற நிலைப்பாடு. அந்த ஒப்பந்தத்திலும் மாகாண எல்லைகளுக்கு அப்பால் பிராந்திய சபைகள் ஒன்று சேரலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வடக்கு – கிழக்கு இணைக்கப்பட முடியும் என்பதற்காகத்தான் அவ்வாறு குறிக்கப்பட்டது. இலங்கை – இந்திய ஒப்பந்தத்திலேயும் தெட்டத்தெளிவாக அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

2010ஆம் ஆண்டிலிருந்து நாங்கள் முன்வைத்த எங்களுடைய தேர்தல் அறிக்கையில் வடக்கு – கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தோம். அந்த இணைப்பு கிழக்கிலே வாழுகின்ற முஸ்லிம் மக்களுடைய முழுச் சம்மதத்துடன் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் சொல்லி இருக்கின்றோம்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாப்பிலே, முஸ்லிம் மக்களும் ஒரு தேசத்திற்கு உரியவர்கள், அவர்களுக்கும் அந்த அடிப்படையிலே சுயநிர்ணய உரித்து உண்டு என்பது எங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம்.

ஆகையாலே வடக்கு – கிழக்கு இணைக்கப்பட வேண்டும். மொழி வாரியான ஒரு அலகு உருவாக்கப்பட வேண்டும். தமிழ் பேசுகின்ற மக்களுடைய பிரதேசங்கள் என்ற ரீதியிலே அது செய்யப்பட வேண்டும். அப்படியாகச் செய்யப்படுகின்ற போது, தாங்களுக்கென்ற ஒரு தனித்துவத்தைக் கொண்ட முஸ்லிம் மக்களுடைய சம்மதத்தோடு சேர்ந்துதான் அது செய்யப்பட வேண்டும் என்பது எங்களுடைய தொடர்ச்சியான நிலைப்பாடாக இருக்கின்றது என்றார். (வ-5)

## மகிந்தவின்...

நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:

வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் அவ்வப்போது இனவாத கருத்துக்களை முன்வைத்து வடக்கில் மட்டுமல்லாது நாட்டில் சலசலப்பை ஏற்படுத்துபவர். கடந்த காலங்களில் இவ்வாறு பல்வேறு கருத்துக்களை முன்வைத்தார். எனினும் அண்மையில் வடக்கில் நடைபெற்ற ஊர்வலத்தில் மிகவும் பாரதூரமான கருத்துக்களை முன்வைத்துள்ளமை மிகவும் கண்டிக்கத்தக்க விடயமாகும். இவரது கருத்துக்களை தமிழ் மக்களின் கருத்துக்களாக நாம் கருதவில்லை.

வடக்கில் விக்னேஸ்வரன் செயற்படும் விதம், தெற்கில் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட இனவாதிகளுக்கு போசணையூட்டும் வகையில் அமைந்துள்ளது. விக்கியும் மகிந்தவும் இனவாதத்தின் மூலம் நாட்டில் தமது அரசியல் பயணத்தை பலப்படுத்தவே முயற்சிக்கின்றனர். அவ்வாறான நிலையில் அரசு இவர்களின் பாதையை கட்டுப்படுத்த என்ன செய்யப் போகின்றது ? விக்னேஸ்வரனின் இவ்வாறான செயற்பாடுகளானது, அவரது வங்குரோத்து அரசியலையே சுட்டிக்காட்டுகின்றது. உண்மையில் நீதிபதியான அவருக்கு அரசியல் செய்யத் தெரியாது. கொழும்பு அரசினால் வடக்குக்கு என்று ஒதுக்கும் நிதியிலும், அவர் எந்தவொரு செயற்பாட்டையும் செய்யவில்லை. இவை தவிர அவரால் வடக்கில் எந்தவித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை. இதுபோன்ற தனக்குப் பாதகமான விடயங்களிலிருந்து மக்களைத் திசைத் திருப்பும் நோக்கிலேயே இவ்வாறான இனவாத செயற்பாடுகளில் அவர் ஈடுபடுகிறார் – என்றார். (வ-5)

## பிரபாகரனின்...

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ஊர்வலத்தின் போது வடக்கில் உள்ள சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் புத்தர் சிலைகளை அகற்றுமாறும் விக்னேஸ்வரன்பல கோரிக்கைகளை முன்வைத்தார்.

இந்தக் கருத்து தொடர்பில் செய்தியாளர்களிடம் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியலில் வளர்ச்சியடையாத ஒரு குழந்தையே விக்னேஸ்வரன். அரசியலுடன் விளையாடிக்கொண்டிருக்கும் அவர் நடைமுறை வாழ்வில் ஒரு வெற்று நபர். விடுதலைப் புலிகளின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனின் லொக்கு அப்பாச்சியாக இருக்க விக்னேஸ்வரன் ஆசைப்படுகின்றார்.

தமிழ் மக்களுக்காகப் போராடுவோர் என தன்னைச் சித்திரித்துக் கொள்ளவே இவ்வாறான செயற்பாடுகளில் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஈடுபடுகின்றார் என்று அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார். (வ-5)

## வடக்கில் 241...

களில் துறைசார் ஆசிரியர்களை வடக்கு மாகாணத்தில் நியமனம் வழங்கக் கேட்டிருந்தோம். இதன் பிரகாரம் வடக்குக்கு 241ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 225 பேர் தமிழ் மொழி மூலமான ஆசிரியர்கள், 16 பேர் சிங்கள மொழி ஆசிரியர்கள்.

நியமிக்கப்படவுள்ள ஆசிரியர்கள் வடக்கு மாகாண கல்வி அமைச்சில் தங்கள் சான்றிதழ்களின் பிரதியை நாளை 30ஆம் திகதி மாகாணச் செயலாளர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். இவர்களுக்கான நியமனக் கடிதம் எதிர்வரும் 4ஆம் திகதி காலையில் அலரி மாளிகையில் இடம்பெறும் நிகழ்வில் வைத்து வழங்கப்படும்.

நியமனக் கடிதங்கள் வழங்கப்படுவோர் தங்கள் பாடசாலைகளில் 6ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும் என்று வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (வ-5-10)

**(பெயர் விபரங்களை உதயனின் உத்தியோகபூர்வ முகநூலான** https://www.facebook.com/uthayan.print/posts/876951732436890?pnref=story **பார்வையிடலாம்.)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### அருளம்பலம் யோகேந்திரா

(ஓய்வுபெற்ற அரச அச்சுப் பதிப்பக அலுவலர்)

பிறப்பு 28 . 10 . 1938



இறப்பு 25 . 09 . 2016

காரைநகர் வேம்படியைப் பிறப்பிடமாகவும் Scarborough வை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் யோகேந்திரா கடந்த (25.09.2016) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம்-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் பொன்னம்பலம்-சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும் காலஞ் சென்ற சுபத்திராதேவியின் அன்புக் கணவரும் யசோதா, சுகிதா, மயூரகுமரன், ஜெயகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பாலேந்திரா, தேவகிஅம்மா மற்றும் இராஜேந்திரா, குலேந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காண்டீபன், சிவகுமார், சந்திரவிந்தியா, தர்ஷிகா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பரமநாதர் மற்றும் வசுந்திராதேவி, ரதிவதனி ஆகியோரின் மைத்துனரும் சயானா , சபீனா, அஷ்வின், அனுசன், தாரணி, பவித்திரன், கபிலன், பிரஷ்ணவி, பிரஷாண் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.10.2016 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**யோ.மயூரகுமரன்.**
**021 3219430**

**வேம்படி,**
**காரைநகர்.**

## கண்ணீர் அஞ்சலி



மக்கள் வங்கி சாவகச்சேரிக் கிளையில்
செயற்பாட்டு முகாமையாளராகக்
கடமையாற்றும் **திருமதி கீதா கிளென்சியஸ்**
**லொயாலா** அவர்களின் பாசமிகு தந்தையார்

***இம்மானுவேல் றொஷாரியோ திருச்செல்வம்***

அவர்கள் 28.09.2016 அன்று இறைவனடி சேர்ந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும், ஊழியர்களும்
மக்கள் வங்கி, சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி.

## மரண அறிவித்தல்

### திருமதி தயாளினி நகுலேஸ்வரன்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தயாளினி நகுலேஸ்வரன் நேற்று (28.09.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்ற குணரட்ணம் -ராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகலிங்கம்-விஜயலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் நகுலேஸ்வரனின் அன்பு மனைவியும் ஜெயந்தன், துஷயந்தன், துஷாலினி, சயந்தன், ஜெனனி, தர்சன் ஆகியோரின் அன்புத் தாயும் கிரிஜாலினி, வனஜாலினி, கன்னன், சுஜசாலினி, சுமித்திராலினி, திலிபன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சஞ்சிகா, சிவமோகன் ஆகியோரின் மாமியும் மாதுளா, பானுஜன், அதர்சால் ஆகியோ ரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2016) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**
**077 3233703**

## உக்ரைன் காட்டில் யாழ். வாசி உயிரிழப்பு

ஐரோப்பிய நாடொன்றில் தஞ்சம் புகுவதற்காக, உக்ரைன் ஊடாக பயணித்த யாழ்ப்பாணம் இளவாலையைச் சேர்ந்த அஸ்வின் சுதர்சன் என்ற நபர் திடீர் வயிற்று வலியால் உயிரிழந்தார் என்று உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

உக்ரைனின் காட்டுப் பகுதியூடாகப் பயணிக்கும் போது, அவருக்கு வயிற்றுவலி ஏற்பட்டதாகவும் , போதிய சிகிச்சையின்றி அவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இலங்கைக்கு சடலத்தைக் கொண்டு வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர். (வ)

## பலாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி செய்யும் திட்டம் இலங்கை அரசிடம் இல்லை என்று அண்மையில் பிரதி அமைச்சர் நிரோசன் பெரேரா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். அத்துடன், பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான உடன்பாடு எதுவும் இந்திய நிறுவனத்துடன் செய்து கொள்ளப்படவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நாடாளுமன்றத்தில் தகவல் வெளியிட்டிருந்தார். (வ-5)

## இலங்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் அரியதொரு சந்தர்ப்பம் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் மார்பகப் புற்றுநோய்ப் பாதிப்புக்குள்ளானவர்கள் அதிகரித்துள்ள நிலையில் இடம்பெற்ற முதலாவது அறுவைச் சிகிச்சை இது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## ஐ.நாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரம் உண்டு.

எவ்வாறெனினும், இலங்கை தொடர்பிலான ஐ.நாவின் தெளிவானதும் உறுதியுமான நிலைப்பாட்டை ஐ. நா. பொதுச் சபையே வெளியிடும் என்று பான் கீ மூனின் பிரதிப் பேச்சாளர் ப்ர்ஹான் ஹக் தெரிவித்தார். (வ-5)

## கிழக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் இனவாதத்தைத் தூண்டும் வகையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனும் அரசியல் சாணக்கிய நாடகத்தை அரங்கேற்றுகின்றனர் என்று சிறி கொத்தாவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார். (வ-5)

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 08 . 12 . 1943



இறப்பு 25 . 09 . 2016

### சுப்பிரமணியம் சரவணப்பிரபு (பிரபு)

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் லண்டன் TOOTING ஐ வதிவிடமாகவும் கொண்டவர்

அன்னார் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய திருப்பணிக்காக U.K யில் இருந்து பெருநிதிசேகரித்து அரும்பணி ஆற்றியவர். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் பிரபு அவர்களின் ஆன்மா சாந்தி பெற சந்நிதி வேலனை வேண்டிக் கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29.09.2016 லண்டனில் நடைபெறும்.

**குமரன் - 0044 7743234854**

**சந்நிதி கோயிலடி.**

**ஆ. சிவசண்முகம் ஐயர்**
**குடும்பம்.**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 27.09.1990 இறப்பு 23.09.2014

இறை நிழலில் இருந்தாலும் எம்
உயிர் நிழலாய் வாழ்கின்ற

### தயாபரன் சிவதர்ஷன்

2ஆம் ஆண்டு ஆத்ம
சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

காலமாகி போகவில்லை - இவன்
காலத்தை வென்றிந்த ஞாலத்தில்
எம் நெஞ்சில் உயர் காவியமாய்
உறைந்துள்ளான்

தயா வெளியீடு
575, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 3965214

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



**தோற்றம்** 19.05.1986 **மறைவு** 17.08.2016

கடந்த துர்முகி வருடம் ஆவணி மாதம்
02 ஆம் நாள்
17.08.2016 அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

### அமரர் சிவகுமாரன் பிரணவன் ( பிரனு)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 30.09.2016 வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**சங்குவேலி வடக்கு,**
**மானிப்பாய்.**

**குடும்பத்தினர்.**
**077 8999997**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## வரப்பிரகாசம் மரியதாஸ்

(ராசா - ஓய்வு பெற்ற தொலைபேசி இயக்குநர், ஆதார வைத்தியசாலை தெல்லிப்பழை)



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வேலன்சீமா ஏழாலை மேற்கை, வசிப்பிடமாகவும் கொண்ட வரப்பிரகாசம் மரியதாஸ் (ராசா - ஓய்வு பெற்ற தொலைபேசி இயக்குநர், ஆதாரவைத்தியசாலை தெல்லிப்பழை) 27.09.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வரப்பிரகாசம் - தங்கமுத்து தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற நடராசா - புவனேஸ்வரி தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற பத்மலோசினியின் அன்புக்கணவரும் ராஜமேனகன் (பொது சுகாதார பரிசோதகர், தெல்லிப்பழை), தட்சாயினி (லண்டன்), வாகீசன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ரோகினி, தயானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புமாமனும் அக்சயா, அனஜா ஆகியோரின் அன்புப்பேரனும் பத்மினி காலஞ்சென்ற யூலியஸ் மற்றும் குணபாலசிங்கம், நித்தியலக்ஷ்மி, சரோஜினி, லிங்ககுரு ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2016) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.30 மணிக்கு ஏழாலை மத்தி உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வேலன் சீமா**
**ஏழாலை மேற்கு, சுன்னாகம்.**
**021 3210928**

**தகவல்:**
**ம. மேனகன் (மகன்)**
**ம. வாகீசன் (மகன்)**
**ந. நந்தகோபன் ( மைத்துனர் - ஆசிரியர்)**

# மரண அறிவித்தல்

## திருமதி பூமணி (பாக்கியம்) சின்னையா

மலர்வு
20 . 10 . 1928



உதிர்வு
28 . 09 . 2016

ஆத்திசூடி வீதி, கந்தர்மடம் மேற்கு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி (பாக்கியம்) சின்னையா நேற்று (28.09.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தை சின்னையாவின் அன்பு மனைவியும், இராஜேந்திரம் (ஓய்வுபெற்ற மின் இணைப்பாளர் -யா.மா.சபை), இராசமலர், இராசலிங்கம் (ஜே ர்மனி), இராஜசுலோசனா, இராஜஸ்ரீ (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், இராஜேஸ்வரி (சின்ராஸ்), கந்தசாமி, கலாமணி, சிவராசா ஆகியோரின் மாமியும், வினோத், பவித்திரன், ஜெகன், அகிலன், பைரவி, றோசன், திலீப், சரன்ஜா, ரூபி, அஜந்தா, ரூபா, ரவி, சலா, றமீந்தன், றமீத்தா, றமீக்கா, ஜீவிதன், ஜீவிதா ஆகியோரின் அன்புப் பேரனும், சந்தோஷ், தூரிகா, அசந், ஹன்சிகா, திசானியா, கோபிசாந், அஜிந்தினி ஹம்சாயினி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2016) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**54/20, ஆத்திசூடி வீதி,**
**யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 608 7160** (ஜே.4957) (13.18.17)

# மரண அறிவித்தல்

## ஈ.ஆர்.திருச்செல்வம் (இளைப்பாறிய ஆசிரியரும், ஊடகவியலாளரும்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஈ.ஆர்.திருச்செல்வம் நேற்று (28.09.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இம்மானுவேல்-மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான துரையப்பா-கண்மணி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் (சுந்திராதேவி-இளைப்பாறிய ஆசிரியர்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற மாகிறேற் ராணியின் சகோதரனும் காலஞ்சென்ற அமலதாஸ் மற்றும் சிறீதரன் (இளைப்பாறிய அலுவலர் இலங்கை விமானப்படை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சூரியாவின் (லண்டன்) அன்பு மாமனும் காலஞ்சென்ற மாதவி மற்றும் ஜெயகாந்தன், முரளிதரன் (கண்ணன்), கீதா(மக்கள் வங்கி சாவகச்சேரி), ஜெயமுகுந்தன் (ஆசிரியர்,Angel International School ), ஜெயராகவன் (இலங்கை வங்கி தலைமைக் காரியாலயம்-கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தினி, கிளென்சியஸ் லொயலா (லொயலாஸ் உரிமையாளர்), தமயந்தி (ஆசிரியர் வேம்படி மகளிர் கல்லூரி), திலினி (இலங்கை வங்கி தலைமைக் காரியாலயம்-கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் வைதேகி (யாழ் போதனா வைத்தியசாலை), காலஞ்சென்ற தேவகி மற்றும் பிரியங்கா, கோபிநாத், லாவண்யா, லக்ஸ்மன், வைஷ்ணவி, எறின் கிளென்சியா, பிரதிஷா, சதுர்ஜிகன், லிவனுறெகான் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.09.2016) வியாழக்கிழமை நல்லடக்க ஆராதனைக்காக யாழ் மரியன்னை பேராலயத்திற்கு பி.ப 3.00 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.16, ஆசீர்வாதம் லேன்,**
**ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 222 9008**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணிக்கு திரும்பினார் கம்பீர்

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான இந்திய அணியில் நட்சத்திர வீரரான கம்பீர் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார். இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள நியூசிலாந்து அணி, மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் தற்போது விளையாடி வருகிறது. கடந்த திங்கட்கிழமை நிறைவடைந்த முதலாவது ஆட்டத்தில், இந்தியா 197 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான லோகேஸ் ராகுல் காயமடைந்தார். தவான் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கக் கூடியவராக இருந்த போதிலும், மாற்றுவீரர் ஒருவரை அறிவிக்கக் கூடிய நிலையில், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இருந்தது. அந்த இடத்துக்கு கம்பீர் பெயரிடப்பட்டார். இருப்பினும் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் அவர் இடம்பெறுவது கோக்லியின் கைகளிலேயே உள்ளது. (ம)




# பாக். - தீவுகள் ஒருநாள் தொடர்

மேற்கிந்தியத் தீவுகள், பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் நாளை ஆரம்பமாகிறது.
தொடரில் மூன்று ஆட்டங்கள். இரண்டாவது ஆட்டம் அடுத்த மாதம் 2 ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் அடுத்த மாதம் 5 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ரி-20 தொடரை தீவுகள் 0:3 என்ற இழந்ததையடுத்து இந்தத் தொடரையாவது கைப்பற்ற வேண்டும் என்ற நெருக்கடி நிலமை மேற்கிந்தியத் தீவுகளுக்கு ஏற்பட்டுள்ளது. (ம)



# ஆவரங்கால் இந்து இளைஞர் கரப்பந்தாட்டத்தில் சம்பியன்

கரணவாய், செப். 29
கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகம் இரு பிரிவாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடர்களில் 'ஏ' பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி சம்பியனானது.
அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. இளவாலை மத்திய விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. 5 செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் செற்றை 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது இந்து இளைஞர் அணி. இரண்டாவது செற்றை 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி, பதிலடி கொடுத்தது இளவாலை மத்தி. மூன்றாம், நான்காம் செற்களை முறையே 25:21, 28:26 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி, முடிவில் 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-108)

# ஜாம்பவானாக அஸ்வின் வருவார்



இந்திய கிரிக்கெட் அணியின் ஜாம்பவானாக அஸ்வின் உருவெடுப்பார் இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவரானசுனில் கவாஸ்கர். இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்திய கிரிக்கெட் அணியின் ஜாம்பவானாக அஸ்வின் உருவெடுப்பார். பந்துவீச்சு, துடுப்பாட்டம், களத்தடுப்பு என சகலதுறைகளிலும் அவர் சிறப்பாகச் செயற்படுகிறார். இந்திய அணியின் நட்சத்திர வீரர்களில் ஒருவராக் அவர் தற்போது மாறியுள்ளார். தனது கிரிக்கெட் வாழ்க்கையை நிறைவுசெய்கையில் அவர் இந்திய கிரிக்கெட் வரலாற்றின் ஆகச்சிறந்த வீரர்களில் ஒருவராக விடைபெறுவார் என கவாஸ்கர் மேலும் தெரிவித்தார். (ம)

# மே.தீவுகளை பந்தாடியது பாகிஸ்தான்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்றாவது ரி-20 ஆட்டத்திலும் வெற்றிபெற்று தொடரை 3:0 என்ற கணக்கில் வழித்துத் துடைத்தது பாகிஸ்தான்.
பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் மூன்றாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. ஏற்கனவே முடிவடைந்த இரு ஆட்டங்களிலும் பாகிஸ்தான் வெற்றிபெற்றதால் இந்த ஆட்டத்தின் முடிவு எவ்வாறாக அமைந்தாலும், கிண்ணம் அந்த அணியை விட்டுச் செல்லவாய்ப்பு இருக்கவில்லை. ஆனால் குறைந்தது ஒரு ஆட்டதிலாவது வெற்றிபெற வேண்டும் என்ற கௌரவச் சிக்கல் தீவுகளுக்கு ஏற்பட்டது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய தீவுகள் 5 இலக்குகளை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சாமுவேல்ஸ் 42 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் பாகிஸ்தானின் சார்பாக இமாட் வசிம் 3 இலக்குகளை வீழ்த்தினார்.
பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் 29 பந்துகள் மீதமிருக்க 2 இலக்குகள் இழப்புக்கு இலக்கை அடைந்து வெற்றிபெற்றது. மலிக் ஆட்டமிழக்காது 43 ஓட்டங்களைத் குவித்தார். ஆட்டநாயகனாக்வும், தொடராட்ட நாயகனாகவும் இமாட் வசிம் தெரிவானார். (ம)



# ஆஸிக்கு எதிரான தொடரிலிருந்து காயத்தால் விலகினார் வில்லியர்ஸ்

தென்னாபிரிக்க அணியின் தலைவரும் நட்சத்திர வீரருமான வில்லியர்ஸ் காயம் காரணமாக ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரிலிருந்து முழுவதுமாக விலகினார்.
கடந்த சில மாதங்களுக்கு முன்னர், வில்லியர்ஸின் முழங்கைப் பகுதியில் காயம் ஏற்பட்டது. இதனால் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான தொடரிலிருந்து வில்லியர்ஸ் விலகியிருந்தார். காயம் குணமடைந்த நிலையில் நாளை ஆரம்பமாகவுள்ள ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் அவர் கலந்துகொள்ளுவார் என்று தெரிவிக்கப்பட்டது. இதற்கு ஏற்றால் போல் "ஆஸ்திரேலியாவைக் கண்டு அச்சமடையவில்லை" என்று வில்லியர்ஸ் அறிக்கையும் விட்டிருந்தார்.
ஆனால் நேற்று நடைபெற்ற உடல்தகுதிகாண் பரீட்சையில் காயம் ஏற்பட்ட பகுதியில், வலி தொடர்ந்தும் இருப்பது உணரப்பட்டதையடுத்து ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள், டெஸ்ட் தொடர்களிலிருந்து அவர் முழுமையாக விலகினார். அவருக்கு இன்னும் சில தினங்களில் அறுவைச்சிகிச்சை செய்யப்படவுள்ளது. இதனால் 8 முதல் 10 மாதங்கள் வரை ஓய்விலிருக்க வேண்டும் என்று மருத்துவ குழுவால் அறிவுறுத்தப்பட்டார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு கால்பந்தாட்ட அணி முதல் சுற்றுடன் வெளியே

யாழ்ப்பாணம், செப். 29
தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் கிழக்கு மாகாண அணி முதல் சுற்றுடன் தொடரிலிருந்து வெளியேறியது. அரியாலை கால்பந்தாட்ட மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கிழக்கு மாகாண அணியை எதிர்த்து மத்திய மாகாண அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா இரு கோல்களைப் பதிவு செய்தமையால், சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 5:4 என்ற கோல் கணக்கில் மத்திய மாகாண அணி வெற்றிபெற்றதையடுத்து கிழக்கு மாகாண அணி தொடரிலிருந்து வெளியேறியது. (ம-23)



## தேசியமட்ட தடகளத் தொடர் யாழ். துரையப்பாவில் இன்று

யாழ்ப்பாணம், செப். 29
தேசியமட்ட தடகளத் தொடர் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது. இன்று ஆரம்பமாகும் இந்தத் தொடர் எதிர்வரும் 2ஆம் திகதி வரை நடைபெறும். ஆரம்பநாள் நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக சபாநாயகர் கருஜெயசூரியவும், இறுதிநாள் நிழ்வுக்கு தலைமை விருந்தினராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கலந்துகொள்ளுகின்றனர். (ம-23-32)




# தேசிய கூடைப்பந்தாட்டம்; வடக்கு சிறந்த தொடக்கம்

யாழ்ப்பாணம், செப். 29
தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் பிரிவு ஆட்டமொன்றில் ஊவா மாகாண அணியை வீழ்த்தியது வடக்கு மாகாண அணி.
யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், வடக்கு மாகாண அணியை எதிர்த்து ஊவா மாகாண அணி மோதியது. நான்கு கால்பாதிகளைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரு கால் பாதிகளையும் முறையே 24:12, 17:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய, வடக்கு மாகாண அணி முதல் பாதியின் முடிவில் 41:25 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. மூன்றாவது கால் பாதியை 10:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் இழந்தது. ஆனால், நான்காவது கால் பாதியை 13:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. இதனால் முடிவில் 64:48 என்ற புள்ளிகள் அடிப்படையில் வடக்கு மாகாண அணி வெற்றிபெற்று ஊவா மாகாண அணியை தொடரிலிருந்து வெளியேற்றியது. (ம-23)

# அண்ணாவின் தொடரில் சம்பியனானது கலைமதி

கரணவாய், செப். 29
கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் புத்தூர் கலைமதி வி.கழகம் சம்பியனானது.
அண்ணா வி.கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகமும் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. 5 செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 28:26 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது கலைமதி. இரண்டாவது செற்றை 25:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி, பதிலடி கொடுத்தது கலைமதி. மூன்றாவது செற் 27:25 என்ற புள்ளிகள் அடிப்படையில் கலைமதியினதும், நான்காவது செற் 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வளர்மதியினதும் வசமாகின. இறுதி செற்றைக் கைப்பற்றும் அணியே சம்பியன் என்ற நிலையில், அந்த செற்றை 15:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய கலைமதி அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-108-23)

# அன்ரனிஸ், மேரிஸ் முன்னேற்றம் கண்டன

கரணவாய், செப். 29
குறிஞ்சிக்குமரன் வி.கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில், மன்னார் அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் இரணைமாதா நகர் சென். மேரிஸ் விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டன.
வடமாகாண ரீதியாக நடத்தப்பட்டு வரும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் குறிஞ்சிக்குமரன் வி.கழக மைதானத்திலேயே நடைபெற்று வருகின்றன.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில், இரணைமாதா நகர் சென். மேரிஸ் விளையாட்டுக் கழகமும், அராலி பாரதி விளை யாட்டுக் கழகமும் மோதின. இந்த ஆட்டத்தில் 1:0 என்ற கோல் கணக்கில் இரணைமாதா நகர் சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் பலப்பரீட்சை நடத்தியது.
இந்த ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ம-108)

## இன்றைய மோதல்கள்

கரணவாய், செப். 29
வலிகாமம் கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன், குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் மன்னார் விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கூவில் சிவானந்தா விளையாட்டுக் கழகமும், இரவு 8 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் மன்னார் ஜோசவ்வாஸ் யுனைற்ரெட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இரணைமாதா நகர் சென். மேரிஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

# எவரெஸ்ட் வி.கழகத் தொடரில் பாடும்மீன் அணி சம்பியனானது

கரணவாய், செப். 29
புத்தூர் எவறெட்ஸ்ட் வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், குருநகர் பாடும்மீன் அணி சம்பியனானது.
புத்தூர் எவரெஸ்ட் வி.கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் குறித்த கழகத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து குருநகர் பாடுமீன் அணி பலப்பரீட்சை நடத்தியது. முதல் பாதியில் கோல்கள் எவையும் பதிவாகவில்லை. இரண்டாம் பாதியிலும் அதே நிலைதான்.
சமநிலைத் தவிர்ப்பு உதைகளின் மூலம் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட, முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது குருநகர் பாடும்மீன் அணி. ஆட்டநாயகனாக பாடும்மீன் அணியின் பிராங்கோ தெரிவானார். (ம-108-23)



# ஹென்றிஸ் - மேரிஸ் ஸ்ரெலா காலிறுதியில் இன்று மோதல்

யாழ்ப்பாணம், செப். 29
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் கொத்மலை சொக்ஸ் கிண்ணத்துக்காக தேசியமட்டத்தில் முன்னெடுக்கும் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டமொன்றில், இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியும், மேரிஸ் ஸ்ரெலா கல்லூரி அணியும் காலிறுதியில் இன்று பலப்பரீட்சை நடத்தவுள்ளன. கொழும்பு சிற்றி லீக் விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறும். (ம-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதல் சுற்றுடன் வடக்கு வெளியேறியது சொந்த மண்ணில் சுருண்ட கதை



யாழ்ப்பாணம், செப். 29

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் வடக்கு மாகாண அணி முதல் சுற்றில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறியது.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் வடக்கு மாகாண அணியை எதிர்த்து வடமேல் மாகாண அணி மோதியது. ஆரம்பம் வடக்குக்கு சாதகமாகவே அமைந்தது. 25ஆவது நிமிடத்தில் பெற்ற கோலின் மூலம் முதல் பாதியின் முடிவில் வடக்கு மாகாண அணி 1:0 என்று முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியின் 27 ஆவது நிமிடத்தில் வடமேல் மாகாண அணி பதிலடி கொடுத்தது. நிமிடங்கள் உருண்டோட சமநிலையை நோக்கி ஆட்டம் விரைந்து கொண்டிருந்தது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில், இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றமையால், சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் வடமேல் மாகாண அணி வெற்றிபெற்று முன்னேற்றம் கண்ட அதே நேரம், சொந்த மண்ணில் தொடரை இழந்து வெளியேறியது வடக்கு.

(ம-23)

# சங்கா, மகேல இணை மீண்டும் இணைகிறது




இலங்கை அணியின் நட்சத் திரப் துடுப்பாட்டக் கூட்டணியாக கருதப்படும் சங்கா- மகேல கூட்டணி மீண்டும் இணைந்து விளையாடவுள்ளது.

பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடரிலேயே சங்கா- மகேல கூட்டணி இணையவுள்ளது. டாக்கா டைனமிட்ஸ் அணியே சங்கா- மகேல இருவரையும் ஒப்பந்தம் செய்துள்ளது.

பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடருக்காக 31 வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 7 வீரர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள். திசர பெரேரா, நுவன் குலசேகரா, டில்ஷான், டிசில்வா, தசுன் சானக ஆகியோரே அவ்வாறு ஒப்பந்தம் செய்யப்பட்ட ஏனைய வீரர்களாவர்.

(ம)

அழகியல் டிப்ளோமா
BCBL @KU
பிரிட்டிஷ் கொலேஜிடமிருந்து
அழையுங்கள் : 021-3208342
Diploma in Beauty Culture
மணப்பெண் அலங்காரம், பல்வகையான விசேட முக அலங்காரம், சாறி அலங்காரம், நகம் மற்றும் தோல் பராமரிப்பு, மெகந்தி, விசேட சிகை அலங்கார முறைகள் என சுமார் 25 வகையான அலங்காரங்களையும் அவற்றில் பல உட்பிரிவுகளையும் உள்ளடக்கிய டிப்ளோமா பயிற்சி நெறி
British College of Business and Languages
No 788/4, செம்மணி வீதி, நல்லூர் (கிட்டுப்பூங்கா எதிரில்)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L, A/L எழுதியோர், இளைஞர்கள், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் 01.10.2016 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.ப 01.00-03.00
4. மாலை 03.00-05.00
பயிற்சிகள் யாவும் திரு. சாம்சன் அவர்களினால் மட்டுமே வழங்கப்படும்
அனைவரும் 01.10.2016 அன்று ஆரம்ப வகுப்பிற்கு சமூகமளிக்கமுடியும்.
SAAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.